# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 069 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 20, செவ்வாய்க்கிழமை 03.02.2015


வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## யாழில் அசிட் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப்.3
யாழ்ப்பாணம், நல்லூரில் குடும்பஸ்தர் ஒருவர் மீது நேற்று அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் காயமடைந்த அவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

பக்.25

## புலிகளின் பணம் எங்கே? ரணில் துருவுகின்றார்

விடுதலைப் புலிகளின் பெருந்தொகைப் பணத்துக்கு என்ன நடந்தது என்பதை அறிய அரசு விரும்புகின்றது. ஊழல் விசாரணைகளின் ஒரு பகுதியாக அது நடைபெறும். பெருந்தொகைப் பணம் மீட்கப்பட்டது. அது மஹிந்த அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அவற்றுக்கு என்ன நடந்தது? இது ஒரு பெரிய விசாரணையாக அமையும். – இவ்வாறு கூறினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பக்.21

## இலங்கைக்கு உதவ காத்திருக்கிறது அமெ.

### நிஷா பிஸ்வால் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.3
இலங்கையில் ஜனநாயகத்தை மிளிரச் செய்வதற்கு அமெரிக்கா உதவத் தயாராக இருக்கின்றது என்று இலங்கை வந்துள்ள அந்நாட்டு உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் கூறியுள்ளார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
இருநாள் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள நிஷா, நேற்றுக் காலை முதல் மாலை வரை பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசினார்.

பக்.25

## கொன்றுவிட்டார்களா எம்து பிள்ளைகளை?



ஓலமிட்டமுதனர் காணாமற்போனோரின் உறவுகள்.

பக்.27

# அமெரிக்கா பறக்கிறார் மங்கள

## அந்நாட்டு இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடன் பேச்சு நடத்துவார்

கொழும்பு, பெப்ரவரி 3
அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியைச் சந்தித்துப் பேசுவதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் 12 ஆம் திகதி வொஷிங்டனுக்குப் பறக்கவுள்ளார். அந்நாட்டு உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வாலுடனான சந்திப்பில் விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமையவே அவர் அங்கு பயணமாகின்றார்.
இரண்டு நாள் பயணமாக அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் கொழும்புக்கு வந்துள்ளார். இவர் நேற்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பக்.25

## ஜப்பான் தூதுவர் மைத்திரி பேச்சு



இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபுஹிந்டோ ஹோபு இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்தச் சந்திப்பு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்துள்ளது. (ந)

## ஜனவரியில் 558 பேருக்கு டெங்கு!

பக்கம் 26

## கோத்தா கையகப்படுத்திய காணிகள் மீளளிக்கப்படும்

### வடக்கு பாதுகாப்பு வலயத்தில் கோல்ப் திடலா? ஏற்றுக்கொள்ளவே முடியாது என்கிறார் சம்பிக்க



கொழும்பு, பெப். 3
"வடக்கு மாகாணத்தின் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் படையினர் கோல்ப் விளையாட்டுத் திடல் அமைப்பதென்றால் அது பிழையான விடயமாகும். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தக் காணிகள் பொதுமக்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். – இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
"வடக்கில் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு சில இடங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவை தொடர்ந்தும் அவ்வாறே கணிக்கப்படும். ஆனால் கடந்த ஆட்சியில் பாதுகாப்பு செயலாளராகக் கடமையாற்றிய கோத்தபாய ராஜபக்ஷ தன்னிச்சையாகவும் தனது சொந்த வியாபார நோக்கத்திற்காகவும் தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தியுள்ளார். அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட

பக்.25

## கைதானார் திஸ்ஸ!



கொழும்பு, பெப். 3
ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க கொழும்பு

பக்.25

## வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை மேம்படுத்தப்படும்

- வடக்கு பிரதம செயலர்

வடக்குமக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும், இயல்பு வாழ்க்கை திரும்பவும் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு வட மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராகப் பதவியேற்ற அ.பத்திநாதன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

பக்.26

## இன்றைய முக்கிய தேவை அதிரடி நடவடிக்கைகளே!

பக்கம் 16

## வடக்குக்கு முறையான ஆளுநர் இப்போதே நியமிக்கப்பட்டுள்ளார்

### அவருடன் இணைந்து பணியாற்றுவோம் என வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.3
வடக்கு மாகாண ஆளுநர் நியமனம் தற்போதே முறையாக இடம் பெற்றுள்ளது. புதிய ஆளுநருடன் நாம் இணைந்து பணியாற்றுவோம்.– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

பக்.25



## ஓமந்தை சாவடியில் கட்டுப்பாடுகள் தளர்வு

யாழ்ப்பாணம், பெப்.3
ஓமந்தை சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
சோதனைச்சாவடியூடாகப் பயணிக்கும் வாகனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை

பக்.25

## பொருள்களின் விலையைக் குறைக்க மறுக்கின்றன உற்பத்தி நிறுவனங்கள்

### அரசு கவனம் எடுக்க வேண்டும் என்கிறது யாழ்.வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப்.3
அரசால் விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆ னால் உற்பத்தி நிறுவனங்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் புதிய விலைக்கு பொருள்களை வழங்க மறுக்கின்றனர். குறிப்பாக சீமெந்து, எரிவாயு என்பவற்றி

பக்.25

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செய்திகள்

# திஸ்ஸ கைதால் சபையில் சர்ச்சை

### நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்ய சபாநாயகரின் அனுமதி பெற வேண்டுமா?

கொழும்பு, பெப்.03

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்யும்போது சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டுமா என்பது தொடர்பில் ஆளும், எதிர்த்தரப்பினர் தர்க்கத்தில் ஈடுபட்டதால் நேற்று சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

இதையடுத்து, மேற்படி விடயம் தொடர்பில் முன்னாள் சபாநாயகர்கள் செயற்பட்ட விதம் குறித்து ஆராய்ந்து தமது முடிவை அறிவிப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸ் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின்போதே இந்த சர்ச்சை ஏற்பட்டது.

முன்னதாக விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா,

"நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால், இது குறித்து உங்களுக்கு (சபாநாயகருக்கு) அறிவித்தார்களா என்று தெரியாது. சாதாரணமாக நாட்டின் சம்பிரதாயத்துக்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்யும்போது சபாநாயகருக்கு அறிவித்தே கைது செய்துள்ளனர்" – என்றார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன, "சபாநாயகருக்கு அறிவிக்கத் தேவையில்லை" – என்றார்.

பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய பிரதியமைச்சர் பாலித ரங்கே பண்டார, "குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள ஒருவரைக் கைதுசெய்யும்போது சபாநாயகரின் அனுமதி பெறவேண்டும் என்று எங்கு கூறப்பட்டுள்ளது?" – என்றார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபாலடிசில்வா,"நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்யும்போது சபாநாயகருக்கு அறிவிக்கவேண்டும். இன்று நல்லாட்சியைப் பற்றி பேசுகிறீர்கள். அதை சொல்லில் காட்டாமல் செயலில் காட்டுங்கள்" – என்றார்.

இதன்பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி, பிரதியமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் கருத்துக்குப் பதிலளித்த வாசுதேவ நாணயக்கார "1971ஆம் ஆண்டு சபாநாயகருக்குஅறிவிக்காமலேயே என்னை கைதுசெய்தனர். இது தொடர்பில் டபிள்யூ. தஹநாயக்க அப்போது பிரச் சினை எழுப்பினார். அப்போதைய சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்யும் போது அது தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும் என்று கூறினார். அது அறிக்கையாகவே உள்ளது" – என்றார்.

பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன, "சபாநாயகருக்கு அறிவிக்கத் தேவையில்லை. 1994ஆம் ஆண்டு ஹன்சாட்டை எடுத்துப் பாருங்கள்" – என்றார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்க, "நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இது மிகவும் முக்கியமான விடயம். நீங்கள் (சபாநாயகர்) முடிவை அறிவிக்கவேண்டும். அதுதான் எதிர்காலத்துக்கு நல்லது. அதனால் இது தொடர்பில் ஆராய்ந்து விளக்கமளியுங்கள்" – என்றார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, "இது விடயம் தொடர்பில் முன்பிருந்த சபாநாயகர்கள் கடைப்பிடித்த நடைமுறைகளை ஆராய்ந்ததன் பின்னர் தெளிவானதொரு உபதேசத்தை வழங்குகிறேன்" – என்றார். (த–சி)

# தனியார் பஸ்களில் பழைய கட்டணம்

### பயணிகள் தரப்பில் விசனம்

கொழும்பு.ஜன.3

பஸ் கட்டணக் குறைப்பு கடந்த முதலாம் திகதியில் இருந்து அறிவிக்கப்பட்ட போதும் தனியார் பஸ்கள் சிலவற்றில் இன்னும் பழைய கட்டணங்களே அறவிடப்படுவதாகப் பயணிகள் உதயனுக்குத் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றில் குறைக்கப்பட்ட பஸ்கட்டணத்தின் விலைப் பட்டியல் ஒட்டப்பட்டுள்ளபோதும் குறித்த பஸ்ஸின் நடத்துநர் பழைய கட்டணங்களிலேயே பயணிகளிடம் இருந்து பணத்தைப் பெற்றுள்ளார். இது தொடர்பில் பயணிகள் நடத்துனரிடம் கேட்டபோது கட்டணக் குறைப்புத் தொடர்பில் தமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

எனினும் இது தொடர்பில் தனியார் பஸ் சங்கத்தின் காரியாலயத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாட்டைவழங்கியபோது, நேரடியாக வருகை தந்து எழுத்து மூலமாக முறைப்பாட்டை வழங்கினால் தாம் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகச் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

பஸ்கட்டணக் குறைப்பு விவரம் சகல தனியார் பஸ்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் சங்கம் மேலும் தெரிவித்தது.

இது தொடர்பில் தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு ஏற்படுத்தியபோதும் பதில் பெற முடியவில்லை.

இதேவேளை, குறைக்கப்பட்ட பஸ் கட்டணங்களை அறவிடாத சாரதிகள் மற்றும் நடத்துநர்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை நாடளவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் எச்.டப்ளியூ. விபுலசேன தெரிவித்துள்ளார்.

வரவு–செலவுத் திட்டத்தின் படி டீசல் விலைக் குறைப்பு செய்யப்பட்டதை அடுத்து தனியார் மற்றும்அரசபஸ்களின்கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்தமுதலாம்திகதியில்இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்ட கட்டணங்கள் அறவிடப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் புதிய பஸ் கட்டணம் அறவிடப்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக நாடளாவிய ரீதியில் மாகாண போக்குவரத்து அமைச்சின் ஒத்துழைப்புடன் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் உரிய கட்டணங்களை அறவிடாத சாரதிகள் மற்றும்நடத்துநர்களைக்கண்காணிக்கும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை 011 259 5555 என்னும் தொலைபேசி இலக்கம் ஊடாக பொதுமக்கள் முறைப்பாடுகளையும் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (த–14)

# உயர்கல்வியை முன்னேற்றுவதற்கு கல்வியியலாளரிடமிருந்து ஆலோசனை

### எதிர்பார்க்கிறார் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

யாழ்ப்பாணம், பெப். 3

உயர் கல்விக்கான ஒரு நோக்கம் இல்லாதது கவலை அளிக்கின்றது. இந்த நோக்கத்தை அடைவதற்கு, உயர்கல்வியை முன்னேற்றுவதற்கான ஆதரவு, ஆலோசனைகள் கல்வியியலாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

எனவே கல்வியியலாளர்கள் உயர் கல்வி தொடர்பில் ஏதேனும் ஒரு மொழியில் அறிக்கைகள் சமர்ப்பிக்கலாம். சுமார் 60000 சொற்களுக்கு மேற்படாது ஆலோசனை அறிக்கையைச் சமர்ப்பியுங்கள் என்று உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளதாவது:–

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்வியின் சீர்திருத்தத்துக்குப் பெரும் வலு கொடுக்கப்பட்டுள்ளது.இதில் முக்கியமானது உயர் கல்வியில் வாய்ப்புக்களை நீடித்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்குப் பொருத்தமான கல்வியை வழங்கல். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொடுக்கப்பட்ட உயர்கல்விக்கான பகுதியில் தேர்தல் விஞ்ஞாபனத்தின் சாராம்சமாக,

ஜீ.சீ.ஈ. சாதாரணம், உயர்தரத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் மூன்றாம் நிலைக் கல்விக்கு மாணவர்களை நேரடியாகச் சேர்த்தலுக்கு ஒரு முறைமை செயற்படுத்தப்படும்.அதன் மூலம் நாட்டுக்கான தொழில்நுட்ப, தொழிற்கல்வி விரிவுபடுத்தப்பட்டுத்திட்டமிடப்படும்.பல்கலைக்கழக வாய்ப்புகள் குறைவான இளைஞர்கள், சம்பந்தப்பட்ட பாடங்களில் தொழில்நுட்பக் கல்வியைத் தொடர ஊக்குவிக்கப்படுவர். தொழில்நுட்பக் கல்லூரிகளுக்குச் செல்வதற்குப் பல வகையான கடன் வழங்கும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதோடு உள்நாட்டு வெளி நாட்டு வேலை வாய்ப்புக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சிப் பெற்ற இளைஞர்கள் உருவாக்கப்படுவர்.

புதுமையான பொருளாதார முறைக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்க உயர் கல்வி மறுசீரமைக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்களைப் பகுதி நேர வேலையில் ஈடுபடுவதற்காகச் சுதந்திரம் வழங்கப்படும். பல்கலைக்கழகத்துக்கு மாணவர் அனுமதி இரு மடங்காக்கப்படும். பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி இழந்த அடுத்த சிறந்த மாணவர் குழுவுக்குத் தவணை அடிப்படையில் கடன் திட்டத்தின் கீழ் கட்டணம் வசூலித்தல் அடிப்படையில் தேசிய பல்கலைக்கழகத்துக்குச் சேர்த்து கொள்ளப்படுவர். நீண்ட காலச் சலுகைக் கடன் திட்டத்தின்கீழ்உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் தங்கள் விருப்பத்தைப் பொறுத்து உயர் டிப்ளோமா மற்றும்பட்டக்கல்வி கற்கலாம்.

நான் சட்டம் பற்றி யோசிக்கின்றேன். அதில் பரந்த முறையில் உயர் கல்வியை கிடைக்கச் செய்தல், தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுப்பதை உறுதிப்படுத்துதல், தேசிய மட்டதில் தற்போது தெரிவு செய்யப்படும் வீதம் குறையாது, திறமையான முறையில் உயர்கல்வி நிலையங்களுக்கு இலவச உயர்கல்விய்ய குறிப்பிட்ட வீதத்தில் மாணவர்களுக்கு வழங்குதல், நிதிப் பற்றாக்குறை காரணமாக உயர் கல்வி வாய்ப்பை மாணவர்கள் இழக்காதிருக்க உயர் கல்வி நிலையங்களுக்குக் கடன் உதவித் திட்டம், புலமைப் பரிசில்களின் அணுகுமுறை மூலம் உயர்கல்விக்கு தகுதி வாய்ந்த எல்லா மாணவர்களுக்கும் உயர் கல்வியை உறுதிப்படுத்தல், தொழில் பயிற்சி உட்பட எல்லா மூன்றாம் நிலையங்களிலும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமாவுக்கான நுழைவுத் தரத்தை மேம்படுத்தல், சகல மாவட்டங்களிலும் மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களை உருவாக்கிப் பகுதி நேரப்பட்டப்படிப்புவாய்ப்புக்களை அதிகரித்தல், உயர் கல்வி நிலையங்களில் ஆய்வுகளை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்துக்கு பங்களிப்பதுடன் சுற்றுச் சூழல் பாதுகாப்பை அதிகரித்தல் எனும் நோக்கத்துக்காக விவாதத்துக்காக ஆலோசிக்கின்றேன் – என்றுஅவர் மேலும்தெரிவித்துள்ளார். (த–4)



# கிரிக்கெட் கொண்டாட்டம்




## டோனியைப் பின்தொடருங்கள் சொல்லுகின்றார் பிளமிங்

உலகக் கிண்ணத் தொடரில் சகல அணித் தலைவர்களும் டோனியை போல் செயல்பட வேண்டும். இவ்வாறு நியூஸிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் ஸ்டீபன் பிளமிங் கூறியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணித்தலைவர் டோனியின் செயற்பாடு சிறப்பாக இருந்தது. இறுதி ஆட்டத்தில் அதிரடியில் மிரட்டிய டோனி இந்திய அணிக்கு கிண்ணம் வென்று கொடுத்தார்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் டோனியின் செயல்பாடு எப்படி இருந்ததோ அதை அப்படியே மற்ற அணித் தலைவர்களும் பின்பற்ற வேண்டும்.

டோனியிடம் தன்னம்பிக்கை இருக்கின்றது. இதனால் மற்ற வீரர்களுக்கும் அவரால் உற்சாகம் அளிக்க முடிந்தது. இந்த உலகக் கிண்ண தொடரில் கடினமான தருணங்கள் வரலாம். ஆனால் வெற்றி பெற வேண்டும் என்பதே முக்கியமாக கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (5)

## இலங்கைக்கு கிடைத்தது நான்காவது இடம்

ஐ.சி.சியின் ஒரு நாள் ஆட்டத்துக்கான தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது. இதில் இலங்கை அணி நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்திய அணி இரண்டாம் இடத்திலும், ஆஸ்திரேலிய அணி முதலாம் இடத்திலும் உள்ளது. துடுப்பாட்டத்தில் டீ வில்லியர்ஸும் பந்து வீச்சில் சயிட் அஜ்மலும் முதலிடத்தில் உள்ளனர்.

**அணி நிலவரம்**

ஆஸ்திரேலியா (120 புள்ளி), இந்தியா (114 புள்ளி), தென்னாபிரிக்கா (113 புள்ளி), இலங்கை (108 புள்ளி), இங்கிலாந்து (104 புள்ளி), நியூஸிலாந்து (102 புள்ளி), பாகிஸ்தான் (96 புள்ளி)

**துடுப்பாட்டம்**


டீ வில்லியர்ஸ் (தெ.ஆபிரிக்கா), அம்லா (தெ.ஆபிரிக்கா), ஹோக்லி (இந்தியா), சங்கக்கார (இலங்கை), டில்ஷான் (இலங்கை), வில்லியம்ஸன் (நியூஸிலாந்து), தவான் (இந்தியா), டோனி (இந்தியா)

**பந்து வீச்சு**

சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்), சுனில் நரைன் (மே.தீவுகள்), ஸ்ரெய்ன் (தெ.ஆபிரிக்கா), அண்டர்சன் (இங்கிலாந்து), ஜோன்சன் (ஆஸ்திரேலியா), சகிப் அல்ஹசன் (பங்களாதேஷ்), ஸ்ராக் (ஆஸ்திரேலியா), மொஹமட் ஹபீஸ் (பாகிஸ்தான்) (5)



## இன்னொரு பரிணாமம்



அமிதாப்பச்சன் மற்றும் தனுஷ் நடித்து விரைவில் வெளியாகவுள்ள படத்தின் மூலம், பொலிவுட் சூப்பர் - ஸ்டார் அமிதாப்பச்சன் பாடகராக அவதாரம் எடுத்துள்ளார். தற்போது கிரிக்கெட் வர்ணனையாளராக மாறி புதிய அவதாரம் எடுக்கவுள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில், பாகிஸ்தானுடன் இந்தியா மோதவுள்ளது. பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த ஆட்டம் பகலிரவாக நடைபெற உள்ளது. இந்த ஆட்டத்தை அமிதாப்பச்சன் கிரிக்கெட் வர்ணனை செய்கிறார். சுவாரஸ்யமான இந்த நிகழ்ச்சியை 'ஸ்டார் ஸ்போர்ட்ஸ்' ஏற்பாடு செய்துள்ளது. இந்த வர்ணனையில் கபில்தேவ், சொயைப் அக்தர், ஹர்ஷா போக்லே ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (5)

## கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது

'என்னுடைய மனதிற்கு முதலில் வரும் பெயர் சச்சின் டெண்டுல்கர். ஒரு வார்த்தையில் கூற வேண்டுமென்றால் அவர் ஒரு சரித்திரம். சச்சின் எப்போதுமே நான் பார்க்க விரும்பும் ஒரு துடுப்பாட்ட வீரர். நான் பணம் கொடுத்து ஒருவர் ஆட்டத்தை பார்க்க விரும்புகிறேன் என்றால் அது சச்சினுடைய ஆட்டத்தைத் தான்' என்று புகழ்கின்றார்.

ஒரு நாள் ஆட்டங்களின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலில் சச்சின் டெண்டுல்காருக்கு முதலிடம் வழங்கியுள்ளார் விவிலியன் ரிச்சர்ட்ஸ். மேற்கிந்தியத்தீவுகளின் அந்தக் காலத்து அதிரடி துடுப்பாட்ட வீரர் ரிச்சர்ட்ஸ். இவர் சகல காலத்துக்கும் ஏற்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டுள்ளார். இதில் இலங்கை அணி வீரர்கள் எவரையும் இணைத்துக் கொள்ளவில்லை.

இந்தப் பட்டியலில் சச்சினுக்கு முதலிடம் கொடுத்துள்ளார். முதலிடம் கொடுத்ததற்கு விளக்கமும் கொடுத்துள்ளார்.

'மற்ற கிரிக்கெட் வீரர்களைப் போல் இவர் பெரிய உருவம் படைத்தவர் அல்ல. மூர்த்தி சிறிதென்றாலும் சச்சினின் கீர்த்தி பெரிது' என்று குறிப்பிடும் ரிச்சர்ட்ஸ், சச்சினுக்கு இணையாகவே லாராவை யும் கருதுகின்றேன் என்றும் குறிப்பிடுகின்றார். இந்தப் பட்டியலில் விராட் ஹோக்லியை இணைத்துள்ளேன். இது பலருக்கு ஆச்சரியத்தை தூண்டும் என்று குறிப்பிடும் அவர், இவரது பெயரைச் சேர்த்தது பலரையும் ஆச்சரியப்படுத்தலாம். ஏனெனில் அவர் இளம் வீரர் இன்னும் நிறைய சாதிக்க வேண்டியுள்ளது.

ஆனால், எனது கண்ணோட்டத்தில் இவர் ஏற்கனவே சாதனையாளர்தான். அவர் மேன்மேலும் சிறப்பு சேர்க்கக் கூடியவர். நிறைய சாதனைகள் இவரது பெயருக்குப் பின்னால் காத்திருக்கிறது, என்று குறிப்பிட்டுள்ளார். (5)

## கடினம்



நடப்பு உலகக் கிண்ண தொடரின் காலிறுதிக்குள் மேற்கிந்திய தீவுகள் அணி நுழைவது கடினம். இவ்வாறு தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

11 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். உலகக் கிண்ண தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் முன்னணி வீரர்கள் இல்லாமல் இருப்பதால் அந்த நாட்டு ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். கிறிஸ் கெய்ல், சாமுவேல் ஸுக்கு அதிக நெருக்கடி காணப்படும். புதுமுக அணிகள் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு சவாலாக விளங்கும்.

இதனால் காலிறுதிக்கு கூட நுழைவது கடினமான விடயம் என ஸ்மித் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

## மத்திய வரிசையில் அசமந்தம் இனியும் வேண்டாம் அறிவுறுத்துகின்றார் முன்னாள் அணித் தலைவர்



இலங்கை அணி துடுப்பாட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மத்திய வரிசை நியூஸிலாந்து தொடரில் சோபிக்கவே இல்லை. மத்திய வரிசையின் அசமந்தமான போக்கை அகற்ற வேண்டும். கூட்டு அணியாக கிண்ணம் வெல்லும் வாய்ப்பைக் கொண்ட இலங்கை இந்த விடயத்தில் கரிசனை எடுக்க வேண்டும். இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் திசர தெரிவித்துள்ளார்.

டில்ஷானுடன் – திரிமன்னேயே பொருத்தமான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். இந்த ஜோடியின் ஆட்டம் சிறப்பானது. எனவே உலகக் கிண்ணத் தொடரில் டில்ஷானுடன் – திரிமன்னேயை களமிறக்க வேண்டும். பந்து வீச்சில் மலிங்க வேண்டும். மலிங்க, ஹேரத் இருவரும் முக்கிய தூண்கள்.

மத்திய வரிசையின் துடுப்பாட்டம் சோரம் போய்விட்டது. சாதிக்கின்றார்கள் இல்லை. அசமந்தமான துடுப்பாட்டத்தினால்தான், நியூஸிலாந்தில் திணறவேண்டிய நிலைமை தோன்றியது. எனவே மத்திய வரிசையில் மத்தியூஸ் முதல் திசர வரையில் பொறுப்புணர்ந்து ஆட வேண்டும். களத்தடுப்பில் இலங்கை போதிய சிரத்தை எடுக்க வேண்டும். நியூஸிலாந்து அணி வீரர்கள் ரக்பி வீரர்கள் போன்று பாய்ந்து பாய்ந்து களத்தடுப்பில் ஈடுபட்டார்கள். ஆனால் இலங்கை வீரர்கள் சோர்ந்து போனவர்கள் போல இருந்தார்கள். இலங்கை வீரர்களும் ரக்பி வீரர்கள் போன்று செயற்பட வேண்டும் – என்றார். (5)



அடித்து அசத்திய கிளைவ்லொயிட்



வேகத்தில் சாதித்த கில்மோர்




# களைகட்டுகின்றது திருவிழா

உலகக் கிண்ண கிரிக்கெட் காய்ச்சல் இப்போதே தொடங்கி விட்டது. நான்கு வருடங்களாக தவம் இருந்த ரசிகர்களுக்கு விருந்து படைக்கவுள்ளது உலகக் கிண்ண கிரிக்கெட். காதலர் தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தத் தொடர் தொடங்குகின்றது. இந்த முறை, இலங்கை அணி சங்கா – மஹேலவை கௌரவமாக வழியனுப்பி வைக்குமா?, இந்திய அணி கிண்ணத்தை தக்க வைக்குமா?, பிலிப் ஹியுஸ் சோகத்தை கடந்து ஆஸ்திரேலியா சாதிக்குமா?, தென்னாபிரிக்கா முதல் முறையாக கிண்ணத்தை வசப்படுத்துமா?, என்றவாறான பல்வேறு எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் உலகக் கிண்ணத் தொடரின் பின்னணி சுவாரஸ்யமானது.

1971ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் கிரிக்கெட் ஆட்டம் நடந்தது. இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகள் மோதிய டெஸ்ட் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது.

ஐந்தாவது நாள் ஆட்டத்தின் போது வானிலை சீரடைந்தது. உடனே ரசிகர்களை திருப்திப் படுத்த 40 பந்துப் பரி மாற்றங்கள் கொண்ட ஆட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு 8 பந்துகள் வீசப்பட்டன. இதுதான் முதன் முதலில் நடந்த சர்வதேச ஒருநாள் ஆட்டம். இதற்கு பின் ஒருநாள் போட்டி பிரபலமடைய, முக்கிய அணிகள் பங்கேற்கும் உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் 'ஐடியா' உதயமானது. முதலாவது உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் 1975 இல் நடந்தது. ஆரம்பத்தில் 60 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக அமையப் பெற்றது. அத்துடன் டெஸ்ட் உடையிலேயே வீரர்கள் விளையாடினர். பின்னர் போட்டியின் விறுவிறுப்பை அதிகரிக்க பந்துப் பரிமாற்றம் 50 ஆகக் குறைக்கப்பட்டது. வீரர்களுக்கு வண்ண உடை, பகலிரவு போட்டி, மூன்றாம் நடுவர், நேரடியாக ஒளிபரப்பு செய்யும் வசதி போன்ற புதுமைகள் புகுத்தப்பட்டன. இந்த முறை 11 ஆவது உலகக் கிண்ணத் தொடரை ஆஸ்திரேலியா, நியூசிலாந்து சேர்ந்து நடத் துகின்றன. மொத்தம் 45 நாள்களில் 49 ஆட்டங்கள் நடக்க உள்ளன.

## உலகக் கிண்ணத்தில் இதுவரை...

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | முடிவு இல்லை |
|---|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 76 | 55 | 19 | 1 | 1 |
| தென்னாபிரிக்கா | 47 | 30 | 15 | 2 | 0 |
| இங்கிலாந்து | 66 | 39 | 25 | 1 | 1 |
| மே.இ.தீவுகள் | 64 | 38 | 25 | 0 | 1 |
| இந்தியா | 67 | 39 | 26 | 1 | 1 |
| பாகிஸ்தான் | 64 | 36 | 26 | 0 | 2 |
| நியூசிலாந்து | 70 | 40 | 29 | 0 | 1 |
| இலங்கை | 66 | 31 | 32 | 1 | 2 |


## 1975 உலகக்கிண்ணம்

### அதிகூடிய ஓட்டங்கள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | கூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|
| ஜி.எம்.ரியுநெர் (நியூசிலாந்து) | 04 | 333 | 171 |
| டி.எல்.அமிஸ் (இங்கிலாந்து) | 04 | 243 | 137 |
| மயிட் கான் (பாகிஸ்தான்) | 03 | 209 | 84 |

### அதிகூடிய இலக்குகள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| ஜி.ஜே.கில்மோர் ([illegible]) | 02 | 11 | 6/14 |
| பி.டி.யூலின் (மே.இ.தீவுகள்) | 05 | 10 | 4/20 |
| கெ.டி.பொய்ஸ் (மே.இ.தீவுகள்) | 05 | 10 | 4/50 |



முதலாவது உலகக் கிண்ணத்துடன் மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் கிளைவ் லொயிட்.

# அது அந்தக் காலம்

## கரீபியன்களின் கலக்கல்

### ஆட்டம் ஆரம்பம்

கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்து. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரும் அங்கேயே ஆரம்பமாகியது. வெள்ளை உடை வீரர்கள். 60 பந்துப் பரிமாற்றங்கள். சிவப்பு நிறப் பந்துகள். 8 அணிகளுக்கு மாத்திரமே அழைப்பு. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, கிழக்கு ஆபிரிக்கா.

எட்டு அணிகளும் இரண்டு குழுக்களாகியது. 1975 ஆம் ஆண்டு ஜுன் 7 ஆம் திகதி முதலாவது போர். இங்கிலாந்து – இந்தியா மோதலுடன் உலகக் கிண்ணம் தொடங்கியது. இந்தியா முதல் ஆட்டத்திலேயே 202 ஓட்டங்களால் மண் கவ்வியது. ஆனாலும் இந்தியா அப்போது கத்துக்குட்டி அணி. பெரிதாக யாரும் கண்டுகொள்ளவில்லை.

இலங்கைக்கு முதல் ஆட்டம் மேற்கிந்தியத்தீவுகளுடன். ஜாம்பவான்களுடன் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகளுக்கு, இலங்கை தூசாகியது. 86 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை. பதிலுக்கு மேற்கிந்தியத்தீவுகள் 9 இலக்குகளால் இலவகமாக வெற்றி பெற்றது. உலகக் கிண்ணத் தொடக்கம் இலங்கைக்கும் தோல்வியே.

## சாதனைகள்

உலகக் கிண்ணத்தில் இதுவரை பதிவு செய்யப்பட்ட சாதனைகளை கொஞ்சம் இரை மீட்போம். இதில் பல சாதனைகள், இந்த உலகக் கிண்ணத்துடன் தகர்த்தெறியப்படலாம். பொறுத்திருங்கள் 11 நாள்கள்.

### அதிகூடிய ஓட்டம் (அணி)

| | | |
|---|---|---|
| இந்தியா | –413/5 | (பெர்மூடாவுக்கு எதிராக 2007 ஆம் ஆண்டு) |
| இலங்கை | –398/5 | (கென்யாவுக்கு எதிராக 1996 ஆம் ஆண்டு) |
| ஆஸ்திரேலியா | –377/6 | (தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2007ஆம் ஆண்டு) |

### மிகக் குறைந்த ஓட்டம் (அணி)

| | | |
|---|---|---|
| கனடா | –36 | (இலங்கைக்கு எதிராக 2003 ஆம் ஆண்டு) |
| கனடா | –45 | (இங்கிலாந்துக்கு எதிராக 1979ஆம் ஆண்டு) |
| நமிபியா | –45 | (ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 2003ஆம் ஆண்டு) |

### அதிகூடிய ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அணிகள்


- பெர்முடாவுக்கு எதிராக இந்தியா 257 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 2007இல் வெற்றி பெற்றது.
- நமீபியாவுக்கு எதிராக ஆஸ்திரேலியா 256 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 2003இல் வெற்றிபெற்றது.
- பெர்முடாவுக்கு எதிராக இலங்கை 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 2007இல் வெற்றி பெற்றது.

(தொடரும்)

### அரையிறுதி ஆட்டம்

முதல் தொடரில் இந்தியா, கிழக்கு ஆபிரிக்காவை மாத்திரம் வெற்றி கொண்டது. பாகிஸ்தான்– இலங்கையை மாத்திரம் வீழ்த்திக் கொண்டது. இலங்கை எல்லோருடமும் வாங்கிக் கட்டிக் கொண்டது. ஆசிய அணிகள் மூன்றும் முதல் சுற்றுடன் வெளியேறின. கூடவே ஆபிரிக்க அணியும்தான்.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலாவது அரையிறுதியில். மேற்கிந்தியத்தீவுகள், நியூஸிலாந்து இரண்டாவது அரையிறுதியில்.



இலங்கை– ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின்போது ரசிகர்கள் மைதானத்தினுள் போராட்டம்.

இங்கிலாந்தை 93 ஓட்டங்களுக்குள் சுருட்டியது ஆஸ்திரேலியா. பதிலுக்கு 6 இலக்குகளை பறிகொடுத்தே அந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

நியூஸிலாந்து. 158 ஓட்டங்களுடன் அடிபணிய மேற்கிந்தியத்தீவுகள் 5 இலக்குகள் வெற்றியால் இறுதிக்குள் நுழையும் வாய்ப்பை பெற்றது.

### இறுதி ஆட்டம்

இறுதி ஆட்டம் கறுப்பர்கள் – வெள்ளையர்கள் மோதலாகவே அமைந்து விட்டது. நாணயத்தைச் சுழற்றி வெற்றி கொண்டது ஆஸ்திரேலியா. மேற்கிந்தியத்தீவுகளை துடுப்பெடுத்தாட அழைத்தது. ஆரம்பம் என்னவோ, ஆஸ்திரேலியாவுக்கு சார்பாகவே நகர்ந்தது.

மூன்று இலக்குகளை வேகமாய் சாய்த்துவிட்டனர். நான்காவது இலக்குக்கு இணைந்து கொண்டனர், அணித் தலைவர் கிளைவ் லொயிட் – ரொஹான் கன்காய். பிரிக்க முடியாமல் திணறியது ஆஸ்திரேலியா. கிளைவ் லொயிட்டின் சதமும், கன்காயின் அரைச் சதமும் கை கொடுத்தது. இதனால் இறுதியில் 291 ஓட்டங்களை எட்டு இலக்குகளைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டனர். கிரே கில்மர் 5 இலக்குகளை கனகச்சிதமாக சாய்த்திருந்தார். பதிலுக்கு தொடங்கியது ஆஸ்திரேலியா.

ஆரம்பத்திலிருந்து இறுதி வரை சீராகவே நகரந்து கொண்டிருந்தது. ஆனாலும் ஓட்டம்போதவில்லை வெற்றிக்கு அணித் தலைவர் இயன் சப்பல் மட்டுந்தனது கணக்கில் அரைச் சதம் பெற்றுக் கொண்டார். இறுதியில் 17 ஓட்டங்களால் பறிபோனது உலகக் கிண்ணம். மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி வாகையுடன் உலகக் கிண்ணத் தொடரைத் தொடக்கினர்.

### சுருக் தகவல்

அன்றைய ஆட்டங்கள் டெஸ்ட் ஆட்டங்கள்தான். ஆனாலும் வீரர்கள் முடிந்தவரை அடித்தே ஆடுவார்கள். ஆனால், முதலாவது உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இந்தியா – இங்கிலாந்து மோதியது. இதில் இந்திய அணியின் கவாஸ்கர் ஆமை வேகத்தில் ஆடினார். இந்த ஆட்டத்தில் 174 பந்துகளில் 36 ஓட்டங்களை (1 பவுண்டரி) மட்டுமே எடுத்தார். இப்போது டெஸ்ட் ஆட்டத்தில் கூட இப்படி ஆட மாட்டார்கள்.


சேகரிக்கத் தயாராகுங்கள்!



11 நாள்களே

உதயன்

உதயன் உலகக் கிண்ண கொண்டாட்டம் உங்களுடன் எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை. நீங்கள் பார்த்த உலகக் கிண்ண ஆட்டம்– தொடர், நடப்பு உலகக் கிண்ண தொடர்பிலான விமர்சனம்:....

எழுதுங்கள்... எழுதுங்கள்.... எழுதிக் குவியுங்கள்...

தபால்: 'உலகக் கிண்ண வாசகர் கணை'
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லட்சம் லட்சமாய்...
பரிசுகளை தினந்தோறும் அள்ள
நீங்கள் தயாரா?

# ஜனரஞ்சகம்


முதல்ல பால் குடிச்சு உடம்ப தேத்துவோம்.
ஏன்னா பால்மா விலை குறைவு.
அப்புறமா யாராச்சும் பொண்ண உஷார் பண்ணி பஸ்லயோ, கார்லயோ கூட்டிட்டு போய் கல்யாணம் பண்ணலாம்.
கல்யாணத்துக்கான செலவும் கம்மி.
பெற்றோல் மற்றும் பஸ் விலையும் குறைவு.
அப்புறம் மூணே மாசத்துல கர்ப்பிணித் தாய்மாருக்கான கொடுப்பனவை வாங்குறது உங்க சாமர்த்தியம்.

எல்லாத்துக்கும் மேல பொண்டாட்டி தொல்லைனா மண்ணெண்ணெய் ஊத்தி கொளுத்திடலாம்.
மண்ணெண்ணெய் விலையும் குறைவு.
அதுக்கு மனசு வரலன்னா கேஸ் ஸ்டவ் வெடிச்ச மாதிரி செட் அப் பண்ணிடலாம்.
கேஸ் விலையும் குறைவு.

*Budget-Summary*




## உத்தம வில்லன்



மார்ச் மாதம் முதலாம் திகதி உத்தமவில்லன் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது. கமல் நடிப்பில் உருவாகியுள்ள உத்தமவில்லன் திரைப்படத்தின் 'டிரைலர்' அண்மையில் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.
அதைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி திரைப்படத்தின் பாடல்களை வெளியிடவுள்ளனர். இந்த நிகழ்ச்சியை சென்னையில் பிரம்மாண்டமாக நடத்த முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.
உத்தமவில்லன் திரைப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இந்தத் திரைப்படத்தில் கமலுடன் அண்ட்ரியா, பூஜாகுமார், நாசர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். மேலும் மறைந்த இயக்குநர் கே.பாலச்சந்தர் இந்த திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். பாடல் வெளியீட்டைத் தொடர்ந்து விரைவில் திரைப்படத்தை வெளியிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வீண் விபரீதம்


18 ஆயிரத்து 500 பவுண்ஸ்களை கட்டணமாக செலுத்திய விபரீத சம்பவமொன்று ஸ்கொட்லாந்தில் இடம்பெற்றுள்ளது.
மேற்படி பகுதியைச் சேர்ந்த கார்லி மார்க்கி என்ற 26 வயது பெண்ணொருவர், தனது சொந்த வாகனத் தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தாமல், பாதையில் நிறுத்தி வந்துள்ளார். பாதையில் வாகனத்தை நிறுத்தியதன் காரணமாக, அவருக்கு ஒவ்வொரு நாள்களுக்குமான கட்டணப்பட்டியல் அவரது கார் கண்ணாடியின் வெளிப்புறத்தில் ஒட்டப்பட்டிருந்தது.



இதனைப் பெரிதாக நினைக்காது அவர் தனதுசெயற்பாட்டைத் தொடர்ந்து வந்தார். ஒருவருடம்வாகனத் தரிப்பிடத்துக்கான கட்டணத்தைசெலுத்தாத காரணத்தால், மொத்தமாக 18 ஆயிரத்து500பவுண்ஸ்களைச் செலுத் [illegible] விட்டுள்ளனர்.
சட்ட ஒழுங்கு விதிகளை மீறியமை, அன்றாட கட்டணங்களைச் செலுத்தாமை போன்றவற்றுக்கே இக்கட்டணங்கள் அறவிடப்பட்டதாக உரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏழை, பணக்காரன், எல்லோருக்கும் ஒரே அளவில் பையைத் தைத்துக் கொடுக்கும் டெய்லர்தான் பெரிய பொருளாதார சமத்துவவாதி!!!

I like



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். முன்லைய உறவுகள் தேடி வருவார்கள். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.

**இடபம்:** இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகளைப் புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். உங்களுடைய பலம் எது பலவீனம் எது என்று நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது. உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். சகோதர வகையில் பிணக்குகள் வரும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

**சிங்கம்:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி:** தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். உடன் பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பிரபலங்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**துலாம்:** கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும்

**விருச்சிகம்:** முன்கோபத்தைக் குறையுங்கள். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

**தனுசு:** குடும்பத்தினருடன் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்:** உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள்.

**மீனம்:** தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

# தமிழர் பகுதிகளிலுள்ள இராணுவத்தை வெளியேற்ற கால அவகாசம் தேவை

## கருணாநிதியுடனான சந்திப்பின்பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இலங்கை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு

சென்னை, பெப்.3
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதான போர்க் குற்ற விசாரணை விரைவில் நடத்தப்படும். அத்துடன் தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தை உடனடியாக வெளியேற்றுவது சாத்தியமற்றது என்று இலங்கை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கே.வேலாயுதம் இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியை சனிக்கிழமை அவரது அலுவலகத்தில் சந்தித்த அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது மேலும் கூறியதாவது:-

"இலங்கையில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போது உள்ள அரசியல் மாற்றம் குறித்தும், அரசியல் சூழ்நிலை குறித்தும், தமிழ் மக்களின் நிலை குறித்தும் எமது சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை- இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது விசாரணை மேற்கொள்ளப்படும். நலன்புரி நிலையங்களில் உள்ள தமிழர்கள் மீண்டும் அவர்கள் வாழ்விடத்துக்குச் செல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் இராணுவம் தமது கெடுபிடிகளைத் தளர்த்தத் தொடங்கியுள்ளது. ஆனால், தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தை முற்றிலும் விலக்க தற்போது வாய்ப்பில்லை. 100 நாள்வேலைத் திட்டத்தின்மூலம் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு, குழந்தைகளின் கல்விக்கு அதிக முக்கியத்துவம், பாடசாலைகளை அதிகரிக்க நடவடிக்கை போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.



இலங்கையில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. அவர்கள் நிம்மதியாக வாழலாம். விருப்பம் உள்ளவர்கள் நாடு திரும்பலாம். ஆனால் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (வ-14)

## வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்.பெப்.3
யாழ்.மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் என்.இன்பம் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தென்னிலங்கையில் இருந்து சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், பௌத்த, கிறிஸ்தவ குருமார்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதன்போது இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை, காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகள், பெண் தலைமைத்துவம் உள்ளிட்ட பிரச்சினைகள் கலந்துரையாடப்படவுள்ளதால், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், சமய அமைப்புக்கள், பல்கலைக் கழகத்தினர் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ-14)

# முல்லை மூத்த புலவனுக்கு முள்ளியவளையில் சிலை

முள்ளியவளை, பெப்.3
கவிசேகரன், கலாபூஷணம், தமிழ்மணி, பௌராணக் கலாநிதி பட்டங்கள் பெற்றவரும் ஆளுநர் விருது பெற்றவருமான அரியான் பொய்கை, கை.செல்லத்துரைப் புலவருக்கு சிலை திறப்பு விழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு முள்ளியவளை சந்தைக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நா.வேதநாயகனால் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.



வவுனியா மாவட்டத்திலுள்ள அரியாமடு என்னும் பழம் பெரும் கிராமத்தில் 1923.12.25 அன்று கைலாயர்- வள்ளியம்மை தம்பதிகளுக்கு ஒரே மகனாகத் தோன்றிய அரியாம் பொய்கை செல்லத்துரைப் புலவர் தனது கல்வியை முள்ளியவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் (தற் போதய முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம்) பயின்று தேறி தபால் சேவையாளனாகப் பணியாற்றி வந்த துடன் கலை , இலக்கியங்களிலும் பங்களிப்பை நல்கினார் . இளவயது முதல் கதாப்பிரசங்கம், புராணப் படனம், சொற்பொழிவு, நாடகம், செய்யுள் இயற்றுதல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கினார் . கட்டுரைகள், வில்லிசை , பக்தி இசைப்பாடல்களை இயற்றியதுடன் 'வேளம்படுத்த வீராங்கனை' என்னும் வரலாற்று நாட்டுக் கூத்து, முள்ளியவளை வேம்படி நாக பூஷணியம்மன் பாமாலை ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ஆலயங்களுக்கான திருவூஞ்சல் பதிகங்களையும் யாத்து உதவியுள்ளார்.

இவர் 2011.01.09 அன்று இயற்கை எய்தினார். அவரது கலை, இலக்கிய சமய சேவைகளைப் பாராட்டி இந்தச் சிலை திறந்து வைக்கப்படவுள் ளது. (வ-433)

# புதிய கட்டடத் திறப்பு விழா

4.9மில்லியன்ரூபா செலவில்நிர்மாணிக்கப்பட்ட மீசாலைவீரசிங்கம்ஆரம்பப்பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா இன்று செவ் வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் கா.கந்தசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார்.

வீரசிங்கம் மத்திய கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டுவந்த ஆரம்பப்பாடசாலை, 01.01.2013 இல் இருந்து நிர் வாகம் தனித்து இயங்கத் தொடங்கியது.எனினும் ஆரம் பப் பாடசாலைக்கென இருந்த மீசாலை புத்தூர் வீதியிலுள்ள பாடசாலையின் வளாகத்தில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர். 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதமே இந்த வளாகம் பாடசாலை நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-105)

இணுவிலில் உலகப்பெருமஞ்சம்



இணுவில் கந்தசுவாமி கோயில்
தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா
இன்று செவ்வாய்க்கிழமை 03.02.2015
நடைபெறவுள்ளது.
காலை:1008 சங்குகளால் விசேட அபிஷேகம்
மாலை: 6 மணிக்கு பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டபப்பூசை
இரவு 7 மணிக்கு மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமாள் வீதிவலம் வரும் காட்சியும் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.
அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இத் திருவிழா சிறக்க வாழ்த்துவோர்:
KST e World Net
Kanthasamy Kovil View Inuvil
Net Browsing, Pc Games, Photo copy, DVD, VCD Writing
லக்சுமி இரும்பகம்
6B உப்புமடம் சந்தி, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
கோபுரம் அரிசி ஆலை
நெளுக்குளம், வவுனியா.
(30458)(1.3.7)

மணிவிழா வாழ்த்துக்கள்
இன்று (03.02.2015)
அறுபதாவது அகவையில் காலடி பதித்து
மணிவிழாக்காணும்
சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்
அதிபர்
அ.கயிலாயபிள்ளை
(B.A, Dip, M.Edu, SLPS I, SLEAS-3)
அவர்களை ஆண்டவன் அருளால் வளம்
பல பெற்று பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.




யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
ஆசிரியர் நலன்புரிச்சங்கம், சாவகச்சேரி.
(51884)(4.7)

# 24 ஆவது பிறந்த தினமும் 4 ஆம் ஆண்டு நினைவுகளும்

அமரர்

## தங்கராசா சுரேந்தினி



தாய் மடி மகிழ
1991.05.16

மண் மடி தவழ
2011.01.19

திதி: 03.02.2015

ஈரிரண்டாண்டாய் இவ்வுலகில் நீ இன்பங்கள் அள்ளித் தந்தாய்
சுரேந்தினி சுரேந்தினி என அழைத்திட நாம்
இன்முகம் காட்டி யெமை இன்புலகில் ஏற்றிட்டாய்
பேரின்பம் புரிந்திட்டாய் பேரினியாள் நீ எமக்கு
ஈரிரண்டாண்டாய் இவ்வுலகை விட்டு
எங்கம்மா சென்றாய் நீ ஏங்கித் தவிக்கின்றோம் இங்கு
இனிய முகம் தேடி இராப் பகலாய் துடிக்கின்றோம்
உன்பிரிவால் நாமிங்கு
இன்னும் மறையவில்லை ஆண்டுகள் நாலானபோதும்
சிரித்த உன்முகம் என்றென்றும் எம் மனத்திரையில்...
என்றும் உன் நினைவுகளைச் சுமந்து நிற்கும்.

(சி/19238)(4.37)

சுதன் தச்சத் தொழிலகம்
விக்னேஸ்வரா வீதி, சங்கானை.
077 659 4625

குடும்பத்தினர்.

# ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11 * 07 * 1965

மறைவு
26 * 01 * 2013

## அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன்

(அகில இலங்கை சமாதான நீதிவான் (J/P),தொழில்நுட்ப உத்தியோகத்தர்
மருத்துவபீடம் பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்)

திதி: 03.02.2015

பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த என்னுயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஈராண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத் துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(56306)(12.3.7)

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
மனைவி - நிலா.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17.07.1965

மறைவு
26.01.2013

## அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன்

ஈராண்டு ஓடி மறைந்தாலும்
எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசத்தில்
உன் நினைவுகள் என்றும் அழியாது.
சொர்க்கம் என நினைந்து பாளாய் போன
வாழ்க்கை என்னும் படுகுழியிழ் விழுந்து பரிதவித்துச் சென்றாயோ...
நீ இருப்பாய் என உன்னைக்கான ஓடிவந்த
சகோதர பாசங்கள் உன் நிழல் படத்தைப் பார்த்துக்
கண்ணீர் விட்டு கவலைப்பட்டதை மறைந்திருந்து பார்த்தாயோ
எல்லோர் மனதிலும் உம் நினைவோடு இருக்ககும் நீ
எங்கேயும் செல்ல மாட்டாய்.
இந்த பௌர்ணமி திருநாளில் உன் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.

வேளா தோப்பு,
யாழ்ப்பாணம்.

(C/19239)(10.3)

தாய், சகோதரர்கள்.

# ஏழாம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்
12 * 06 * 1974

ஆண்டவன் அடியில்
22 * 01 * 2008

அமரர்

## செல்வராசா துளசிதாசன்

(Tulasi cable T.v. உரிமையாளர்)


திதி- தை மாத பூரணை 03.02.2015 செவ்வாய்க்கிழமை

சின்னதொரு புன்சிரிப்பு
அமைதியான பேச்சு
எளிமையின் வடிவு-எல்லாம்
உன்னிடத்தில் கண்டோம் அண்ணா
அன்புடனே அரவணைக்கும் அம்மாவும்
ஆசையுடன் வரவேற்கும் அப்பாவும்
பாசமுடன் பேசிச் சிரிக்கும் சகோதரர்களும்
உருகியழ வைத்து விட்டு ஓடி விட்டாய்...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
0773144991

குடும்பத்தினர்.

# ஆறாம் மாத நினைவலைகள்



அமரர் **தனபாலசிங்கம் சுகிர்தன்**

மண்ணில்
03.07.1972
(சாவகச்சேரி)

விண்ணில்
07.08.2014
(பிரான்ஸ்)

எங்கள் குடும்பத்தின் கோபுரமே
எம்மைப் பாசத்துடன் காத்த அன்புத் தெய்வமே
மாதங்கள் ஆறு சென்றாலும் எம்மை விட்டு
நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் எங்களுடன் இருக்கும்

புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

(51676)(4.3.7)

தனபாலசிங்கம்
குடும்பத்தினர்.
மனைவி, பிள்ளை.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்பெட்ப3 இளவாலை கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இதில் நிர்வாக தலைவராக ச.லக்சன், செயலாளராக ஜோசத்தியசீலன், பொருளாளராக ஜெ.சஜீவன், உப தலைவராக எஸ்.பவநீதன், உப செயலராக ப.சுப்பிரமணியம் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக ச.திருநாவுக்கரசு, மு.செல்லப்பா, அ.பரமேஷ்வரன் த.சிவனேசன், செ.விக்னேஸ்வரன் மற்றும் க.மகேந்திரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ–14)

◆◆◆

வேலணை,பெப்.3 பள்ளம்புலம்முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கான புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக கந்தசாமி இராசலிங்கம், உபதலைவராகசொக்கலிங்கம் சிவயோகலிங்கம் செயலாளராகதிருமதிகைலாசபதி நித்தியலட்சுமி, உபசெயலாளராக நல்லதம்பி சசிதரன், பொருளாளராக தருமலிங்கம் அருணகிரிநாதன் வாசிகசாலைப் பொறுப்பாளராக செல்வரெத்தினம் ஜெயகாந்தன், நூல்நிலையப் பொறுப்பாளராக கணபதிப்பிள்ளை தவச்செல்வம்சமயப்பொறுப்பாளராக பஞ்சாட்சரம், ஞானபண்டிதன் கலை, கலாசாரப் பொறுப்பாளராகதம்பிராசா சிறிசெல்வம், விளையாட்டுப் பொறுப்பாளராக பொன்னுத்துரை உதயகீதன், சுற்றாடல் சுகாதாரப் பொறுப்பாளராக கணேசு ஜெயதீஸ்வரன், பத்திராதிபராக சின்னத்துரை வரதலிங்கம் ஆகியோரும் – நிர்வாகஉறுப்பினர்களாக குணசிங்கம் பேரின்பநாதன், தளையசிங்கம் இராசேஸ்வரி, ரமணன் அசந்தா மற்றும் காப்பாளராக பொன்னையா பேரின்பநாயகம் கணக்காய்வாளராக பழனிநாதன் ஆரூரன் ஆகியோரும்தெரிவுசெய்யப்பட்டனர். (வ)

# செய்திகள்

## கிராம அலுவலரை மாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, பெப்.3
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாஞ்சோலை 207 ஏ கிராம உத்தியோகத்தரை இடமாற்றுமாறு கோரி, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டது.

குறித்த கிராம உத்தியோகத்தருக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்ட போதிலும், அவர் இடமாறிச் செல்லவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர். (வ)

## பாடசாலை நேரத்தைத் தவிர்த்து போட்டிகளை நடத்துவதே சிறந்தது

### தென்மராட்சி வலயப் பணிப்பாளர் கருத்து

தென்மராட்சி, பெப். 3
கல்வி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் போட்டிகளையும் அவற்றுக்கான பரிசில் நிகழ்வுகளையும் நடத்துவது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்று தெரிவித்தார் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார்.

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார மற்றும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விருந்தினராகக் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர், தமது உரையில் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் கல்வி வளத்தை மேம்படுத்தும் பல போட்டிகளை பல நிறுவனங்கள் நடத்தி பரிசில்களையும் வழங்கி வருகின்றன. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அவை வரும் அதனை விரும்புகின்றனர். வெறும் கற்றலுடன் நின்று விடாது இவ்வாறான போட்டிகளில் பங்குபற்றுவது மாணவர்களின் திறமைகளை வளர்க்கக் கிடைக்கும் சந்தர்ப்பமாகும்.

இவ்வாறான திறமையுள்ள மாணவர்கள் மேடைகளில் வைத்துப் பரிசில்கள் பெறுவதை ஏனைய மாணவர்களும் பார்வையிடும்போது அவர்களுக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் ஆர்வம் ஏற்படும்.

போட்டிகளை நடத்தும் நிறுவனங்கள் பரிசில் வழங்கும் நிகழ்வை பாடசாலை நேரத்தில் நடத்தும்போது பரிசில் பெறும் மாணவர் மட்டுமே அதில் கலந்து கொள்ள முடிகிறது. இந்த நிகழ்வைக் காண ஏனைய மாணவர்களும் மாணவருக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிபர்களும் கலந்து கொள்ளமுடியாத நிலை ஏற்படுகிறது.

இதனால் மாணவர்களுடன் தொடர்புடைய நிகழ்வுகளை நடத்தும் நிறுவனங்கள் பாடசாலை நேரம் முடிந்த பின்னர் அல்லது விடுமுறை நாள்களில் போட்டிகளை நடத்துவது சாலச் சிறந்தது எனக் கருதுகிறேன்- என்றார். (உ-9)

## இலங்கை அகதிகளை நாட்டுக்கு அனுப்புவதை மத்திய அரசு கைவிடுக

### ம.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, பெப். 3
தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் சொந்த நாட்டுக்கு அனுப்பும் முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ம.தி.மு.கவின் 23 ஆவது மாநில பொதுக் குழுக் கூட்டம் தூத்துக்குடியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஈழ அகதிகள் தொடர்பிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரால் தஞ்சம் கோரி இந்தியாவில் குடியிருக்கும் ஈழ அகதிகள் பல அழிவுகளைச் சந்தித்துள்ளனர். அவர்களது நிலங்கள், வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீளப் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

அத்துடன் இலங்கை அகதிகளை மீள அனுப்பும் முயற்சியை மத்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். அத்துடன் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ-14)

## மாகாண மட்டத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், பெப்.3
ஜி.ஐ.இசற்/ஈ எஸ்.சி. நிறுவனத்தின் முன்னோடிப் பாடசாலைகள் 60 ஐயும் உள்ளடக்கியதாக 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட "பாதுகாப்பான பாடசாலை" போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயமும், 2 ஆம் இடத்தை மூன்றாம் பிட்டி அ.த.க. பாடசாலையும், 3ஆம் இடத்தை வேலணை சரஸ்வதி வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (வ)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.3
கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய 'தில்லையம்பதியாளே போற்றி' இசைப் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.ராதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுவட்டை திருமதி கனகம்மா சங்கரப்பிள்ளை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை சு.முத்துலிங்கம் பெற்றுக்கொள்வார். மதிப்பீட்டுரையை கவிஞர் வீரா பிரம்மஸ்ரீ குமாரசுவாமிநாதசர்மா நிகழ்த்துவார்கள். கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். (வ)

**நாய் விற்பனைக்கு உண்டு**
கிறேடன் நாய் 11 மாசக் குட்டி விற்பனைக்குண்டு.
தொர்பு: 0775148602

**ஒத்துமாறல்**
கொழும்பு பாடசாலையில் தமிழ் மற்றும் கிறிஸ்தவம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் யாழ்.வலயப் பாடசாலைக்கு ஒத்துமாறவுள்ளார். ஒத்துமாற விரும்புவோர் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(56452)(12.7) தொடர்பு: 077 611 6494

**இசை வகுப்புக்கள்**
இன்று (03.02.2015) ஓகன், வயலின், புல்லாங்குழல், வாய்ப்பாடு (கர்நாடக சங்கீதம்), ஹார்மோனியம் போன்ற வகுப்புக்கள் ஆரம்பம்.
தொடர்பு:
இல.30, கிருஷ்ணபிள்ளைவீதி, ஈச்சைமோட்டை, யாழ்ப்பாணம்.
(56459)(12.7)

**முன்பள்ளி ஆசிரியர் தேவை**
சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்குகின்ற சிவன் முன்பள்ளிக்கு ஆசிரியர் தேவை. க.பொ.த.(சா.த) மற்றும் க.பொத. (உ.த) சித்தியுடன் எமது நிலையத்துக்கு அருகில் வசிப்பவராகவும் ஆங்கிலம் மற்றும் கணினி அறிவு உடையவர்களும் விரும்பத்தக்கது. மேலும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த சுயவிவரத்துடன் எதிர்வரும் 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது நிலையத்துக்கு நேர்முகத் தேர்விற்காக வருகை தரவும்.
(56453)(12.7) நிர்வாகம்.

**இந்தியாவில் உயர்கல்வி**
**ENGINEERING DEGREES**
**ANNA UNIVERSITY - INDIA**
2013/2014 - A/L Maths பிரிவில் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாத மாணவர்கள், உலகலாவியரீதியில் பிரசித்திபெற்ற ANNA UNIVERSITY (Chennai, India) யில் பின்வரும் கற்கை நெறிகளில் சேர்ந்து நான்கு வருடங்களில் இலங்கை பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (UGC Approved) ENGINEER ஆகமுடியும்.
• CIVIL • MECHANICAL • COMPUTER SCIENCE
• INFORMATION TECHNOLOGY • ELECTRICAL
• ELECTRONICS & COMMUNICATION
(BE - BACHELOR OF ENGINEERING - 4 YEARS)
மேற்கூறிய பாடநெறிகளை ANNA UNIVERSITY யின் இணைக்கல்லூரியான SSM COLLEGE OF ENGINEERING இல் (சேலம், தமிழ்நாடு) அனுமதி பெற்று கற்கமுடியும்.
Call : 0777 - 767 818 (தமிழில்)
SIC No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.

**பண உதவி கோரல்**
ஊரெழு மேற்கு சுன்னாகத்தில் வசிப்பவன் இரத்தினம் சிவகுமார் ஆகிய நான் எனது மகள் பவித்திராவிற்கு (வயது - 17) இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ளன. அவருக்கு சிறுநீரக மாற்றுச்சிகிச்சை மேற்கொள்ள வேண்டி உள்ளது. அதற்கு ரூபா 1500,000 (15லட்சம்) தேவைப்படுகிறது. கருணை உள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற பண உதவியை வழங்கி உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.
இரத்தினம் சிவகுமார்,
077 335 3304
கணக்கு இல: 71018231 - இலங்கை வங்கி.
(56451)(12.7)

**வேலையாள் தேவை**
வசந்தவம் ரயர்வேக்ஸ் கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.
தொடர்பு: 129C, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 222 1082 (56448)(4.3.7)

**தேவை**
திறமையான சுறுசுறுப்பான ஆண் பெண் Salesman மற்றும் பில் கிளாக், கணக்காளர் தேவை. உடன் நேரில் வரவும் (அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:
பேப்பர்கவுஸ், யாழ்ப்பாணம்

**தேவை**
கேர்ட்டின் தைப்பதில் வேலை தெரிந்த, நல்ல அனுபவம் மிக்க பெண் தையலாளர் தேவை.
தங்கள் பயோடேற்றாவுடனும், அடையாள அட்டையுடனும் நேரில் வரவும்.
ஜெஸீமாஸ்
508, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1544, 077 360 8144, 077 749 0282 (56450)(4.3.7)

**கடை வாடகைக்கு**
இல. 733, K.K.S வீதியில் உள்ள நான்கு மாடிக் கட்டடம் வாடகைக் குண்டு தனித் தனி மாடிகளாக வாடகைக்கு கொடுக்கப் படும். (இந்துக் கல்லூரிக்கு முன்பாக).
தொடர்பு: 0768404356

**காணி விற்பனைக்கு**
இணுவில் ஸ்ரேசனுக்கு முன்பாக 5 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 034 4731
(56437)(4.3.7)

**விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள மில் பாவனைக்குரிய என்ஜின் உட்பட சகல மெசின் உபகரணங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 954 6764, 072 924 7961, 077 781 8510
(56446) (4.3.7)

**தைப்பூச ஓகன் (KEY BOARD) இசை வகுப்பு**
ஆசிரியர்-ஸ்ரீகுகன்
இன்று - மாலை 5 மணி தொடக்கம் இடம்பெறும்.
தொடர்பு:
ஸப்தஸ்வரம் இசை மன்றம் நல்லூர் வடக்கு. 077 698 0573
(56443)(4.3.7)

**வீடு வாடகைக்கு**
யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் பஸ் நிலையத்திற்கும் மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 582 0084
(56445)(4.3.7)

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
ஐ
காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது

## மரண அறிவித்தல்கள்



### மனுவல் ஜேக்கப் ஞானதாஸ்

(முன்னாள் ஊழியர், யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இல.25, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் ஜேக்கப் ஞானதாஸ் நேற்று (02.02.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கறோலின் மனுவல்- மனுவல் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான ஆசீர்வாதம்-திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெசிந்தாவின் (சின்னமணி) பாசமிகு கணவரும், ரெரன்ஸ், றோய் தர்சன், தர்சினி, ரெஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தினியின் அன்பு மாமனும், ரிசோனா, லக்சன், யதுர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ரீட்டா மற்றும் இந்திராணி, ஜெயமலர், தேவதாஸ், மரியதாஸ், புஸ்பராணி, காலஞ்சென்ற ஜீவதாஸ் மற்றும் காந்திமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியம், அருட்பிரகாசம், அன்ரன் ஞானச்செல்வம், காலஞ்சென்ற சர்வானந்தம் மற்றும் பரம்சோதி, செல்வராணி, வினிபிரெட், ஞானமேரி, தேவி, அரியதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாள்ஸ் இரத் தினசிங்கத்தின் சகலனும், காலஞ்சென்ற அருளம்பலத்தின் மருகனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (04.02.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங் கல் திருப்பலியின் பின்னர் தூய மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 25, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.

(56462) (10)

தகவல்: குடும்பத்தினர்.

### பொன்னம்பலம் நடராஜா



யாழ். ஸ்ரான்லி வீதியைப்பிறப்பிடமாகவும், றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா (30.01.2015) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை -அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், விஜி (கனடா), சுரேஸ் (பிரான்ஸ்), ஜனு, சுகந்தி, சத்தியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தன் (கனடா), டயானா (பிரான்ஸ்), ஜயக்கொடி, சிவா, டிவ்னா (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்பு மாமனும், நிவானா, சகானா, செறினா, சகின், சுமித் (யோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன்), சுஜித், சஜீன், செலினா ஆகி யோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற பரிபூரணம் மற்றும் பாக்கியம், கண்டம்மா, செல்வராணி, அருமைராசா, சிவசோதி, மகிமாவதி ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.02.2015) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


79/3, றக்கா வீதி,
சுண்டுக்குழி.
077 430 5411

(56455) (3.7.4)

தகவல்: குடும்பத்தினர்.

# மாணவர்கள் சதித் திட்டங்களில் அகப்படாமல் விழிப்பாக இருங்கள்

## வடக்கு முதலமைச்சர் அறிவுரை



யாழ்ப்பாணம், பெப்.3

மாணவரை முறையற்றதாகக் கவரும், அவர்களைத் தமது குறிக்கோள்களில் இருந்து தவறான பாதைகளுக்கு இட்டுச் செல்லக் கூடிய பல கேளிக்கைகளும், கெடுதிமிக்க போதைப் பொருள்களும் தற்போது பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

அவற்றைத் தாண்டி முன் செல்ல வேண்டிய ஒரு கடப்பாடு மாணவர்களைச் சார்ந்தது என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா பெரியகோமரசங்குளம் மகாவித்தியாலயம் இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களாகிய நீங்கள் உங்களது குறிக் கோள் இன்னதென்று இனங்கண்டு விட்டீர்களானால், இதுதான் எனது இலக்கு என்று குறி வைத்து விட்டீர்களானால், எத்தடைகள் வந்தாலும் அவற்றைத் தாண்டி உங்கள் இலக்குகளை அடைவது உறுதி. தன்னம்பிக்கையும் இறை நம்பிக்கையும் அதற்கு அவசியம். எம்மால் முடியும் என்று கூறி முயன்று பாருங்கள். உங்கள் கனவெல்லாம் நிறைவேறும். உங்கள் எண்ணங்கள் யாவும் ஈடேறும்.

ஆசிரிய சகோதரர்களுக்கும் ஒரு வேண்டுகோள். நானும் ஒரு ஆசிரியனாக இருந்தவன். 10 வருடங்களுக்கு மேல் சட்டத்தைத் தமிழில் பயிற்றுவித்தவன். நான் தமிழில் சட்டவிரிவுரைகள் ஆற்றத் தொடங்கியபோது தென்னிந்தியாவில் கூட சட்டம் தமிழில் பயிற்றுவிக்கப்படவில்லை. முயன்று முன்னேறி வெற்றியும் கண்டேன். மாணவர்களுக்கு நான் கூறிய அதே அறிவுரைகள் ஆசிரியர்கள், அதிபருக்கும் பொருந்தும். தடைகளைத் தாண்டி முயன்று முன்னேற நீங்கள் முடிவெடுக்கவேண்டும். குறைகளைக் கூறி நிறைகளை ஏற்படுத்தாமல் இருந்து விடாதீர்கள். மாணவ சமுதாயம் உங்கள் கைகளில். அவர்களைச் சிறந்த குடிமக்கள் ஆக்குவதும், கல்விமான்கள் ஆக்குவதும், விளையாட்டு வீர, வீராங்கனைகள் ஆக்குவதும் உங்கள் கைகளில் தான். பாகுபாடுகள் இன்றி முயன்று முன்னேறி நாம் யாவரும் முன் மாதிரியான ஒரு மாகாணத்தை உருவாக்குவோம்.

முன்னர் எம்மிடையே வேற்றுமை வளராமல் ஆங்கில மொழி எம்மைப் பிணைத்திருந்தது. பொதுவாகக் கல்வியிலும் விளையாட்டுக்களிலும் தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் மிகவும் சிறந்து விளங்கினோம். பல்கலைக் கழகத்தினுள் 1948-1967 வரையில் உள் நுழைந்த மாணவர்களின் பெயர்களைப் பார்த்தீர்களானால் அங்கு முதன்மையாக நின்றவர்கள் தமிழ் பேசும் மாணவர்களே. ஊக்கமும், விடா முயற்சியும், விவேகமும் எமது அன்றைய மாணவச் செல்வங்களின் தலைசிறந்த பண்புகளாக இருந்தன.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னரே, 1970 களில் கல்வியில் தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்பட்டபின்னரே பல மாற்றங்களுக்கு எமது மாணவ சமுதாயம் முகங் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்துக்கு உள்ளாகியது. இதனால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இன்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில், ஆட்சியில் மாற்றங்கள் ஏற்பட்ட நிலையில், உங்களுக்கென்று ஒரு வடமாகாண அரச அலகு அமைக்கப்பட்டுள்ள நிலையில், நீங்கள் யாவரும் எமது பாரம்பரிய பெருமைகளையும் பல்தரப்பட்ட சிறப்பம்சங்களையும் உலகுக்குப் பறைசாற்ற வேண்டிய தருணம் வந்துள்ளது. கல்வியிலும் விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கும் அதே நேரத்தில் நல்லொழுக்கத்திலும் கூட நீங்கள் சிறந்து விளங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# மூன்று பொது நூலகங்களுக்கு இந்தியத் தூதரகத்தால் நூல்கள்



தென்மராட்சி, பெப். 3

சாவகச்சேரி நகரசபையின் கீழ் இயங்கும் மூன்று பொது நூலகங்களுக்கும் இந்தியத் தூதரகத்தால் பெறுமதிமிக்க நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி இந்திய குடியரசு தின விழா யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வேளையில் கையளிக்கப்பட்ட நூல்கள் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார விழாவில் வைத்துக் கையளிக்கப்பட்டன. வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஜெ௭ஸ் ரன்ரைன் ஜக்ஸீஸ் ஆகியோரிடமே நூல்கள் கையளிக்கப்பட்டிருந்தன. இந்த நூல்கள் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூல கங்களின் நூலகர்களிடம் நகரசபைத் தலைவரால் சனிக்கிழமை கையளிக்கப்பட்டன. (வ-9)

## மரண அறிவித்தல்

### ஆழ்வாப்பிள்ளை சிவகுமார்

(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சிவகுமார் (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், மனோராணி அவர்களின் பாசமிகு கணவரும், கோமதி, ஜெகன்நாத் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேந்தன் (உரிமையாளர், றோயல்ஸ் ஸ்போட்ஸ்), ஸ்ரோமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டினோஷனின் அன்புப் பேரனும், திருமதி சுந்தையா வசந்தகுமாரியின் அன்புச் சகோதரனும், மனோகரி, மனோரஞ்சிதம், மனோகரன், மனோரதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2015) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மதியகம்',
சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

(56456) (12.7)

தகவல்: குடும்பத்தினர்.
021 321 7374

# விபத்தில் காயம்

தமது மோட்டார் சைக்கிளில் கடமைக்குச் சென்ற பெண் கிராம அலுவலரை மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் சனிக்கிழமை காலை நுணாவில் சந்திக்கு அருகில் இடம்பெற்றது. காயமடைந்த கிராம அலுவலரை பொலிஸார் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மீசாலை வடக்கில் உள்ள தனது பிரிவுக்கு கடமைக்குச் சென்ற வேளையில் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. கிராம அலுவலரான இராஜதீபன் றஜிதா (வயது - 31) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

# தொழில்நுட்பம்



## VLC மீடியா பிளேயர்

கணினியில் MP4 உட்பட பல பார்மெட்களில் உள்ள ஓடியோ மற்றும் வீடியோ பாடல்களை இயக்க நாம் அனைவரும் பயன்படுத்துவது VLC மீடியா பிளேயர்.

இதனை ஆன்ட்ராய்ட் போனில் பயன்படுத்தும் வண்ணம், சோதனைப் பதிப்பாக வீடியோ லேன் என்னும் நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டது.

பயனாளர்களும் இதனை தரவிறக்கி பயன்படுத்தி வந்த நிலையில், அடிக்கடி தடைப்பட்டது, மேலும் பல்வேறு பிரச்சினைகளும் ஏற்பட்டன.

இவைகள் அனைத்தும் சரிசெய்யப்பட்ட நிலையில், தற்போது முழுமையான தொகுப்பு வெளியாகியுள்ளது.

ஆன்ட்ராய்ட் 2.1 முதல் அதன்பின் வந்த அனைத்து ஆன்ட்ராய்ட் சிஸ்டங்களிலும் பயன்படுத்தும் வண்ணம் தற்போது சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதாக வீடியோ லேன் நிறுவனம் அறிவித்துள்ளது.

## வாசகர்களுக்கு பணம் தரும் புதிய பேஸ்புக்

சமூக வலைதளங்களிலேயே சிறந்த இணையத்தளம் யுடியூப் தான். காரணம், இந்த இணையத்தில் தான் வாடிக்கையாளர்களுக்கு பணம் சம்பாதிக்கும் வசதியை ஏற்படுத்தித் தந்துள்ளது. சமூக வலைத்தளம் + பணம். எனவே தான் வீடியோக் களின் அரக்கனாக யுடியூப் திகழ்கிறது. ஆனால் உலக அளவில் முன்னணி சமூக வலை தளங்களான பேஸ்புக், டுவிட்டர் இணைய தளங்கள் பலரை அடிமைப் படுத்தி அவர்களின் நேரங்களை வீணடித்து கோடிகோடியாக பணத்தை சம்பாதிக்கின்றன. தற்பொழுது பேஸ்புக் தளத்துக்குப் போட்டியாக TSU என்ற இணையத்தளம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதனுடைய சிறப்பு அம்சமே யுடியூப் போன்று பயன்பாட்டாளர்களுக்கு பணம் கொடுப்பது தான். TSU என்ற சமூக வலைத்தளம் அதில் கருத்துக்களைப் பகிர்பவர்களுக்கும் லைக் மற்றும் கமெண்ட் செய்பவர்களுக்கும் அவர்களுக்கான பணத்தை வழங்குகிறது என்றால் நம்ப முடிகிறதா? நம்பித் தான் ஆக வேண்டும். TSU என்பது முக நூலைப் (Facebook ) போன்ற வேகமாக வளர்ந்து வரும் ஒரு சமூக தொடர்பு ஊடகமாகும். கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட TSU மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. TSU ˇÂzD Facebook-க்கும் என்ன வித்தியாசம் என்றால் தினமும் பல கோடிக்கணக்கானவர்கள் பயன்படுத்தும் Face book இல் உள்ள விளம்பரங்கள் மூலமாக வரும் பணம் முழுவதுமாக Face book மட்டுமே எடுத்துக் கொள்ளும். ஆனால் TSU விளம்பரங்கள் மூலம் வரும் பணத்தில் 90வீதத்தை மக்களுக்கே திருப்பி வழங்கி விடுகிறது. மிகுதி 10 வீதப் பணத்தை தனது இணைய வளர்ச்சிக்காக வைத்துக் கொள்கிறது.

## HTC A12 ஸ்மார்ட் கைபேசி

HTC நிறுவனம் புதிதாக வடிவமைத்து விரைவில் அறிமுகம் செய்யக் காத்திருக்கும் A12 ஸ்மார்ட் கைபேசி தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கைபேசி 4.7 அங்குல அளவுடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் 139.8 X 69.5 X 9.5 mm என்ற அளவிடையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் 1.2 GHz வேகத்தில் செயற்படக்கூடிய 64-bit Qualcomm Snapdragon 410 Processor, பிரதான நினைவகமாக 1GB RAM என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் Android 4.4 KitKat இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 1.3 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்பை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.






# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்,

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்



# உலகச் செய்திகள்

## பணயக் கைதிகள் படுகொலை; கண்டிக்கின்றன உலக நாடுகள்

ஜப்பானைச் சேர்ந்த, போர்கள் பற்றிய செய்தி சேகரிப்பாளர் கென்ஜி கோட்டூ தலை துண்டித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை வீடியோ காட்சிகளின் அடிப்படையில் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நகடானி உறுதிப்படுத்தியுள்ளார். தமது நாட்டின் 2ஆவது பணயக் கைதியும் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டமைக்கு ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒரு போதும் மன்னிக்க முடியாது. சர்வதேசசமூகத்துடன் இணைந்து அந்தப் படுகொலைகளுக்கு காரணமானவர்களை நீதியின் முன்பாக நிறுத்துவோம். தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு எந்த வகையிலும் ஜப்பான்அரசு அடி பணியாது என்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ஜப்பானிய செய்தியாளர் கென்ஜி கோட்டூவை தீவிரவாதிகள் கொலை செய்தது கொடூரமான செயலாகும். ஐ.எஸ்.தீவிரவாதிகளை நிர்மூலமாக்கும் வரை அவர்கள் மீதான நடவடிக்கைகளைத் தொடர சபதம் எடுப்போம் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இந்தப் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடோவை தலை துண்டித்து கொலை செய்யப் போவதாக தீவிரவாதிகள் விதித்திருந்த காலக்கெடு நேற்றுமுன்தினம் முடிவடைந்தது. எனினும் தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு ஜப்பான்செவிசாய்க்கவில்லை. அதனை தொடர்ந்து நேற்றுமுன்தினம்கோட்டோவைஐ.எஸ்.தீவிரவாதிகள் தலையைத்துண்டித்து படுகொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஓ–ரி)



புதிய துணை உளவுச் செயற்கைக்கோளை ஜப்பான் நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் உள்ள தனிகாஷிமா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து, எச்.2.ஏ ரொக்கெட் மூலம் இந்த உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதாக ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இத்தாலியின் ஜனாதிபதியாக முன்னாள் நீதிபதி சேர்ஜியோ

ரோம், பெப். 3



இத்தாலியின் புதிய ஜனாதிபதியாக நீதிபதி சேர்ஜியோ மெற்றரல்லா பதவியேற்க வுள்ளார். இத்தாலிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தற்போதைய ஜனாதிபதியை விட பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றுள்ளார்.

73 வயதான அவர் இத்தாலியிலுள்ள நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றியிருந்தார். சிசிலிதீவைப் பூர்வீகமாகக் கொண்ட அவரது குடும்பம் வலுவான அரசியல் பின்புலமுடையதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ள பதவிப்பிரமாண நிகழ்ச்சியில் இத்தாலியின் புதிய ஜனாதிபதியாக அதிகார பூர்வமாக அவர் பதவியேற்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாட் நாட்டு ராணுவத்தினர் கமரூனில் அதிரடி வேட்டை

## 120 தீவிரவாதிகள் சாவு

என்டிஜமினா, பெப். 3



கமரூனின் வடக்கு பகுதியில் சாட் நாட்டின் இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதலில் நேற்று முன்தினம் போகோ ஹராம் தீவிரவாதிகள் 120 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அந்த மோதலில் 3 இராணுவ வீரர்களும் உயிரிழந்துள்ளதாகச் சாட்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில் தங்களது ஆதரவு ஆட்சியை நிறுவுவதற்காக போகோ ஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து அப்பாவிப் பொது மக்களைக் கடத்துவது, மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் நைஜீரிய இராணுவத்துடன் பல்வேறு நாடுகளின் படையினரும் ஈடுபட்டுள்ளனர். தீவிரவாதிகளின் தாக்குதல் நைஜீரியாவின் அயல் நாடான கெமரூன் மற்றும் சாட் நாடுகளின் எல்லைப்பகுதிகளிலும் நீடித்து வருகிறது. இதனால் இந்த 2 நாடுகளின் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் அடிக்கடி மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

மேலும்நைஜீரியா,சாட்,கமரூன், நைஜர் மற்றும் பெனின் ஆகிய நாடுகளின்எல்லையைக்கடந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதை முறியடிப்பதற்காக 7,500 இராணுவப் படைகளை அனுப்ப ஆபிரிக்க ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

அதுதொடர்பான ஆலோசனைக்கூட்டம் அடுத்த வாரம் கமரூன் தலைநகரில் நடைபெறவுள்ளதாக கானா ஜனாதிபதி ஜோன் அஹமா தெரிவித்துள்ளார். (ஓ–ரி)

## உக்ரைனுக்கு ஆயுதங்கள் அமெ.வழங்கும்

உக்ரைன்இராணுவத்துக்குகிளர்ச்சியாளர்களை அடக்குவதற்காக ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. ரஷ்ய எல்லையில்உள்ள உக்ரைனின் கிழக்குப் பகுதியில் போர் நடைபெற்று வருகிறது.

கிழக்கு உக்ரைனில் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா உதவி வருகிறது. அவர்களுக்கு ரஷ்யா சக்தி வாய்ந்த ஆயுதங்களை வழங்குவதாக மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன. கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் நோக்கில் உக்ரைன் இராணுவத்துக்கு ஆயுதங்களை வழங்கஅமெரிக்காமுன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டி 80 மற்றும் டி 72 ரக டாங்கிகள் பல ரக ரொக்கெட்டுகள் மற்றும் நவீனரகத்துப்பாக்கிகளைவழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 1000 ரஷ்ய இராணுவ வீரர்கள் மற்றும் உளவுத்துறையினரும் கிளர்ச்சியாளர்களுக்குஉதவுவதாகநேட்டோஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## திருச்சபை உறுப்பினர் தகுதியிலிருந்து 4 லட்சம் கிறிஸ்தவர்கள் விலகுவர்

பெர்லின், பெப். 3



புரொட்டஸ்டான்ட் மற்றும் கத்தோலிக்க திருச்சபைகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டாய வருமான வரியை கண்டித்து 4லட்சம் ஜேர்மானிய கிறிஸ்தவர்கள் –உறுப்பினர் தகுதியிலிருந்து வெளியேற முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஜேர்மானியசட்டத்தின்படிதிருச்சபைகளில் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும்தானாகவே உறுப்பினர்கள் ஆக்கப்படுவதுடன், அந்தத் திருச்சபைகளுக்குத்தனது வருமானத்தின் ஒரு பகுதியை வரியாக செலுத்த வேண்டும்.

அந்த வருமான வரியை அரசு பெற்று, திருச்சபைகளின் செயற்பாடுகளுக்காக குறித்த தொகை பயன்படுத்தப்படும்.

தற்போது விதிக்கப்பட்டுள்ள 8 முதல் 9 சதவிகிதத்திலான வருமான வரியை ஏற்க முடியாத நிலையில் திருச்சபைகளின் உறுப்பினர் தகுதியிலிருந்து விலக முடிவு செய்துள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

உறுப்பினர்தகுதியிலிருந்துஅவர்கள் விலகினாலும், திருச்சபைகளின்செயற்பாடுகளிலும்தொழுகைகளிலும் அவர்கள் பங்கெடுப்பதைத் தடுக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எயார் ஏசியா விமான விபத்து கறுப்புப் பெட்டியில் திகில் தகவல்

ஜகார்த்தா, பெப். 3




எயார் ஏசியா விமானம் கடலில் விழும்முன்னர்தலைமைவிமானி தன் இருக்கையை விட்டுஎழுந்து சென்றுள்ளது மீட்கப்பட்ட கறுப்புப் பெட்டியை சோதனை செய்து பார்த்ததில் தெரிய வந்துள்ளது. இந்நிலையிலேயே விமானம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி இந்தோனேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு 162 பயணிகளுடன் சென்ற விமானம் ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அனைவரும்சாவடைந்துள்ளனர்.

இதனையடுத்து நடந்த மீட்புபணியில் இதுவரை விமான விபத்திலிருந்து 72 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டது. கறுப்புபெட்டியை சோதனை செய்து பார்த்ததில் இந்தத் திடுக்கிடும் தகவல் தெரியவந்துள்ளது. அதுகுறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில்; விமானத்தைக் கட்டுப்படுத்தும் கணினியில் ஒரு வாரத்துக்கும் மேலாக கோளாறு இருந்துள்ளது. கோளாறுடனேயே விமானத்தைச் செலுத்தியுள்ளனர். கடந்த 28ஆம் திகதி கோளாறுஅதிகரிக்கவேதலைமை விமானி இரியான்டோ கட்டுப்பாட்டுக் கணினியைச் செயல் இழக்கச் செய்துள்ளார். அவர் கணினியைச் செயல் இழக்கச் செய்வதற்காக தனது இருக்கையில் இருந்து எழுந்து சென்ற போது, துணை விமானி ரெமி பிளெசலின் பொறுப்பில் இருந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து கடலில் விழுந்துள்ளது.

தலைமை விமானியின் இந்தச் செயல் விமானப் போக்குவரத்துத்துறை நிபுணர்களை வியக்க வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ–ரி)



சீனாவின் ஷான்சி மாகாணத்திலுள்ள லிண்டன் நகரைச் சேர்ந்த ஜுகீ என்ற 23 வயதுடைய நபரொருவர் பேனாவை மட்டும் உபயோகப்படுத்தி பல ஓவியங்களை வரைந்து சாதனை படைத்துள்ளார்

# பூமியை கண்காணிக்க நாஸாவின் செயற்கைக்கோள் விண்ணுக்கு

நியூயோர்க், பெப்3

அமெரிக்காவின் நாஸா விண்வெளி மையம் பூமியை ஆய்வு செய்து கண்காணிக்கும் வகையில் எஸ்.ஏ.எம்.பி. என்ற புதிய செயற்கை கோளை நேற்று விண்ணில் செலுத்தியுள்ளது.

இந்த ரொக்கெட் பூமியின் மேற்பரப்பில் நிலவும் தட்ப வெப்ப நிலை, சுற்றுச்சூழல் மற்றும் பூமியின் தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளும். அதன்மூலம் ஏற்படப்போகும் வெள்ளம் மற்றும் வறட்சியை முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைகோளுடன் மிகச் சிறிய 3 செயற்கைகோள்களும்



அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவை பல்கலைக்கழக மாணவர்களால் வடிவமைக்கப்பட்டவை என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஐ.எஸ்.ஸின் மூர்க்கம் விடாது தொடர்கிறது

## ஈராக் அதிகாரிகள் தலை துண்டித்துக்கொலை

பாக்தாத், பெப் 3

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் சில பகுதிகளைக் கைப்பற்றி தனி நாடு அமைத்துள்ளனர். அவர்களைஎதிர்த்து ஈராக் இராணுவம் போரிட்டு வருகிறது. அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகள் குண்டு வீசித் தாக்கி வருகின்றன.

இதனால் ஆத்திரமடைந்துள்ள தீவிரவாதிகள் பணயக் கைதிகளின் தலைகளைத் துண்டித்துப் படுகொலை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஈராக்கைச் சேர்ந்த 2 அதிகாரிகளின் தலைகளைத்துண்டித்துத்தங்கள் வெறியாட்டத்தைத் தொடர்ந்துள்ளனர்.

ஐ.எஸ் தீவிரவாதிகள் இதுபோன்று அச்சுறுத்தல் விடுத்தாலும் அமெரிக்கா தலைமையிலான இராணுவமும், குர்தீஷ் இராணுவமும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.சிரியா, ஈராக் போன்ற



பகுதிகளிலிருந்து பெரும்பாலான பகுதிகள் ஐ.எஸ்.தீவிரவாதிகளிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

எனினும் மிகப்பெரிய 3 நகரங்கள் தீவிரவாதிகள் வசமுள்ளன. அவற்றை மீட்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவிரவாதத்துக்கு எதிராக புதிய படை அணி எகிப்தில்

## அந்த நாட்டு அதிபர் அல்.சிசி அறிவிப்பு

கெய்ரோ, பெப். 3

தீவிரவாதச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ள புதிய ஒருங்கிணைந்த படையை அமைப்பதாக எகிப்து அதிபர் அப்துல் பத்தா அல்–சிசி அறிவித்துள்ளார்.



தலைநகர் கெய்ரோவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பாதுகாப்புப் படைத் தலைமைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனை அறிவித்துள்ளார்

பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற் கொள்ள அமைக்கப்படும் புதிய படைக்கு ஒசாமா அஸ்கர் தலைமை ஏற்பார் என அதிபர் அப்துல் பத்தா அல்–சிசி தெரிவித்துள்ளார்.

எகிப்தின் வடக்கு சினாய் பகுதியில், இஸ்லாமிய தேச தீவிர வாத இயக்கத்தின் ஆதரவு பெற்ற ஒரு குழு அண்மையில் நடத்திய தாக்குதலில், 27 இராணுவ வீரர்கள் உட்பட 32 பேர் சாவடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து தீவிரவாத எதிர்ப்புப் படை அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படை தலைமைக் குழுக்கூட்டத்தில் அதிபர் அல்–சிசி தெரிவிக்கையில், தீவிரவாதத்துக்கு எதிரான போர் மிக தீவிரமானதாகவும் நீண்டதாகவும் இருக்கும்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் உழைப்பினாலும் இரத்தத்தினாலும் எகிப்து வெற்றி அடையும். இராணுவத்துக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# குண்டு வெடித்து பஸ் தூள்; 6 பேர் சாவு; 26 பேர் காயம்

## சிரிய தலைநகரில் பயங்கரம்

லெபனானில் இருந்து ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள் சிரியா தலைநகர் டமஸ்களில் உள்ள வழிபாட்டு தலத்துக்கு ஒரு பஸ்ஸில் புறப்பட்டு சென்றனர். அவர்களது பஸ் டமஸ்கஸ் பகுதியிலுள்ள வழிபாட்டு தலத்தை அடைந்த போது, அந்த பஸ்ஸில் திடீரென குண்டு வெடித்தது. இதனால் பஸ் தூள் தூளாக நொறுங்கியது. இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது.



இந்தச்சம்பவத்தில் அந்த பஸ்ஸில் பயணம் செய்த 6 யாத்திரிகர்கள் உடல் சிதறி சாவடைந்துள்ளனர். 23 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தத்தாக்குதலுக்கு அல்குவைதாவுடன் தொடர்புடைய நுஸ்ரா முன்னணி பொறுப்பேற்றுள்ளது. அந்த அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுத் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது



# அல்-ஜசீரா செய்தியாளர் பீற்றர் விடுதலை

எகிப்து நாட்டு சிறையில் 400 நாள்களாக இருந்த அல்–ஜசீரா செய்தியாளர் பீற்றர் கெரெஸ்டே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவதூறாகச் செய்திகள் வெளியிட்டதாகக் கூறி, எகிப்து நாட்டைச் சேர்ந்த அல்–ஜசீரா செய்தியாளர்கள் முஹமது பாஹ்மி, பஹேர் முஹமது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த செய்தியாளர் பீற்றர் கிரேஸ்டே ஆகியோர் எகிப்து சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் பீட்டர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, அவர் சைப்ரஸ் வழியாக ஆஸ்திரேலியா திரும்புவார் என்று ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

# தூதரகங்களைத் தாக்குவதற்கு பாகிஸ்தானியர் சதி; இந்தியாவிடம் ஆதாரங்களை வழங்கியது அமெ.

இந்தியாவிலுள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேல் துணைத்தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டமை தொடர்பானவழக்கில் பாகிஸ்தானைச் சேர்ந்தவருக்கு உள்ள தொடர்பு குறித்த ஆதாரங்களை மத்திய அரசுக்கு அமெரிக்க அரசு வழங்கியுள்ளது.

சென்னையிலுள்ள அமெரிக்க துணைத் தூதரகம் மற்றும் பெங்களூரிலுள்ள இஸ்ரேல் துணைத்தூதரகம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன் வேவு பார்த்த ஜாகிர் உசைன் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட உசைன், இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் விசா ஆலோசகராகப் பணிபுரியும் சித்திக்கை சந்தித்துப் பேசியதாகத் தெரிவித்துள்ளார். மேலும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஷாஜி என்பவரையும் சித்திக் தனக்கு அறிமுகம் செய்து வைத்ததாகவும் உசைன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை வழங்குமாறு அமெரிக்காவுக்கு என்ஐஏ. கோரிக்கைவிடுத்திருந்தது அதன் அடிப்படையில், உசைன் மற்றும் ஷாஜி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற ஈ–மெயில் பரிவர்த்தனை ஆதாரங்களை அமெ. மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆக்கம்



# தமிழ் உள்ளவரை அண்ணா நாமம் வாழும்

**இன்று அன்னாரது 46ஆவது நினைவுதினம்**

தமிழுக்கு மூன்றெழுத்து தமிழை வளர்த்த அண்ணாவுக்கு மூன்றெழுத்து. தென்னிந்திய தமிழ் மாநிலமான சென்னையை தமிழ்நாடு என்ற பெயரைப் பொறித்து தமிழுக்காய், தமிழகத்துக்காய் அயராது உழைத்து தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, குறுகிய காலத்தில் தமிழக முதலமைச்சராக உயர்ந்து உலகத் தமிழர்களின் இதயங்களில் மறைந்தும் மறையாமலிருப்பவர் பேரறிஞர் அண்ணாதுரை.

அண்ணா 1909 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடராசன் – பங்காரு அம்மாள் தம்பதியரின் புதல்வராக காஞ்புரத்தில் பிறந்தார். ஆரம்பக்கல்வியைக் காஞ்சிபுரத்திலும், பட்டப்படிப்பை சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும்கற்றார்.முதுமாணிப் பட்டம் பெற்றதும் குடும்பப் பொருளாதார நெருக்கடி காரணமாக ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார். குறுகிய காலத்தில் ஆசிரிய வேலையை உதறித் தள்ளி விட்டு சுயநலம் கருதாது பொதுப்பணிகளில் ஈடுபட்டார். பகுத்தறிவு என்பது என்னவென்று தமிழக மக்களுக்கு எடுத்து விளக்கினார். மூட நம்பிக்கைகளைத் தமிழக மக்களிடமிருந்து அகற்றப் பாடுபட்டார். அழகு தமிழில் பேசித் தனது பேச்சாற்றலால் தமிழக மக்களைத்தன்பக்கம்ஈர்க்கச்செய்தார். பாமரமக்கள், படிக்காதவர்கள் அறியும் வண்ணம் மேடைகள்தோறும் உரை நிகழ்த்தினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருந்தது. அதனைப் பின்பற்றுவதில் பேரறிஞர் அண்ணா உறுதியாக இருந்தார்.

அண்ணா தமது 36 வயதில் ஈ.வே.ரா.பெரியாரின் நீதிக் கட்சியில் இணைந்தார். நீதிக் கட்சியானது பின்னர் திராவிடர் கழகமாகியது. திராவிடர் கழகத்தில் அண்ணா பெரும் தூணாக விளங்கினார். திராவிடர் கழகத்தில் அண்ணா கொண்டு வந்த தீர்மானங்கள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆங்கிலேயர் கொடுத்த பட்டங்களையும், விருதுகளையும் தூக்கியெறிய வேண்டும், சாதியம் பெயர்களுக்கு முன்பாக போடப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்துப் போராடினார். திராவிட நாடு மற்றும் ஹோம் லாண்ட் என்ற பத்திரிகைகளையும் ஆரம்பித்து நடத்தினார். அறிஞர் அண்ணாவின் அழகுத் தமிழ் வசன உச்சரிப்பினால் ஈர்க்கப்பட்ட பலர் எழுத்தாளர்களானார்கள். வருங்காலங்களில் கல்வியறிவில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தினால் மாணவர்களின் கல்வியில்அக்கறைகாட்டியவர்அண்ணா. மக்கள் அண்ணாவின் பேச்சைக் கேட்பதற்கென்றே கண் விழித்திருப்பார்கள். ஒரு பொதுக் கூட்டத்தில் அண்ணா வருகை தருவதற்கு காலதாமதமாகியது. இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது. கூட்டத்துக்கு வந்தவர்களில் பலர் உறங்கி விட்டனர். அந்தவேளையில் அண்ணா மேடையில் தோன்றுகிறார். மக்களைப் பார்க்கிறார். அடுக்கு மொழியில் உரையை முன்வைக்கிறார் மாதமோ சித்திரை, நேரமோ பத்தரை, மக்களோ நித்திரைஎன்றதும் உறங்கிய மக்கள் விழித்தனர்.

1967ஆம் ஆண்டு தமிழக சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் முதன் முதன் முதலாக பேரறிஞர் அண்ணா தலைமை தாங்கி வழி நடத்திய திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றது. பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானார்.

1968ஆம் ஆண்டு ஜனவரியில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைச் சிறப்பாக நடத்தி தமிழன்னையை மகிழ்வுறச் செய்தார். தமிழ் மண்ணின் மேல் பற்றுக் கொண்ட தமிழறிஞரான பேரறிஞர் அண்ணா நோயினால் பாதிக்கப்பட்டு 03.02.1969இல் விழிமூடித் துயில் கொண்டார்.

தமிழ்த்தெய்வமாம் முருகப்பெருமானுக்கு ஈழவள நாட்டில் சிறப்புற ஆலயம் அமைந்த இடங்களில் இணுவில் திருவூரும் ஒன்றாகும். முருகப்பெருமானது திருவிளையாடல்களைத் தன்னகத்தே கொண்டமைந்த பெரிய கோவிலென அழைக்கப்படும் கந்தகோட்டத்தைத் தன்னகத்தே கொண்டு இந்த ஊர் காணப்படுகின்றது.

காலத்தால் முற்பட்ட வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படும் இந்த ஊரானது கலிங்கத்துப் பரணியில் போற்றப்படும் சோழகுலோத்துங்கனின் தளபதியான கருணாகரனால் பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டதான வரலாறு உண்டு. 1567ஆம் ஆண்டு கல்வெட்டுப் பெருமையையும் திருக்கோவலூர் பேராயிரமுடையோன் முதலி ஆட்சித்தலைவனாக 13ஆம் நூற்றாண்டளவில் இணுவிலில் அமர்த்தப்பட்டதற்கான யாழ்ப்பாணச் சரித்திரத்தில் போற்றப்படும் தகைமையையும் தன்னகத்தே கொண்டு காணப்படும் பெரும்பதியாகக் கணிக்கப்படுகின்றது.

இத்துணைத் தன்மை கொண்ட இந்த ஊரில் திருக்கோவலூர் பேர்ாயிரமுடையோன் முதலியால் தனது குலதெய்வமான காஞ்சிபுரத்துக் கந்தக்கோட்டத்து முருகனது ஆணைக்கமைய அமைக்கப்பட்ட திருத்தலமே இன்று திருமஞ்ச உற்சவங் காணும் இணுவில் கந்தசுவாமி கோவிலாகும்.



# உலகப் பெருமஞ்சமாம்
# இணுவைத் திருமஞ்சம்

தைப்பூசத் திருநாளானது முருகப்பெருமானது திருவிளையாடற் சிறப்பைப் பெற்ற நன்னாளாகும். தேவர்களை வருத்திய சூரனாதியர்களை வதம் செய்வதற்காகவும் தனது வேற் படையின் சிறப்பை சூரபத்மனுக்கு எடுத்துக் காட்டும் நோக்குடனும் தாரகாசூரன் வாழ்ந்த கிரௌஞ்ச கிரியை முருகப்பெருமான்வேல் கொண்டு பொடிப்பொடியாக்கிய நன்னாளாக இந்த தைப்பூசத்திருநாள் போற்றப்படுகின்றது. இச்சிறப்பு மிக்க நன்னாளில் கந்தப்பெருமான் திருமஞ்சமேறி அடியவர்களுக்குக் காட்சி கொடுப்பார்.

எம்பெருமானது திருமஞ்சமானது இணுவைப்பதியில் அருள் தன்மையும், வரலாற்றுச் சிறப்புத் தன்மையும், கலைத் தன்மையும் தன்னகத்தே கொண்டு காணப்படுவது எம் பெருமான் எமக்களித்த அருட் கொடையே. இத்திருமஞ்சத்தை இணுவிலில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அவதரித்த சித்தர் பெரிய சந்நியாசியார் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சந்நியாசியார் ஆண்டவனின் அருளாணைக்கமைய அமைத்தார்.

இம்மஞ்சத்தில் பவனிவரும் ஆறுமுகப் பெருமான் திருவுருவம் 1886ஆம் ஆண்டளவில் ஆலயப் பூசகரான செல்லையர் சின்னையரால் உருவாக்கப்பட்டது. தனக்குப் புத்திரப்பேறின்மை கண்ட சின்னையர் எம்பெருமானை வேண்டி புத்திரப்பேற்றை எய்துவதற்காக எம் பெருமான் திருவுருவத்தை மயில்மேல் இருந்த பாவனையில் வார்ப்பதற்கு திருவுளங் கொண்டார். பூசகரால் எம் பெருமானை ஆலய வளாகத்தில் வார்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் இருமுறை கைகூடவில்லை. இது கண்டு மனம் நொந்த பூசகருக்கு அவரதுதியானநித்திரையில்காட்சி கொடுத்தஎம்பெருமான்வண்ணார்பண்ணையில்ஸ்தபதி வீட்டில் திருச்செந்தூரில் காட்சி கொடுப்பதைப் போன்று நின்ற கோலத்தில் அமையப் போவதாகக் கூறினார். அத்துடன் அமையப் போகும் அளவுப் பிரமாணத்தையும் உணர்த்தி அருளினார். அவ்வருள் வாக்குக்கமைய உருவாகிய திருவுருவமே இன்று நாம் திருமஞ்சத்தில் காணும் திருவுருவம்.

அருள் பொங்கும் இப்பெருமானை வணங்கிய பெரிய சந்நியாசியார் என்னும் சித்தர் இத் திருவுருவத்துக்கேற்ற திருமஞ்சத்தை அமைப்பதற்கு மனங்கொண்டு எம்பெருமானை அல்லும் பகலும் மனதில் தியானித்து அத்தியானத்தின் வெளிப்பாடாக அமைக்கப்பட்டதே இத் திருமஞ்சம். முறையாக மஞ்சம் அமைய வேண்டுமென்று வேண்டுதல் செய்த சந்நியாசியாருக்கு முருகன் கனவில் காட்சி கொடுத்து மஞ்சம் செய்வதற்கான சிற்பாசாரியார்கள் குறித்த காலத்தில் இந்தியாவில் நின்றும் ஊர்காவற்றுறை துறைமுகத்தை வந்தடைவார்கள், அழைத்துவா எனப் பணித்தார். அதனோடமையாது தாம் கற்ற சிற்பக்கலையை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பில்லையே என்று மன மேங்கித் தவித்த தமிழ்நாட்டு சிற்ப வல்லுநர்களிடம் சந்நியாசியார் வடிவில் சென்று இணுவில் மஞ்சம் செய்வதற்காக ஊர்காவற்றுறைக் கரையைக் குறித்த நாளில் அடையவும் பணித்தார். குறித்த தினத்தில் ஊர்காவற்றுறை துறைமுகம் சென்ற சந்நியாசியார் சிற்பவல்லுநர்களைக் கண்டு உவகையுற்று அவர்களை இணுவிலுக்கு அழைத்து வந்து தனது தவக்குடில் அமைந்த இணுவில் கிழக்கில் மஞ்சவேலையை ஆரம்பித்ததாக ஊர் மக்கள் கூறுவர்.

மஞ்சத்தில் காணப்படும் சிற்பங்களும் அமைப்பு முறைகளும் சிற்ப சாஸ்திர விதிகளுடன் ஒப்புநோக்கும்போது விதியில் கூறப்பட்டது போன்று உருவ பேதத்தில் சிற்பியின் மனத்தை ஒரு நிலைப்படுத்தி திருவுருவங்களை மனதில் பதிய வைத்து பின்னர் பூரணப்படுத்தியதை சிற்பக் காட்சிகள் காட்டுகின்றன. இத்துணைத் தன்மை மிக்க இத்திருமஞ்சத்தில் கந்தவேள் பெருமான் ஆறுமுகங்களுடனும் பன்னிரு திருக்கரங்களுடனும் அபயவரதகரத்துடன் தங்கவேல், தங்கச் சேவற்கொடி தாங்கி நின்ற திருக்கோலத்தில் மங்கல வாத்தியங்கள் முழங்க சங்கநாதம் ஒலிக்க பக்தர்களின் அரோகரா ஒலியுடன் திருப்பவனி வரும் காட்சியைக் காண்பது எம்மனதில் நாலாயிரங் கண்படைத்திலனே இந்த நான்முகனே என அருளாளர் அருணகிரியார் ஏங்கும் எண்ணத்தைச் சித்திரிப்பதாக அமையும். அசுரர்களை அழித்து, தேவர்களைக் காத்த எம்பெருமானை அவரது திவ்விய நாளாம் தைப்பூசத் திருநாளில் திருமஞ்சத்தில் கண்டு தரிசித்து இணுவைத் திருமஞ்சமாம் உலகப் பெருமஞ்சத்தின் வடம்பற்றி இறையருள் பெறுவோமாக.

*ஞானஏந்தல் மா.ந.பரமேஸ்வரன்*

# கருத்து

## வாசகர் திருமுகம்



### எங்களையும் ஒருக்கால் எட்டிப் பாருங்கோ

எடுத்துப் பிடிக்க ஆளிருந்தால் அடுப்படியில் இருந்து அடுப்பூது வோரும் புல்லாங்குழல் வித்து வான் என அரங்குக்கு வரும் காலம் இது. இப்பொழுது பெரி தாகப் பேசப்படும் மின் நிலை யத்துக்கும் எமது பகுதிக்கும் 2 கிலோமீற்றர் தொலைவு மட் டுமே. பத்திரிகைப் பறைசாற் றலைப் பார்த்த பல பாவையர் தங்கள் கிணற்றுத் தண்ணீரிலும் ஒயில் கலந்து விட்டதைக் கண்டறிந்து இதுவரை நாங்கள் அச்சாத் தண்ணீரெனப் பருகிக் கொண்டிருக்கும் பச்சைத் தண் ணீரிலும் ஒயில் இருப்பதாகக் கூறி பணம் படைத்த பலர் பச்சை மரக்கறிகளையும் போத்தலில் அடைத்த நீரிலேயே தாங்கள் கழுவுவதாகப் பீற்றியும் திரிகின் றனர். எம்போன்றவர்கள் அச்சா அச்சா என்று எங்கள் கிணற்றுத் தண்ணீரைத் தான் இப்பவும் குடிக்கிறோம். உற்றுப் பார்த்த தில் உண்மையும் தெரிகின்றது. எது எப்படியோ வலி கிழக்கின் ஒரு பகுதியான ஊரெழுப் பகுதி யையும் குறிப்பாக மின் நிலை யத்துக்கு அருகிலுள்ள கிணறு களையும் ஒருக்காற் தாங்கள் கவனத்தில் எடுத்து குழாய் நீர் வழங்க வேண்டும். சுன்னாகம் தபாற்கந்தோரையே எங்கள் தலைப்பு முகவரியாகக்கொண்ட எங்களையும் ஒருக்கால் எட் டிப்பாருங்கோ. பெரியவர் களின் பதவியையும், பெயரை யும் குறிப்பிடும் பத்திரிகைக ளில் அப்பெருந்தகைகளின் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டால் பாதிப்பிலுள்ளோர் குறைகளைப் பகர வழியுண்டு அல்லவா?

*கவிமணி*
*அன்னைதாஸன், ஊரெழு.*


### ஒளிராத மின் விளக்குகளும் மக்கள் படும் அவலமும்

சரசாலை பருத்தித்துறை வீதியில் பிரதேச சபை அலுவலகம் முன்பாக உள்ள மின் விளக்கு பல மாதங்களாக ஒளிராமல் உள்ளது.

இது மட்டுமல்ல கனகன் புளியடிச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியிலும் பல மின் விளக்குகள் ஒளிராமல் பழுதடைந்து உள்ளன. மாலை வேலைகளில் கடைசி பஸ்ஸில் இருந்து இறங்கி பருத்தித்துறை வீதியில் செல்லும் பயணிகளும் மற்றும் பெண்கள் பிள்ளைகளும் இருட்டிலேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் திருடர்களும் பெண் பித்தர்களும் தங்கள் கைவரிசையை காட்டவும் இந்த இருட்டு உதவு கிறது. அத்துடன் இரவு வேலை வாகனங்களில் வரும் சிலர் வாகன வெளிச்சத்தை போடாமல் இருட்டிலேயே வேகமாக வருகிறார்கள். எனவே விபத்து இடம்பெறும் சாத்தியமுண்டு. இது பற்றி பல தடவை பிரதேச சபையிடமும் மின்சாரசபை யிடமும் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை. எனவே தயவு செய்து பழுதடைந்த மின் விளக் குகளைச் சீர்செய்து ஒளிரச் செய்ய அதிகாரிகள் முன் வருவார்களா?

*திருமதி ச.ஜெயராணி*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## வடக்கின் மாற்றம் பயன் தருமா?

இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால், நாட்டில் தொடர்ச்சியாக பல்வேறு மாற்றங்கள் நிகழத் தொடங்கியிருக்கின்றன. ஜனாதிபதியில் ஆரம்பித்த அந்த மாற்றம் இப்போது பல்வேறு வடிவங்களில் செயற்படுத்தப்படுகின்றது.

முன்னர் ஆட்சியில் இருந்த மஹிந்தவின் ஊதுகுழல் களாகச் செயற்பட்டுவந்த பலரையும் இந்த ஆட்சி மாற்றம் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

மாகாண, மத்திய நிர்வாகங்களில் மஹிந்தவின் காலத் தில் கடும் போக்காளர்களாக செயற்பட்டுவந்த பலர், மைத்திரி அரசின் வருகையினால் அதிகாரம் இழந்து வெறுங் கையுடன் வீதிக்கு வந்துள்ளனர். அந்த நிலைமை வடக்கிலும் ஏற்பட்டுள்ளது.

அதாவது, மஹிந்தவின் காலத்தில் வடக்கு மாகாண சபையின் சுயாதீனமான செயற்பாடுகளை அனுமதிக் காமல், பல்வேறு வடிவங்களில் முட்டுக்கட்டைகளைப் போட்டு, மாகாண நிர்வாகத்தின் செயற்பாடுகளை குழப் பியடித்து வந்த வடக்கு மாகாண ஆளுநரும், பிரதம செயலாளரும் இப்போது அந்தப் பதவிகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறார்கள். வடக்கு மாகாண முதலமைச் சரின் ஆக்கபூர்வமான நடவடிக்கை பலவற்றைக் குழப் பும் வகையில் இவர்கள் செயற்பட்டமையால் பிரதம செயலாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக் கல் செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு நிலையில், மைத்திரி அரசினால் இந்த இருவரும் அகற்றப்பட்டு அந்தப் பதவிகளில் புதியவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வடக்கு மாகாண ஆளுநராக இலங்கையின் மிக மூத்த இராஜ தந்திரிகளில் ஒருவரான பளிஹக்கார நேற்றுத் தமது பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண் டார். அதேபோன்று பிரதம செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள பத்திநாதனும் நேற்றுப் பதவியை பொறுப் பேற்றுக்கொண் டார். இவர்கள் இருவரும் இலங்கை சிவில் சேவை அதிகாரிகளாவர். இராணுவ சேவையில் உள்ளவர்களை சிவில் சேவைப் பதவிகளில் நியமிப்பதில்லை என்ற மைத்திரி அரசின் நிலைப்பாட்டுக்கு இணங்க இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாணசபை நிர்வாகமும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடமும், சர்வதேச சமூகத்திடமும் கோரிவந்த வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் பதவிகளில் மாற்றம் இப்போது நிகழ்ந்திருக்கிறது. இந்த மாற்றத்தை ஏற் படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவைகள் முயன்றபோதும் அவை பயனளிக்கவில்லை. மாறாக வடக்கு மாகாண ஆளுநராக இருந்த இராணுவ அதி காரியான சந்திரசிறியின் பதவிக் காலத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்து கூட்டமைப்புக்கு அதிர்ச்சி அளித்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த.

ஆயினும், கூட்டமைப்பு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு வழங்கிய பேராதரவின் பயனாக இப்போது இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

வடக்கு மாகாண சபையின் சுதந்திரமான செயற்பாடு களுக்கு முட்டுக்கட்டையாக இருந்த அந்த இருவரும் இப் போது அகற்றப்பட்டுவிட்டார்கள். ஆகவே, இனிமேல் மக்கள் பயனடையும் ஆக்கபூர்வமான திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மாகாண நிர்வாகத்திடம் போய்ச் சேர்ந்திருக் கிறது.

இப்போது பந்து கூட்டமைப் பின்பக்கம். இதனை அவர் கள் எப்படி அடித்தா டப் போகிறார்கள்.

**பத்தி எழுத்து**

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா.ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு?

நாட்டிலுள்ள ஒரு பகுதி மக்கள் சதாகாலமும் பிரச்சினைகளுக்குள் தள்ளப்பட்டிருக்கலாகாது என்று பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துவரும் இன்னல்களை மனதில் கொண்டு வெளியிடப்பட்ட கருத்தாக அதனைக் கொள்ளலாம்.

இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை மற்றும் சர்வதேச கருத்துப் பரிமாற்றங்களை அவதானிக்கும் எவருக்கும், பிரதமரின் இந்தக் கருத்து, புதியதோர் எதிர்காலம் தோற்றுவிக்கப்படக் கூடிய தொலைதூர வெளிச்சம் போன்றும் தெரியலாம்.

தேசிய பிரச்சினைக்கு விடிவு காண்பதற்கென கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு தரப்புகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதுண்டு. அவ்வப்போது ஆட்சியில் இருந்த கட்சிகள் தமிழர் தரப்புகளுடன் இணைந்து மேற்கொண்ட உடன்பாடுகளும் ஒப்பந்தங்களும் வீண்காலவிரயமாகவே முடிந்தன. பிரச்சினை மேலும் மேலும் பழைய புண்ணாக புரையோடியதே அன்றி தீர்வு பிறக்கவில்லை.

இதற்கு முக்கிய காரணியாக விளங்கியவை சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட போட்டி, பொறாமை மட்டுமன்றி, பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி விடப்பட்டிருந்த இனக் குரோத வெறுப்புணர்வுகளும் ஆகும்.

காலத்துக்குக் காலம் இனப்பிரச்சினையின் நிமித்தம் ஏற்பட்ட கலவரங்களும், இனப்படுகொலைகளும் கொஞ்ச நஞ்சமன்று. இனிவேறு வழியில்லை என்ற நிலையிலேயே, தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய தேவை உருவாகியது.

அந்தக் காலகட்டத்தில், இந்திய அரசின் முயற்சியில் உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம், அது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது என்பதாலோ என்னவோ, பின்னர் பதவிக்கு வந்த ஆட்சியாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒவ்வாமையாக அமைந்தது.

முப்பது ஆண்டுகாலம் அது நீடித்த பின்னர் உருவெடுத்த ராஜபக்ஷ ஆட்சியாளர்கள், சிறுபான்மை மக்களின் சகல உரிமைகளிலும் கைவைத்தார்கள். காணிகளைப் பறித்து, இராணுவமயமாக்குவதும் சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதும் அவற்றின் மூலம் சிறுபான்மையோர் தங்கள் சொந்தப் பிரதேசங்களிலேயே கலை, கலாசார சமய விழுமியங்களை இழக்கச் செய்வதும் அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

அவற்றுக்கு மத்தியிலும், நினையாப் பிரகாரமாக அல்லது தெய்வாதீனமாக, நாட்டில் ஒரு புதிய அரசியல் நாகரிகம் தோன்றியுள்ளது. இதற்கு அடிகோலிய தமிழ் பேசும் மக்களின் மிகப் பெரும் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

ஒரு காலத்திலும் இல்லாத வகையில், மத்தியில் இலங்கையின் பெரும்பான்மை இன மக்களின் முக்கிய இரு கட்சிகளும் வேறு சில கட்சிகளுடன் சேர்ந்து இணைப்பாட்சியொன்றை உருவாக்கியுள்ளன.

அடுத்துவரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் இந்த இணைப்பாட்சி தொடரும் என்று பிரதமர் கூறியிருக்கின்றார். அதுமட்டுமல்ல தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றியும் அவர் பேசியுள்ளார். ஐ.நா. ஒத்துழைப்புடன் அதற்குத் தீர்வு காண்பதற்கு தாம் விரும்புவதாக மாவனெல்லையில் நடந்த கூட்டமொன்றில் அவர் கூறியிருக்கிறார். தமிழ்த் தலைவர்கள் உய்த்து உணர்ந்து, பகுத்து ஆலோசிக்க வேண்டிய ஒரு விடயம் அது எனலாம்.

தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இணைந்து ஐ.நா. ஒத்துழைப்புடன், பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எனில், அதில் நியாயம் பிறக்க வாய்ப்புண்டு என்று எதிர்பார்க்கலாம். நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க விரும்புவதாக வும் அவர் கூறியிருக்கிறார். அவ்வாறு ஒரு தீர்வு சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் விதத்தில் உருவாகுமானால், அது நியாயமான தீர்வாக அமைய இடமுண்டு.

தமிழர் பிரச்சினை அனைத்துலக அல்லது பக்கசார்பற்ற ஒரு தலைமையின் கீழ் தீர்க்கப்பட வேண்டும் என்று கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் கருத்துத் தெரிவித்து வந்தனர். அத்தகைய நிலையில், பிரதமரின் இந்த அறிவிப்பைத் தமிழ்த் தலைவர்கள் சாதகமான முறையில் ஆராய்ந்து பார்ப்பதில் தப்பில்லை.

# இன்றைய முக்கிய தேவை அதிரடி நடவடிக்கைகளே



சேரலாதன்

### துணிந்து செயலாற்றுமா

# மைத்திரி அரசு?

மைத்திரிபாலசிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று ஒரு மாதம்கூட நிறைவு பெறவில்ல. ஆனால் அவரது தூக்கத்தைக் கெடுக்கும் வகையில் பிரச்சினைகள் அவரைச் சூழ்ந்து நிற்பதைக் காண முடிகின்றது.

எவருமே எதிர்பார்க்காத வகையில் ஜனாதிபதிப் பதவி அவரைச் சென்றடைந்தது என்னமோ உண்மைதான். என்றாலும் அந்தப் பதவியின் சுகத்தை அவர் அனுபவிப்பாரா என்பது கேள்விக்குறியாகவே மாறிவிட்டது. ஏதோவொரு வேகத்தில் தாம் செயலாளராகப் பதவி வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய அவர் ஐக்கியதேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஹெல உறுமய, மலையகத்தின் சில கட்சியினர், முஸ்லிம் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளின் ஆதரவுடன் அசைக்க முடியாதவர் என நம்பப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி அவர் அமர்ந்திருந்த ஆசனத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார். இதனால் ஜனாதிபதியும் பிரதமரும் வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கும் நிலையொன்று உருவாகியுள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறுமெனக் கூறப்படும் நாடாளுமன்ற தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நேரடியாக மோதிக் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. தேசிய அரசு ஒன்றை அமைப்பதே தமது நோக்கமென ஜனாதிபதி கூறி வருகின்ற போதிலும் தேர்தலின் பின்னரே உண்மை நிலை தெரிய வரும்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்,மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம்தொடர்பான தகவல்கள் தினமும் வெளிவந்தமுள்ளன. அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு அரசியல்வாதிகள் பெருந்தொகைப் பணத்தைஏப்பம் விட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது. இதில் மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசு மேலே கூறப்பட்ட பாதகமான செயல்களுக்கெதிராக உரிய நடவடிக்கை எதையும் இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படாத நிலையே காணப்படுகின்றது. புதிய ஜனாதிபதியிடம் இப்போதும் நிறைவேற்று அதிகாரங்கள் குவிந்துள்ளதால் அவர் குற்றவாளிகளுக்கெதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அப்படிஎதுவும் நடக்கவில்லை. சிலவேளை மஹிந்த ராஜபக்ஷ வும் மைத்திரிபால சிறிசேன வும் ஒரே கட்சியில் அங்கம் வகிப்பது இதற்குக் காரணமாகக் கூறப்படலாம். ஆனால் கட்சியின் நலனை விட நாட்டின் நலனே முக்கியமானது என்பது புதிய ஜனாதிபதிக்குத் தெரியாத விடயமல்ல.

புதிய அரசிடமிருந்து வெறும் அறிக்கைகளை மாத்திரமே மக்கள் பார்க்க முடிகின்றதே தவிர செயலில் வேகத்தைக் கூடக் காண முடியவில்லை.

மக்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பதற்கான இடைக்கால வரவு- செலவுத் திட்டமொன்று புதிய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை நிறைவேற்றி வைக்க வேண்டுமாயின் முன்னைய ஆட்சியாளர்களால் மோசடி செய்த, சூறையாடிய பெருமளவு நிதி மற்றும் சொத்துக்களைத் திரும்பப் பெற வேண்டிய கட்டாயத்திலும் தற் போதைய அரசு உள்ளது. மேலும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வரும்போது ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுவிடும். அதன் பின்னர் பெயரளவில் தான் ஜனாதிபதிப் பதவி இருக்கப் போகின்றது.

இந்தநிலையில்தற்போது இழக்கப்படும் ஒவ்வொரு நாளும் புதிய அரசுக்கு மேன்மேலும் சிக்கலை அதிகரிக்கச் செய்யவே போகின்றது. மேலும் கால அவகாசம் வழங்கப்படுமாயின் மோசடியில் ஈடபட்டவர்கள் தம்மைச் சுதாகரித்துக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்துவிடும். ஆகவே குற்றவாளிகளுக்கு எதிரான புதிய அரசின் அதிரடி நடவடிக்கைகளே நாட்டைக் காப்பாற்றுவதற்கு உதவும் என்பதை இடித்துக் கூறத் தான் வேண்டும்.

கட்டுரை



# ருசி கண்டவர்கள் மீண்டும் மஹிந்தவை அரசியலுக்கு இழுக்கப் பிரயத்தனம்

## புதிய அரசியல் கட்சியை தோற்றுவிக்கவும் முயற்சி

சிங்கள மூலம் - வசந்தப்பிரிய ராமநாயக்க
தமிழில்: வீ.எஸ்.ரி.

ஒருவர் மீது சுட்டுவிரல் நீட்டி 'திருடர்' எனக் கூறுவதால் மட்டும் குறிப்பிட்ட அந்த நபர் திருடர் என்றாகிவிடமாட்டார். ஆனால் அவர் திருடரல்ல என்று உறுதியாகக் கூறி விடவும் இயலாது. ஒருவர் மீதான துவேசம் காரணமாகவோ, அல்லது அரசியல் காரணமாகவோ சிலர் அவ்விதம் குற்றச்சாட்டை முன்வைக்கக்கூடும். ஆனால் உறுதிப்படுத்திக் கொள்ள இயலாத போதிலும், சிலர் நாட்டு மக்களது நிதியைத் தவறான விதத்தில் பயன்படுத்தி அதன் மூலம் சொத்துக்கள் சேர்த்துக் கொண்டுள்ளனர் என்பதுமட்டும்தெளிவான ஒன்று. தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இதற்குப் பொருத்தமான உதாரணமாக அமைகிறார். ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களின் பேரில் நீதிமன்றத்தால் அவர் தண்டிக்கப்பட்டாலும் கூட, இன்றும் கூட அவரை 'அம்மா' எனக் குறிப்பிட்டு ஆதரவு தெரிவிப்போர் பலர் உள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள்அதிபர்மார்க்கோஸ்தொடர்பான ஆதரவும் இதனையொத்ததே. ஆனால் மேற்குறிப்பிட்டோர் மீது குற்றம் சுமத்தும் தரப்பினர் அனைவரும் தவறிழைக்காதவர்கள் அல்லர் என்பது யதார்த்த உண்மை.

நாட்டில் புதிய அரசொன்று பதவியேற்றதையடுத்து அரசநிர்வாகத் துறைகளில் ஊழல், மோசடிகள் வீண் விரயம் என்பவற்றுக்கு எதிரான புதிய எழுச்சி அலையொன்று உருவாகியுள்ளது. மஹிந்த அரசுக்கு எதிரான நாட்டின் எதிரணி அரசியல் தரப்புக்களது முன்னெடுப்புக்களைவிட, குடிசார்சமூகஅமைப்புக்களது எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமும் வலுவும் கொண்டதாக அமைந்திருந்தன.

### செல்வாக்கை இழக்கும் நிலையில் இடதுசாரிகள்

வழக்கமாக இத்தகைய ஊழல் மோசடிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் வழக்கமுள்ள இடதுசாரி அரசியல் தரப்புக்கள், முன்னாள்ஆட்சியாளர்களதுசெயற்பாடுகளை நியாயப்படுத்தும் விதத்தில் செயற்பட்டதால் இன்று செல்வாக்கை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமக்குப் பழக்கமான கற்பனாலோகத்தில் சஞ்சரித்தபடி விமர்சனங்களை வெளியிடும் அரசியல் விமர்சகர்களும் முன்னாள் ஜனாதிபதியின் தேர்தல் தோல்விக்கு ஒரு வகையில் காரணகர்த்தாக்களே. அவர்களது நிலைப்பாட்டுக்கமைய இடம்பெற்றமாற்றம் ஒரு விபத்து, முட்டாள்தனமானது கேலிக்கிடமானது. பலர் இந்த விதத்தில் மஹிந்தவின் தோல்வியை விமர்சித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் 49 நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டுள்ள ஐ.தே.க. கட்சியால் எவ்வாறு அரசமைக்க இயலும் என்பது அவர்களது வாதம். தமது ஜனாதிபதிப் பதவியின் பிரபல்யத்தைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பலத்தைப் பெறுவதற்காக ஐ.தே.க. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான ஒரு தொகையினரை அரச தரப்புக்குள் மஹிந்த இழுத்துக் கொண்டமையை இந்த விமர்சகர்கள் மறந்துவிட்டனரே. நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணை தொடர்பாக இவர்கள் ஏன் சிந்திக்க மறந்தார்கள் என்பது புரியாத புதிரே.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆணையின்மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மைத்திரிபால தெரிவாகியுள்ளார். தேர்தல் பிரகடனத்தில்அவர் முன்வைத்த நூறு நாள்கள் வேலைத்திட்டத்துக்கு மக்கள் ஆணை கிட்டியுள்ளது என்பதே யதார்த்த உண்மை. இடம்பெற்ற தேர்தலில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐ.தே.க.கட்சியினது மட்டுமன்றி அதற்கு மேலதிகமாக தமிழ் மக்களை, முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், ஜே.வி.பி., சரத் பொன்சேகாவின் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்களில் ஒரு தரப்பினர் எனப் பல தரப்புக்களது ஆதரவும் மைத்திரிபாலவுக்குக் கிட்டியிருந்தன.

இதன் மூலம் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏனைய கட்சிகளது உறுப்பினர்களையும் இணைத்து அமைச்சரவையொன்றை நிறுவப் புதிய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை கிட்டியுள்ளது என்ற நிலைப்பாடு தவறான ஒன்றல்ல. இதனால் 2010 ஆம் ஆண்டின் நாடாளுமன்றப் பெரும்பான்மை குறித்துத் தர்க்கிப்பது யதார்த்தபூர்வமானதல்ல. அது மட்டுமன்றி 2010 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலம்ஈட்டிக்கொண்ட சுதந்திரக் கட்சியின் இன்றைய தலைமைப்பதவியும்மைத்திரிபால வசமே உள்ளதென்பதும் விசேடமானதொரு அம்சமாகும். இதனாலேயே இன்றைய அரசை இணைப்பாட்சி அரசெனக் குறிப்பிட முடிகிறது.

### வரலாற்றில் நடக்காதது

தற்போது இடம்பெற்றுள்ள அரசியல் மாற்றம் போன்றதொன்று முன்னெப்போதும் இடம் பெற்றதில்லை. ஆனால் 'மாற்றம்' என்பது ஒரு தலைப்பாக ஆகியிருப்பது முற்றுமுழுக்க நாட்டின் பொதுமக்களது எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே.

பல தரப்பினர் அங்கம் வகிக்கும் இன்றைய அரசில் எல்லோர் மத்தியிலும் நல்லிணக்கப்பாடு நிலவும் என எதிர்பார்க்க இயலாது. ஆதலால் சில குறைபாடுகள் ஏற்படக் கூடும். நாம் இவ்வேளையில் அரசின் 100 நாள்கள் வேலைத்திட்ட முன்னேற்றங்கள் குறித்து விமர்சிக்கவேண்டுமே தவிர அரசால் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் குறித்து விமர்சிப்பதைத் தவிர்ப்பது நன்று. அரசின் 100 நாள்கள் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்ககட்சிபேதங்களைக்கைவிட்டு உதவுவதாக எதிர்க்கட்சித் தலைவரும் வாக்குறுதி அளித்துள்ளார். அதுவரவேற்கத்தக்கதொரு புதிய அரசியல் கலாசாரமாகக் கொள்ளத்தக்கது. அந்த வகையில் எண்ணிக்கை அடிப்படையில் நாடாளுமன்றத்தில் இன்றைய புதிய அரசைசிறுபான்மைப் பலம் கொண்டதாகக் கருதினாலும், இன்றைய சூழலில் அதுசக்திமிக்க அரசாகக் கருதத்தக்கதே.

### அரசியல் தெரியாதவர்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் இன்றைய அரசியல் யதார்த்தத்தை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமானதொன்றாகும். நாட்டுக்காகக் கடுமையாக உழைத்த ஜனாதிபதியொருவர், தமது இரு தம்பிமார், மகன்மார் மற்றும் தம்மைச் சூழ இருந்தோரால் பதவியிழக்க நேர்ந்த பரிதாபம் இடம்பெற்றுள்ளது. அவரது சகோதரர்களில் ஒருவர் இராணுவ செயற்பாடுகளில் திறமை வாய்ந்தவராய் இருந்தபோதிலும் அரசியல் தெரியாதவர். மற்றைய சகோதரர் தாமே சகலதையும் அறிந்த திறமைசாலி' என்ற நிலைப்பாட்டில் செயற்பட்டவர். இவ்விரு சகோதரர்களும் மற்றவர்களது கருத்துக்களை என்றுமே மதித்ததில்லை. அனுபவம்மிக்க அரசியல்வாதியான மஹிந்த, இந்தக் குடும்பத் தரப்புக்களின் மத்தியில் சிறைப்பட்டிருந்தார். அவரைச் சுற்றி அமர்ந்திருந்து சுகபோகங்களை அனுபவித்த தரப்பினர்கள் தமது எதிர்கால அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க தொடர்ந்தும் மஹிந்தவை அரசியலுக்குள் சிக்க வைக்கத் தயார்ராகி வருகின்றனர்.

> தற்போது இடம்பெற்றுள்ள அரசியல் மாற்றம் போன்றதொன்று முன்னெப்போதும் இடம் பெற்றதில்லை. ஆனால் 'மாற்றம்' என்பது ஒரு தலைப்பாக ஆகியிருப்பது முற்றுமுழுக்க நாட்டின் பொதுமக்களது எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே.

மஹிந்த மக்களைக் கவரத்தக்க திறன் கொண்டவர்தான். ஆனால் ஜனாதிபதித் தேர்தலை அண்டிய நாள்களில் அவரைச் சூழ இருந்தோரால் நாட்டின் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் பதற்றமுமானதொரு உணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. நாடு பிளவுபடப் போவதாக பொய்ப் பரப்புரை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனாலேயே மத்திய தர பொதுமக்கள் மத்தியில் 'ஆசியாவின் வசந்தத்தை' உருவாக்கியாக வேண்டும் என்ற மன வைராக்கியம் உருப்பெற்றது. இதனைப் புரிந்துகொள்ளாமல் மஹிந்தவின் சகோதரக் கூட்டுத் தரப்பு மஹிந்தவைத் தம்வசப்படுத்தி யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள இயலாத நிலைக்கு அவரை இட்டுச் சென்றிருந்தனர்.

மஹிந்தவைச் சுற்றி அமர்ந்திருந்து சுகபோகங்களை அனுபவித்த தரப்பினர் ஐ.தே.க.கட்சி, சுதந்திரக்கட்சி என்பவற்றுக்குச் சவாலாக உருவெடுக்கும் விதத்தில் புதிய கூட்டணியொன்றை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கி எதிர்வரும் பொதுத் தேர்தலைஎதிர்கொள்ளவேண்டுமென மஹிந்தவுக்குக் கயிறு கொடுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

மஹிந்தவுக்கான சிங்கள மக்களது ஆதரவு இன்னமும் நலிவடைந்துவிடவில்லையென அவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கி மைத்திரிபாலவும், ஐ.தே.க.கட்சிக்குத் தலைமைதாங்கி ரணிலும் தேர்தலை எதிர்கொண்டாலும், தேர்தல் முடிந்ததும் இப்போதுள்ளதைப் போன்று கூட்டாட்சியொன்றாக, ஜனாதிபதியாகமைத்திரிபாலவும் பிரதமராக ரணிலும் செயற்பட்டு நாட்டின் நல்லாட்சிக்காகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

# பல்சுவை

# தைப்பூசம்

மனித வாழ்வு சவால்கள் நிறைந்தது. திட்டமிடப்பட்ட உயர் நோக்கம் கொண்ட வாழ்வு. வெறும் புலன் இன்பங்கள் மட்டுமன்றி அறிவும் உணர்வும் கலந்து விளங்கும் வாழ்க்கை நெறியாகும்.



மானிட வாழ்வை வாழ்வாங்கு வாழும் முறையில் வழிப்படுத்தவே சமயங்கள் யாவும் தோன்றின. தைப்பூச நன்னாள் சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெருநாளாகும். உலக சிருஷ்டி ஆரம்பமானது இந்தத் தினத்திலேதான். சிவசக்தி ஐக்கியமான முருகப் பெருமான் மாட்சிமை பெறும் தினமாகவும் இது அமைகின்றது.

ஒரு சமயம் வாயு பகவானும் – வருணதேவனும், அக்கினி தேவனும் தமது வலிமையைப் பற்றி வெறுமை பேசித் தம்முள் போட்டியிட்டனர். அப்பொழுது அவர்கள் அருகில் சிறு துரும்பு காணப்படவே வாயுபகவான் அதனை அசைக்க முயன்று தோற்றார். அக்கினிதேவன் எரிக்க முயன்று தோற்றார். வருணபகவான் அதனை நனைக்க முயன்று தோற்றார். மூவரும் இது கண்டு திகைத்து அசைவற்று நின்றனர். அப்போது நாரத முனிவர் அங்கு தோன்றி எல்லோருக்கும் மேலான பரம்பொருள் சக்தியைப் பற்றி எடுத்துரைத்து அவர்களது கர்வத்தை அடக்கினார். தைப்பூச நன்னாளில் அவர்களது அருட்சக்தி அதிகரிக்க அருள் செய்வதாக ஆண்டவன் வாக்களித்தார்.

பெண் பிள்ளைகளுக்கு மூக்குக்குத்துதல் மற்றும் நற்காரியங்களை நாள்காரியமாக ஆரம்பித்தல் திருமணத்துக்குப் பெண் பார்த்தல் முதலியவற்றுக்கும் இந்தத் தினத்தைத் தேர்ந்தெடுப்பர். தமிழகத்தைப் போலவே மலேசியாவிலும் தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று முருகன் வெள்ளிரதத்தில் கோலாகலமாக பவனி வருகிறார். உலக நாடுகளில் தைப்பூசத்துக்காக அரச விடுமுறை விடப்படுவது மலேசியாவில் மட்டுமே.

தைப்பூசநாள் விரதக் கட்டுப்பாடுகள் குறைந்த ஆனால் வழிபாடு, திருவிழா இவற்றோடு கூடிய இனிய ஒரு கொண்டாட்டமாக மலர்கிறது.

வசந்தராணி சண்முகம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## சிறந்த மனிதன்

நீங்கள் ஒருவரது உண்மையான குணத்தை அறிய விரும்பினால், அவரது மகத்தான காரியங்களைப் பார்த்து முடிவுக்கு வராதீர்கள். முட்டாள்கூட எப்போதாவது சிலநேரங்களில் மகத்தான மனிதனாக முடியும். ஒருவன் மிகமிகச் சாதாரணச் செயல்களைச் செய்யும்போது கவனியுங்கள். அவையே அவனது உண்மையான குணத்தைத் தெரிவிப்பவை. சில குறிப்பிட்ட நேரங்கள் மிகச் சாதாரண மனிதர்களைக்கூட ஒருவகையான மகத்தான நிலைக்கு உயர்த்தி விடும். எந்தச் சூழ்நிலையிலும் யாருடைய குணம் எப்போதும் உயர்ந்ததாகவே இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன்.

# கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் | மன்னார் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 450 | 700 |
| நண்டு | 200 | 300 | 300 | 300 | 400 |
| கணவாய் | 450 | 500 | 500 | – | 550 |
| பாரை | 450 | 550 | 600 | 370 | 500 |
| சுறா | 450 | 600 | 600 | – | 500 |
| சீலா | 250 | 450 | 300 | – | 400 |
| விளை | 500 | 500 | 400 | 350 | 400 |
| முரல் | 250 | 300 | 300 | – | 350 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 300 | 300 |
| கிழாக்கன் | 200 | 400 | 400 | – | 500 |
| ஓரா | 350 | 400 | 300 | – | 350 |
| திரளி | 150 | 250 | 200 | – | 250 |
| நகரை | 150 | 300 | 200 | 250 | 250 |
| சூடை | 100 | 100 | 100 | 70 | 150 |
| ஓட்டி | 150 | 200 | 200 | 250 | 150 |
| திருக்கை | 150 | 250 | 100 | 140 | 350 |
| பாலை | 150 | 400 | – | – | 250 |
| வாளை | 350 | 300 | – | 200 | 150 |
| கொய் | 80 | 100 | 100 | – | 150 |
| மதனம் | 150 | 230 | – | 200 | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 50 | – | 40 | 80 | 40 | 60 | 35 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 140 | 90 | 120 | 70 |
| கரட் | 200 | 120 | 240 | 140 | 200 | 200 | 180 | 230 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 40 | 60 | 60 | 45 | 30 |
| பயிற்றை | 200 | 160 | 180 | 140 | 240 | 200 | 160 | 110 |
| பாகல் | 120 | 120 | 150 | 140 | 200 | 220 | 200 | 150 |
| கருணைக்கிழங்கு | 70 | 50 | 60 | 60 | 80 | 80 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 120 | 80 | 70 | 70 | 80 | 80 | 80 | 50 |
| சி.வெங்காயம் | 40 | 90 | 100 | 120 | 100 | 130 | 100 | 60 |
| பூசணி | 100 | 70 | 80 | 80 | 100 | 90 | 100 | 60 |
| தக்காளி | 180 | 200 | 200 | 240 | 240 | 320 | 220 | 250 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 120 | 80 |
| கீரை | 15 | 40 | 20 | 20 | 20 | 30 | 40 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 40 | – | 30 | 40 | 30 | 20 | 10 |
| பச்ச மிளகாய் | 300 | 300 | 350 | 400 | 300 | 600 | 600 | 400 |
| புடோல் | 100 | 100 | 80 | 100 | 120 | 120 | 120 | 90 |
| கோவா | 100 | 90 | 100 | 90 | 120 | 160 | 80 | 80 |
| வெண்டி | 180 | 110 | 100 | 100 | 120 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 | 200 | 200 | 240 | 170 |
| லீக்ஸ் | 200 | 200 | 140 | 240 | 280 | 250 | 260 | 250 |
| தேங்காய் | 50 | 60 | 45 | 40 | 40 | 40 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 60 | 70 | 80 | 65 | 50 |
| தேசிக்காய் | 40 | 50 | 60 | 60 | 60 | 60 | 60 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 30 | 20 | 10 | 20 | 20 |
| கறிமிளகாய் | 300 | – | – | 300 | 240 | 220 | 350 | 250 |
| இராசவள்ளி | 100 | 100 | – | 90 | 120 | 140 | 140 | 80 |
| பனங்கிழங்கு | 05 | 05 | 02 | 06 | 04 | 05 | – | 03 |

## நாளை

**தை-21 புதன்கிழமை**

**04.02.2015**

திதி: பிரதமை: முழுவதும்

நட்சத்திரம்:

ஆயிலியம் மு.இ.11.41 வரை

சுபநேரம்: 05.05-06.35 வரை

இராகுகாலம்:12.35-02.05 வரை

சுதந்திர தினம்

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 3 | | | 4 | | 7 | 2 |
| 1 | 6 | 4 | | | 7 | | | |
| | 5 | | 9 | | 8 | | 4 | |
| 9 | | | | 8 | 2 | | 1 | 4 |
| | | | | | | | | |
| 6 | 2 | | 4 | 5 | | | | 7 |
| | 1 | | 8 | | 9 | | 3 | |
| | | | 2 | | | 7 | 6 | 8 |
| 3 | 7 | | 6 | | | 9 | 2 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 8 | 5 | 1 | 6 | 3 | 4 |
| 6 | 5 | 4 | 7 | 3 | 2 | 9 | 1 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 |
| 8 | 7 | 6 | 1 | 9 | 3 | 5 | 4 | 2 |
| 4 | 9 | 3 | 5 | 2 | 8 | 7 | 6 | 1 |
| 2 | 1 | 5 | 4 | 6 | 7 | 3 | 8 | 9 |
| 9 | 4 | 1 | 3 | 7 | 5 | 8 | 2 | 6 |
| 3 | 6 | 2 | 9 | 8 | 4 | 1 | 7 | 5 |
| 5 | 8 | 7 | 2 | 1 | 6 | 4 | 9 | 3 |

# சோதிடம்




இந்த எண்காரர்கள் செவ்வாயுடன்புதன் சேர்ந்த ஆதிக்கப் பலன் கொண்டவர்கள். இவர்கள் உயரமாகவும், சிவப்பாகவும் இருப்பர். கண்கள் பெரிதாக தாமரை இதழ்போல இருக்கும்.
உடலில் உறுதியும் மனத்தில் திடமும் இருக்கும். துணிச்சலும், சுறுசுறுப்பும் உண்டு. விளையாட்டில் திறமை இருக்கும் எவராயிருந்தாலும் எதிர்த்துப் போராடுவர். மரியாதையோடு வாழ விரும்புவர். பிறர் துன்பத்தை ரசிக்கவும் செய்வர். நூல்கள் நிறைய படிப்பர். தானே நுண்ணறிவை முயற்சியால் அடைவர். தனியாக இருக்க பிரியப்பட்டாலும் நண்பர் அதிகமாக இவருடன் சேருவார்கள். அரட்டையடிப்பதில் நேரம் அதிகம் செலவிடுவர். சுய நலம் இருக்கும்.
வசதியானகுடும்பத்தில்பிறந்து செல்வாக்குடன் வளருவர்.

## கூட்டெண் பலன்கள் 9-5

காதல் விவகாரம் உண்டு. அழகுணர்வுள்ள இவர்கள் கண்டவுடன் காதல் வசப்படுவர். பொருளாதாரத் தட்டுப்பாடு வராது.
இவர்கள் நல்ல கல்வி கற்றவராவர். பட்டங்கள் பெறுவர். அரசு, தனியார் அலுவலகத்தில் பெரும் அதிகாரிகளாக இருப்பர். ஓவியக் கலையில் தேர்ச்சி பெறுவர். கணினி, கணிதம் பிற விஞ்ஞானம் நன்கு படிக்கலாம். சிறந்த விளையாட்டு வீரராகலாம். சினிமாவிலும் நடிப்பு முதலிய கலை சார்ந்த தொழில்களைச் செய்து வாழ முடியும்.
வெப்ப மிகுதியால் வயிற்றுவலி ஏற்படும். நரம்புத்தளர்ச்சி இருக்கும். கட்டிகள், காய்ச்சல், பித்த வாந்தி போன்ற நோய்கள் தாக்கக்கூடும்.

## கூட்டெண் பலன்கள் 9-6

இந்த எண்காரர்கள் செவ்வாயுடன் சுக்கிரன் சேர்ந்த ஆதிக்கப் பலன் கொண்டவர்கள். உயரமாகச் சதைப்பிடிப்புடன் இருப்பர். பெண்மை கலந்த தோற்றம் உள்ளவர்கள். நல்ல நீண்டமைந்த புருவங்கள், அடர்ந்த தலைமுடி உடையவர்கள்.
மகிழ்ச்சியாக எப்போதும் இருப்பர். உல்லாசமாகக் கேளிக்கையில் பொழுதைப் போக்குவர். இவர்கள் உலக வாழ்வில் சுகம் அனுபவிப்பதையே பெரிதும் விரும்புவர்.
இதற்கு மாறாக வறட்டு வேதாந்தம் பேசினால் இவர்களுக்குப் பிடிக்காது. நல்ல கவிதை, நயமான நகைச்சுவைப் பேச்சு, பொழுது போக்கான அரட்டை இவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.
தெய்வ நம்பிக்கை உண்டு. நியாயத்தை எல்லோரும் மதிக்க வேண்டும் என்பர். எல்லோரும் வாழ்வில் மேம்பாடடைய எண்ணுவர். ஆலோசித்தே எதையும் செய்வர். மிகவும் நல்லவர்கள். தவம், தியானம் செய்து தத்துவப்படிவாழ்பவர்கள் இடைவிடாமல் முயன்று எதையும் அடைய நினைப்பர்.
கண்டதும் காதல் கொள்ளும் போக்கும், எவரையும் எதையும் லட்சியம் செய்யாமல் மணம் முடிக்கும் துணிவும் உள்ளவர்கள். நல்ல துணை அமையும். பணம் காசு தாராளமாகச் சம்பாதிப்பார்கள்.
இவர்களுக்குக் கலையும் கலை சார்ந்த தொழில் தான் ஏற்றவை. சினிமாவில் கதை வசனம் பாடல் எழுதலாம். சொந்தமாகப் படம் எடுக்கலாம். பிரமிக்க வைக்கும் பேச்சாற்றல் இருக்கும். அரசியலில் சேர்ந்து பெரிய பதவியை அடையலாம். அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்களாக, நகைக்கடை முதலாளிகளாக ஆகலாம்.
நீரிழிவு, வெப்பப் பாதிப்பால் வரும் நோய்கள், தொண்டை, கண் கோளாறு, சிறுநீரகக் கேடு, வாத பாதிப்பு, இதயக் கோளாறு உண்டாக வாய்ப்புகளுண்டு. வயிற்றுவலி தாக்கக் கூடும்.

# திருமணம் ஆகப்போகும் பெண்ணே...

திருமணம் என்பது ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் மிக முக்கியமான அத்தியாயம் ஆகும். ஒவ்வொரு பெண்ணும் ஆயிரம் கனவுகளோடு அந்தப் புது வாழ்க்கைக்குள் காலடி எடுத்து வைப்பாள். புது வாழ்க்கை, புதுச் சூழ்நிலை, புது மனிதர்கள் என மற்றொரு உலகத்துக்குப் பயம் மற்றும் பதற்றத்துடன் தான் ஒவ்வொரு பெண்ணும் நுழைகிறாள். அப்படி நுழையும் போது அவர்களுக்குப் பல்வேறு அனுபவங்கள் கிடைக்கும். அது நல்லதாகவும் இருக்கும், கெட்டதாகவும் இருக்கும். காதல் திருமணமோ அல்லது பெரியோரால் நிச்சயிக்கப்படும் திருமணமோ, அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதோ அல்லது பூமியில் நிச்சயிக் கப்பட்டதோ, உங்கள் தாயின் வழி காட்டல்கள் உங்களின் புது வாழ்க்கையை இன்னும் எளிதாக்கும். உண்மையான காதல் என்பது பாசம், சுயநலமின்மை, நன்றி மற்றும் அதனுடன் சுலபமாக பயணிப்பதே என்ற பாடத்தை தன் மகளுக்கு ஒரு தாய் கற்றுக் கொடுக்க வேண்டும். தன் கணவன் மீது, தன் கணவனுடனான உறவின் மீது, தன் மீதே நிபந்தனையற்ற காதலைக் கொண்டிருக்க வேண்டும் எனத் தன் மகளுக்கு தாய் கற்றுக் கொடுக்க வேண்டும்.



இதனால் ஆரோக்கியமான உறவு முறைக்கு இது அவளைத் தயார் படுத்தும். திருமணமான முதல் சில மாதங்களில் அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும். குறிப்பாக, அது பெரியோரால் நிச்சயித்த திருமணம் என்றால். இப்படிப்பட்ட திருமணத்தில் கணவனை குடும்பத்தார் தேர்ந்தெடுப்பார்கள். கணவனின் நல்லது கெட்டது என அனைத்தையும் அந்த பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த சூழ்நிலைகளில், முதலில் தன்னை ஒத்துப் போகச் செய்து, பின் தன் சொந்தக் குறைபாடுகளை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தைப் பெற, தன் மகளுக்கு தாய் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்படி செய்வதால் அவள் தன் கணவனின் குறைபாடுகளையும் சுலபமாக ஏற்றுக் கொள்வாள். எவருமே முழுமையாக ஒழுங்கானவர்கள் அல்ல என்பதையும்புரிந்து கொள்வாள். திருமண வாழ்க்கை என்பது விட்டுக் கொடுப்பதே தவிர வெட்டி விடுவதல்ல. – சந்தோஷமான, ஆரோக்கியமான, நீடித்து நிலைக்கும் திருமண வாழ்க்கைக்கான இரகசியங்கள் தான் உங்கள் தாயிடமிருந்து நீங்கள் பெறும் பெரிய பரிசாகும். அதனைக் கற்றுக் கொண்டு வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்ளுங்கள்.




# பெண்களுக்கு காதல் தோல்வியா?



காதல் இரண்டு வகைப்படும். ஒன்று திருமணத்திற்கு முன், இன்னொன்று திருமணத்துக்குப் பின். இந்த இரண்டு வகைகளாலும் காதல் பிரியும் போது, ஏற்படும் துயரத்தில் இருந்து பிரிவது என்பது மிகவும் கடினம். அப்படிப்பட்ட காதல் பிரிவுத் துயரத்தில் இருந்து மீள்வதற்கு ஒருசில வழிகள் உள்ளன. ஆரம்பத்தில் எம் துணைவர் இன்னொரு பெண்ணிடம் தொடர்பு கொண்டிருப்பதை நம் மனம் ஏற்காது. முதலில் நம்ப மறுக்கும். நாம் இருக்க வேண்டிய இடத்தில் இன்னொருவர் என்பதை முற்றிலும் மனம் ஏற்க மறுக்கும். பிரிவு நிச்சயம் என்று தெரிந்த பின் ஆத்திரத்தை அடக்க இயலாது போகும். உடல் நிலை மோசமாக மாறும். எந்தச் செயலையும் செய்ய முடியாது. வேலைக்கு செல்லாமலும், அன்றாட வேலைகளைச் செய்ய முடியாமலும், எப்போதும் காதல் நினைவையே மனம் நாடும். நடந்தவற்றையே நினைத்து சிந்தித்து கொண்டிருக்கும். பின்னர் பொருள்களை தூக்கி உடைப்பது, கத்துவது, அனைவரிடமும் சண்டை போடுவது மற்றும் தன் சுய கட்டுப்பாட்டை மீறி நடந்து கொள்வது போன்றவைகள் நிகழும். அழுது புலம்புவர். சில நாள்களுக்கு பின் இந்த நிலை மாறும். ஆனால் மனதில் வலி மட்டும் வேரூன்றி இருக்கும். இந்த நிலை போகப் போகச் சரியான முடிவுகளை எடுக்க வழிவகுக்கும். ஆரம்பத்தில் வன்முறை செயலால் ஆத்திரம் கொண்டு, பின் அந்த வலியிலிருந்து மீண்டு, மனமானது கல்லாகி, ஒரு சாதாரண நிலையை அடைந்திருக்கும். இந்த நிலையில் தான் பொதுவாக நீங்கள் சமரச கருத்துத் தொடங்குவது அல்லது விவாகரத்து பற்றிய முடிவு எடுப்பது நடக்கும். ஆழமான காயம் கொண்டிருந்தாலும், நடைமுறை வழக்கிற்கு ஏற்றவாறு முடிவு எடுப்பது நல்லது. அதை விட்டு பழி வாங்குவது என்பது முட்டாள்தனம். ஆகவே இந்த நேரத்தில் துயரத்திலிருந்து வெளிவர வாழ்க்கையின் இலக்குகளை அடைய மிகுந்த ஆர்வத்தைக் காட்டலாம் அல்லது திருமண வாழ்க்கையை முடித்துக் கொள்வதை பற்றி யோசித்து முடிவெடுக்கலாம்.


# சிறுவர்/இளவல்




## காகமும் சுடரொளியும்

கா... கா.... என்று கத்திக்கொண்டு அந்தக் காகம் பறந்து வந்தது. அருகிலுள்ள மரக்கிளையில் அமர்ந்தது.
சுடரொளி அந்தக் காகத்தைப் பிடிக்க ஓடினான். உடனே அது பறந்தது. சுடரொளி திரும்பி வந்தான். அந்தக் காகம் மீண்டும் அங்கு வந்து அமர்ந்தது. சுடரொளி தான் தின்று கொண்டிருந்த வடையைப் பிய்த்துக் காகத்துக்குப் போட்டான்.

காகம் வேகமாகப் பறந் து வந்தது. வடையைக் கொத்திக் கொண்டு பறந்தோடியது. சுடரொளிக்கு அந்தக் காகத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. வெகுநேரம் காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் வரவேயில்லை.



இரண்டாம் நாள் அந்த இடத்திற்கு, அதே நேரத்திற்கு அந்தக் காகம் வந்தது. அங்கும் இங்கும் நடந்தது. இன்று அந்தக் காகம் கைக்கு எட்டும் தொலைவுக்குள் நடந்து வந்தது. சுடரொளி தன்னிடம் இருந்த நிலக்கட லையை காகத்தின் முன் வீசினான். காகம் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு கடலையாகக் கொத்தித்தின்றது. சுடரொளி அருகில் சென்றதும் உடனே பறந்தோடியது.
மூன்றாம் நாளும் அந்தக் காகம் அந்த இடத்துக்கு, அதே நேரத்துக்கு வந்தது. இன்று அச்சப்படாமல் காகம் சுடரொளியின் அருகில் வந்தது. சுடரொளியின் கையை ஆவலோடு பார்த்தது. சுடரொளி வீட்டிற்குள் சென்று அரிசியை எடுத்து வந்து போட்டான். காகம் பொறுமையாக ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கித் தின்றது. சுடரொளி காகத்தைப் பிடிக்க எழுந்தான். காகம் பறந்தோடியது.



ஒவ்வொரு நாளும் காகம் சரியான நேரத்துக்கு வந்தது. சுடரொ ளியும் காகமும் நண்பர்களானார்கள். சுடரொளி சொல்லுவதைக் கேட்டுக் காகம் புரிந்துகொண்டது போலத் தலையை ஆட்டும்.
சரியான நேரத்துக்கு வரும் காகத்தைக் கண்டு சுடரொளி வியந்தான். காகத்தால் அது எப்படி முடிகிறது? மணிக்கூடு இல்லை, பேசத் தெரியாத, எழுதத் தெரியாத, அந்தக் காகம் சரியான நேரத்துக்கு எப்படி வந்து போகிறது. சுடரொளி வியந்தான்.
தனது நண்பனான காகத்தைப் போல, தானும் சரியான நேரத்துக்குப் பள்ளிக்குச் செல்வது, அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் தொடங்குவது என முடிவு எடுத்துக் கொண்டான்.சரியான நேரத்துக்குப் பள்ளிக்கு வந்து அனைத்தையும் முறையாகச் செய்யும் சுடரொளியை அனைவரும் பாராட்டினார்கள்.




## உங்களை எல்லோரும் நேசிக்க வேண்டுமா?

எங்களை நாங்களே நேசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.அப்போது தான் மற்றவர்களை எங்களால் நேசிக்க முடியும். எப்போதும் மற்றவர்களிடம் குறை காண முயலாதீர்கள்.அவ்வாறு காணும் போது மற்றவர்கள் எம்மை விட்டு தூர விலகி விடுவார்கள். அதனால் தாழ்வு ஏற்படலாம். மன அழுத்தத்துக்கு உட்பட்டு காலப் போக்கில் அது ஒரு வகை மன நோயாக மாறிவிடலாம். நாம் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ நேரான சிந்தனை மட்டுமல்ல பிறரை மதித்துப் பாராட்டும் பெருந்தன்மையுடன் கூடிய திறந்த மனதும் அவசியமாகும்



1. நட்புணர்வுடன் பழகுங்கள்.
2. நன்கு கவனித்துக் கேட்பவராக இருங்கள்.
3. தன்னம்பிக்கையுடன் இருங்கள்.
4. பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள்.
5. வெளிப்படையாகவும் மனந்திறந்தும் பேசுங்கள்.
6. கர்வம் கொள்ளாதீர்கள்.
7. பிறரை ஒருபோதும் விமர்சிக்காதீர்கள்.
8. கனிவற்ற மொழிகளைப் பேசாதீர்கள்.
9. சகோதரத்துவத்தை நம்புங்கள்.
10. மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.
11. மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்.
12. இலட்சிய ஆர்வத்துடன், சுறுசுறுப்பாகச் செயற்படுங்கள்.
13. ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.
14. மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுங்கள்.
15. பிறரின் வெற்றியைக் கண்டு மகிழ்வடையுங்கள்.
16. பிறரது தோல்வியில் இலாபமடைய முயலாதீர்கள்.
17. எல்லோருக்கும் இன்சொல்லையும் புன்முறுவலையும் வழங்குங்கள்.
18. எப்போதும் மரியாதையுடனும், பண்புடனும் நடந்து கொள்ளுங்கள்.
19. பிறருடன் உரையாடும் போது, நீங்களே பேசிக் கொண்டிருக்காதீர்கள்.
20. எவரையும் காயப்படுத்தும் வகையில் நகைச்சுவையாகப் பேசாதீர்கள்.
21. பிறரிடம் உள்ள நற்குணங்களை இனங்காணுங்கள்; அவர்களிடமுள்ள குறைகளைத் தேடாதீர்கள்.
22. பிறரின் தவறுகளை மன்னித்து மறந்து விடுங்கள்; ஒருபோதும் அவர்கள் செய்த நன்மைகளை மறக்காதீர்கள்.
23. சோதனையான காலங்களின்போது, உங்களைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ளுங்கள்.
24. உயர்வு தாழ்வு பாராது மரியாதையுடனும், நட்புணர்வுடனும் நடந்து கொள்ளுங்கள்.
25. எப்போதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்.

செய்திகள்

# மஹிந்தவிடம் கொடுக்கப்பட்ட புலிகளுடைய பணம் எங்கே?

### விசாரணை ஆரம்பிக்கப்படும் என்றார் ரணில்

கொழும்பு, பெப். 3

இறுதிப் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பெருமளவு பணம் மீட்கப்பட்டது. அந்தப் பணம் மஹிந்த அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் விரைவில் விசாரணை ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நேற்று முன்தினம் மாவனெல்லையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த பல ஆண்டுகளில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து விசாரிக்கப்படும். அவர்களின் நிதி மற்றும் முன்னைய அரசுடன் வைத்திருந்த தொடர்புகள் குறித்தும் விசாரணை நடத்தபப்படும் – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளின் பெருந் தொகைப் பணத்துக்கு என்ன நடந்தது என்பதை அறிய அரசு விரும்புகின்றது. ஊழல் விசாரணைகளின் ஒரு பகுதியாக அது நடைபெறும். முன்னைய அரசு நாம் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பதாகத் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வந்தது. ஆனாலும் அவர்களே விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தனர்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளின் கப்பல்கள் குறித்த தகவல்கள் பெறப்பட்டுள்ளன. போர் முடிந்த பின்னர் கண்டெடுக்கப்பட்ட தங்கம் மற்றும் பணத்துக்கு என்ன நடந்தது என்று விசாரணை செய்யப்படும். வடக்கில் உள்ள மக்களிடம் அது தொடர்பான ஆதாரங்கள் திரட்டப்படும். இது ஒரு பெரியளவிலான விசாரணையாக இருக்கும்"– என்றும் தெரிவித்தார். (ற–5)

## சுதந்திரதின அணிவகுப்பில் 5 ஆயிரம் படைத் தரப்பு

சுதந்திர தின அணிவகுப்புக்கு பொலிஸ் உட்பட முப்படைகளைச் சேர்ந்த 5 ஆயிரம் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தவுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தின் பதில் பணிப்பாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர, "பத்தரமுல்ல நாடாளுமன்ற கட்டட தொகுதிக்கு முன்னால் நடைபெறவுள்ள சுதந்திர தின நிகழ்வுக்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்"– என்று குறிப்பிட்டார். (ற)


**பகுதிநேர எழுதுநர் பதவி**

**தகைமைகள்**

1. பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்
2. வயதெல்லை: 20 – 35 வரை
3. வசிப்பிடம்: வைத்தியசாலையில் இருந்து 7 கிலோ மீற்றர் சுற்றுவட்டப் பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
4. கல்வித் தகைமைகள்:
   * க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியெய்திருக்க வேண்டும்.
   * கணினிச்சான்றிதழ்
   * சேவை அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
5. வேதனம் பேசித்தீர்க்கப்படும்
6. நியமனம்: ஒப்பந்த அடிப்படையிலானது

மேற்குறிப்பிட்ட விவரங்கள் உள்ளடங்கியதாக சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடனும் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளுடனும் 10.02.2015ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு வைத்தியசாலை காரியாலயத்துக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**தலைவர்**
ஊழியர் நலன்புரி சிக்கனக் கடன் கூட்டுறவுச்சங்கம்,
ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை.
(C19244) (12.7)


# மைத்திரி - ரணில் பட்ஜெட் யானை பசிக்கு சோளப் பொரி

### தனியார் ஊழியர்கள் கைவிடப்பட்டுள்ளனர்

### புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.3

மைத்திரி அரசின் வரவு – செலவுத் திட்டம் யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றது என்று தெரிவித்துள்ளது புதிய ஜன நாயக மாக்ஸிச லெனினிசக் கட்சி.

"மைத்திரி – ரணில் சமர்ப்பித்த இடைக்கால வலவு – செலவுத் திட்டத்தில் மக்கள் எதிர்பார்த்த அளவு விலைக் குறைப்பு இடம்பெறவில்லை. ஒரு ரூபா விலைக் குறைப்பானது பெயரளவானது. தேர்தல் கால வாக்குறுதிகளையும் எதிர்வரும் பொதுத் தேர்தலையும் இலக்காகக் கொண்டு விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது"– என்று அந்தக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:–

"உழைக்கும் மக்கள் எதிர்பார்ப்பில் ஏமாற்றமே காணப்படுகின்றது. இந்த அரசு பின்பற்றி வரும் நவ தாராள உலகமயமாக்கல் பொருளாதாரக் கொள்கைக்கு முன்னுரையாகவே அமைந் துள்ளது. 14 லட்சம் அரச ஊழியர்களுக்குஇரண்டுகட்டங்களில் சம்பள உயர்வு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் 70 லட்சம் தனியார் துறை தொழிலாளர்களுக்கு திட்டவட்டமான சம்பள உயர்வு போதுமானதாக அறிவிக்கப்படவில்லை. அவர்கள் கைவிடப்பட்டுள்ளனர். இது மோசமான செயலாகும்.

இதன் மூலம் பல்தேசிய கம்பனி கள், தனியார் கம்பனிகளின் சுரண்டலுக்கு இந்த அரசு பச்சைக் கொடி காட்டி நிற்கின்றது. நெல்லுக்கு உத்தரவாத விலையை கூட்டியுள்ள வரவு – செலவுத் திட்டம், அரிசிக்கான கட்டுப்பாட்டுவிலையை நிர்ணயிக்கவில்லை. இதன் மூலம் உழைக்கும் வர்க்கத்திற்கு போதிய பரிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை.

ஆட்சி மாற்றத்தால், அடிப்படை பொருளாதார கட்டமைப்பிலும், சுரண்டல் போக்கிலும் மாற்றம் ஏற்படாது என்பதற்கு இந்த வரவு – செலவுத் திட்டம் நல்லதோர் எடுத்துக்காட்டு. உழைக்கும் வர்க்கம் ஒன்றிணைந்து போராடுவதற்கு முன்வருவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. இதனையே எமது கட்சியும் வலியுறுத்தி நிற்கின்றது."– என்றுள்ளது. (ற–5)


**திருமணக்கார் வாடகைக்கு**
புத்தம் புதிய TOYOTA HYBRID 2014 Model, CAD-xxxx, வெள்ளை நிறக் கார் திருமண வைபவங்களுக்கு நியாயமான விலையில் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 075 242 2148
(56463)(4.3.7)

**Personal Class** தரம் 3 முதல் A/L வரை யான மாணவர்களுக்கு English Class உம் Spoken With Grammar வீடுகளில் வந்து கற்பிக் கப்படும், ஏனைய பாட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு: பிரபல் ஆசிரியர்,
ஆடியபாதர் வீதி, திருநெல்வேலி. 072 599 3326
(56466) (4.3.7)

**தவறிவிட்டது**
அக்கராயன் குளம், கிளிநொச்சியைச் சேர்ந்த பாக்கியராசா டனிஸ்பரோ என்பவரது தேசிய அடையாள அட்டை (931623907V) சாரதி அனுமதிப் பத்திரம் பேர்ஸுடன் கடந்த 29.01.2015 அன்று திருநெல்வேலிக்கும் முத்திரச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(56464) (4.3.7) T.P: 077 039 3035, 077 271 8534

**நியூ அன்னம்ம்ஸ்**

இல.11, புதிய மாநகரசபை கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ அன்னம்ம்ஸ் புதுப்பொலிவுடன் புதிய கட்டடத்தில் இன்று (03.02.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



* அனைத்துவிதமான இசைக்கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
* பான்ட் வாத்தியக் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள்
* இந்திய மற்றும் மேலைத்தேய இசைக்கருவிகளை குறைந்த விலையில் தரமானதாக பெற்றுக் கொள்ளலாம்.

Note:-
இசைக் கருவிகள் அனைத்தும் திருத்தம் செய்து தரப்படும்.

T.P: 021 222 7115

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

தைப்பூசத்தை முன்னிட்டு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
திருமதி A.அனுஜா ஆசிரியரின் நெறிப்படுத்தலில்.....

**Rainbow Kids College**
Where the Life begins

**ஆங்கில, தமிழ் மொழிமூல பாலர் பாடசாலை**

| | | |
|---|---|---|
| வயது 2+ முதல் 3+ வரை | வயது 3+ முதல் 4+ வரை | வயது 4+ முதல் 5 வரை |
| Play group | Montessori | Pre School |

நிகழ்ச்சிகள்:
* English Programme
* விளையாட்டுப் போட்டி
* English Concer
* முத்தமிழ் விழா
* Coral & graducation Cermony

கற்பித்தல் நுட்பம்:
* தமிழ் மொழி மூல கற்பித்தல்.
* ஆங்கில மொழிமூல கற்பித்தல்.
* சிங்கள [வாய்மொழி ] மொழிமூல கற்பித்தல்.

ATK PRINTERS

**றெஜின்போ பாலர் பாடசாலை**
பருத்தித்துறை வீதி, பூதர்மடம், கோப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம்.
-எஸ்.சிவரூபன், இயக்குனர்
Mobile: (+94)0777030947
(+94)0779898596

செய்திகள்

# போர்க் குற்றவாளிகள் உள்நாட்டு விசாரணை மூலம் தண்டிக்கப்படுவர்

## சிலகாலங்களின் பின் பொதுமன்னிப்பு; பிரதி வெளிவிவகார அமைச்சரின் யோசனை இது

கொழும்பு, பெப். 3

போர்க் குற்றம் புரிந்த அரச, புலி உறுப்பினர்கள் மீது உள்நாட்டு விசாரணையினூடாக தண்டனை வழங்கப்படும். தண்டனை வழங்கப்பட்ட பின்னர் அவர்களை பொதுமன்னிப்பில் விடுவிப்போம். இவ்வாறு தெரிவித்துள்ளார் வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா. மஹிந்த அரசில் பிரதி வெளிவிவகார அமைச்சராக நியோமல் பெரேரா இருந்த போது, ஐ.நாவின் விசாரணைகளையும், சர்வதேச தர நியமங்களுக்கேற்ப உள்நாட்டு விசாரணைகளை நடத்தும் யோசனைகளையும் நிராகரித்து வந்திருந்தார்.

தற்போது மைத்திரி தலைமையிலான புதிய அரசிலும் வெளிவிவகார பிரதி அமைச்சராக நியோமல் பெரேராவே இருக்கின்றார். ஆனால், அவர் தற்போது சர்வதேச தடைகளை தவிர்த்துக் கொள்வதற்காக, சர்வதேசத் தரம் வாய்ந்த உள்நாட்டு விசாரணைகளை நடத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். "சுதந்திரமான உள்நாட்டு விசாரணைக் குழு வொன்றை அமைத்து, விசாரணைகளை நடத்தி, குற்றம் செய்தவர்கள் அரச தரப்பினராக அல்லது விடுதலைப் புலிகளாக யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கலாம். பின்னர், சில ஆண்டுகளில் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளிக்க முடியும்.

இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட குற்றங்களுக்குத் தீர்வு காணப்படாவிட்டால், அது பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட அழுத்தங்களினால் நாட்டுக்கும், மக்களுக்கும் தொடர் பாதிப்புகளையே ஏற்படுத்தும். அதனைத் தவிர்ப்பதற்கு உள்நாட்டு விசாரணைகளின் மூலம் நடவடிக்கை எடுப்பதே நல்லது"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற–5)



இலங்கை வந்துள்ள பொதுநலவாய் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ற)

# சகல மாணவர்களுக்கும் விரைவில் மதிய உணவு

## கவனம் செலுத்துகின்றது அரசு

கொழும்பு, பெப். 3

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும்மதிய உணவுவழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.



அதற்கான நடவடிக்கைகள் தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார். 100 க்கும் குறைந்த மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலைகளில் மாத்திரமே தற்போது மதிய உணவு வழங்கப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைக் கல்வியைத் தொடரும் அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவை வழங்கும் திட்டத்தை கட்டம் கட்டமாக முன்னெடுக்கவுள்ளதாக அவர் கூறினார்.

பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் நடவடிக்கையில் தற்போது பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அகில விராஜ் காரியவசம் மேலும் கூறினார். (ற)

# தனியார் ஊழியருக்கு விரைவில் ஓய்வூதியம்

## ஆலோசிக்கின்றதாம் அரசு

கொழும்பு, பெப். 3

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பில் அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாக பொருளாதார பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஓய்வூதியம் வழங்கப்படாமையால் தனியார் துறையினர் கவலைக்குள்ளாகியுள்ளனர் என்று பிரதியமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார். அதனால் தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தில் புதிய அரசு உள்ளதாக பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை புதிய அரசு அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வை அறிவித்தது. எனினும் தனியார் துறைக்கு சம்பள உயர்வாக 2500 ரூபாவை பரிசீலிக்குமாறு தனியார் நிறுவனங்களுக்கு வேண்டுகோள் மாத்திரம் விடுத்திருந்தது. (ற)



# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நிதி மோசடி!

கொழும்பு, பெப்.3

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நிதி மோசடிகள் இடம்பெறுகின்றன என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவிடம் ஜே.வி.பி. முறைப்பாடு செய்துள்ளது.

முறைப்பாட்டை தொடர்ந்து இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்நெத்தி, 25 குற்றங்கள் அடங்கிய முறைப்பாடு குறித்த நிறுவனத்திற்கு எதிராக முன்வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் மைதான நிர்மாணத்துக்காக பெரும் நிதி மோசடி இடம் பெற்றுள்ளது. – என்று தெரிவித்துள்ளார். (ற)

# சரண குணவர்த்தனவின் கடவுச்சீட்டு முடக்கம்

கொழும்பு, பெப்.3

முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்த்தனவின் கடவுச்சீட்டை இரத்துச் செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் கிகான் பிலபிட்டிய இன்று குடிவரவு, குடியல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் சட்ட வல்லுனரானசட்டத்தரணிஅசித்த அன்டெனி நீதிமன்றத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊழல் மற்றும் மோசடி தொடர்பான 107 குற்றச்சாட்டுக்கள் அவருக்குஎதிராகதமது ஆணைக் குழுவில் பதிவாகியுள்ளன என்று அசித்த அன்டெனி குறிப்பிட்டுள்ளார்.

சரண குணவர்த்தன வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புள்ளதால், அது முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் என்பதால், அவர் வெளிநாடு செல்வதை தடைசெய்யுமாறு சட்டத்தரணி கோரியிருந்தார். (ற)

# அடக்குமுறைகளுக்கு எதிராக நடவடிக்கை

## நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்

கொழும்பு, பெப்.3

தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக அரசியல் பழிவாங்கல்களும் குற்றச் செயல்களும் இடம்பெற்று வருகின்றன. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் எவரும் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டால் அது குறித்து முறைப்பாடு செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கென விசேட அவசர அழைப்பு பிரிவு ஒன்று உரு



வாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், அரசியல் ரீதியாக பழிவாங்கப்படும் நபர்கள் 0767058561 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால தெரிவிப்பு

சட்டம், ஒழுங்கு, இடர் முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் அமரதுங்க, சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கும் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

பிரதம நீதியரசராக பணியாற்றிய மொஹான் பீரிஸ் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்றபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

வத்தளை பிரதேச சபையின் தலைவர் தியாரத்ன டி அல்விஸ் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரை சபைக்குள்ளும் சபைக்கு வெளியிலும் தாக்கிய சம்பவம் தொடர்பாக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (ற)

# பலசேனாவுக்கும் கோத்தாவுக்கும் தொடர்பில்லை

## அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.3
பொதுபலசேனா அமைப்பு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் உருவாக்கப் படவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறிய கருத்துப் பொய்யானது.இவ்வாறு கூறியுள்ளார் அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே.

நேற்றுமுன்தினம் திஹாரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, பொதுபலசேனா அமைப்பு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் உருவாக்கப்பட்டது என்று கூறியிருந்தார். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த விதானகே,"இந்தக் கருத்துக் கண்டனத்துக் குரியது."– என்று கூறியுள்ளார். (ற)

# தமிழ் கூட்டமைப்பு, ஜே.வி.பி. அரசுடன் இணைய வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க அழைப்பு

கொழும்பு, பெப்.3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும்அரசுடன்இணைந்து கொள்ளவேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.
இரண்டு கட்சிகளும் அரசுடன் இணைந்து கொண்டு காத்திரமான சேவைகளை வழங்க வேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சி நிதானமாக செயற்பட வேண்டியது அவசியமானது. சுதந்திரக் கட்சியினர் மீது தாக்குதல்களையோ அடக்கு முறைகளையோ பிரயோகிப்பது நியாயமானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தேசிய இளைஞர் சேவைகள் ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதேஅவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். (ற)

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி சதானந்தன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி - மானிப்பாயையும், பின் கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த காலஞ்சென்ற நன்னித்தம்பி முதலியார் சுப்பையாராஜாவின் மகன் காலஞ்சென்ற திரு.சதானந்தனின் அன்பு மனைவி திருமதி. மனோன்மணி சதானந் தன் 01-02-2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகளும், மனோராஜ் (London), சாவித்திரி, சுகாந்திரி (London), மகிந்தராஜ் (Majestic Cineplex, Jaffna), ஜெகன்ராஜ் (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கேஸ்வரி (London), சிவபாலன், பாலேந்திரன் (London), புவியரசி, பரிமளா (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், துர்கா (London), சிந்துகா (London), சாய்சரண்யா (London), சாய்பிரசாந்த் (London), பிராமி (Canada), வருணி (Canada), பிரியந்தன், யுவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03-02-2015) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, முற்பகல் 10.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு.
மகிந்தராஜ் (மகன்)
0777-570218

தகவல்: குடும்பத்தினர்.
0112 724303,
0714 874591.

(56470)
(10)

# மரண அறிவித்தல்

## இம்மானுவேல் றோஸ் ரேபேக்கா (தஞ்சோ)



கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 02, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் சமயபுரத்தை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் ரோஸ் ரேபேக்கா (தஞ்சோ) (01.02.2015) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம் பிள்ளை-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இம்மானுவேலின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சவரிமுத்து-சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், நேசம், பொன்னுத் துரை, சின்னத்தம்பி, பபாதம்பி, பபா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லீலா (யாழ்ப்பாணம்), புஸ்பம் (ஜேர்மனி), ருக்குமணி (இந்தியா), இந்திராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சிறிக்காந், சிறிக்காந்தி (யாழ்ப்பாணம்), சிரோன் (கொழும்பு), காலஞ்சென்ற கெனடி, ஜெஸ்ரன் (குவைத்), சுபாசினி (அபுதாபி), சிறிசாந்தி (சுவிஸ்), லக்சிகா (வவுனியா) ஆகியோரின் தாயும், ரெஜினா (ஜேர்மனி), காலஞ்சென்ற இராசநாயகம், காலஞ்சென்ற விஜேந்திரா, சாமினி (வவுனியா), காலஞ்சென்ற லோரன்ஸ், மேவின் (சுவிஸ்), ஜெராட் (வவுனியா) ஆகியோரின் மாமியும், வதனி (யாழ்ப்பாணம்), நோமா (ஆஸ்திரேலியா), ரொசானி (யாழ்ப்பாணம்), றெஜி (யாழ்ப்பாணம் ஆட்டோ சாரதி), நிறஞ்சன் (ஆஸ்திரேலியா), நிறஞ்சலா (லண் டன்), நிஷாந் (குவைத்), விநோத், விதுசன், றினா, ஏஞ்சனா, சாரு, கெவின், பிரவின், கிருன்ஷி, தர்மினி, நிறோன் ஆகியோரின் பேர்த்தியும், பிரின்சிகா, ரொபின், சந்தோஸ், சஞ்ஜை, சானு, சர்வின், டீக்சா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சமயபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டு, (06.02.2015) காலை 8 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பி.ப 4.00 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் இறுதித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(56477)
(10)

# மரண அறிவித்தல்



## பாலசறோசினி செல்வநாயகம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் யாழ். அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசறோசினி செல்வநாயகம் (31.01.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - பவளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், ரேனுகாதேவன் (பிரான்ஸ்), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தகுமார் (கரிதாஸ் கீயுடெக்), சிவதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்வநாயகி, சிவபாலசிங்கம், தேவராணி (இந்தியா), இந்திராணி, சண்முகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரராஜா மற்றும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அலன் மற்றும் நாகராசா (இந்தியா), சிவலோகநாதன், கமலா, யோகமலர் (பிரான்ஸ்), நவநீத செல்வி (பிரான்ஸ்), கமலேஸ்வரி (பிரான்ஸ்), புஸ்பரத்தினம், நேசம்மா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சுப்பிரமணியம், சிவநேசம் மற்றும் பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிஷாந் (ATI); கஜலக்ஷன் (யாழ். சென் ஜோண்ஸ் கல்லூரி), தீபிகா (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரிஷி (பிரான்ஸ்), கஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.02.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**30/22, அத்தியடி குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 8337**

தகவல்:
குடும்பத்தினர்

உதயன்

செய்திகள்

# மக்களின் தோள்களின் மீது ஏறி சவாரி செய்வதை அனுமதியோம்

## மன்னார் நகர சபை உறுப்பினர் குமரேஸ் தெரிவிப்பு

முன்னைய அரசு போன்று புதிய அரசிலும் குற்றம் சுமத்தும், பழி தீர்க்கும் அடாவடி அணுகு முறைகள் இடம்பெறக் கூடாது என்பதற்காக கடந்த கால அநீதிகள் வெளிக் கொணரப்படுவது அவசியம் என்று தெரிவித்துள்ளார் மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ்.

மன்னார் நகர சபையின் இந்த ஆண்டுக்கான முதலாவது அமர்வு கடந்த 27ஆம் திகதி நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வெறுமனே இந்தச் சபையானது துப்புரவுப் பணி மற்றும் நகரத்தின் அபிவிருத்தியோடு மட்டும் நில்லாது மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கள், அபிலாசைகளையும் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் குரல் கொடுக்கவும் செயற்படவும் வேண்டியது எமது கடமையும் உரிமையுமாகும்.

யாரையும் குற்றம் சுமத்துவதற்கோ பழி தீர்ப்பதற்கோ அல்லாமல் இந்தப் புதிய அரசிலும் பழைய மாதிரியான அடாவடிகள் அணுகு முறைகள் இடம்பெறக் கூடாது என்பதற்காகவும் கடந்த கால அநீதிகளை வெளிக்கொணர்வது அவசியமாகின்றது. அரசியல்வாதிகள் எமது மக்களின் தோள்களில் ஏறி அரசியல் சாவரி செய்வதை இனியும் நாம் அனுமதிக்க முடியாது. 2010ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு எப்படியான அடாவடித்தனமான கிடுக்குப் பிடி ஆட்சியில் எமது மக்களும் நாமும் இருந்தோம் என்பதை உலகம் நன்கு அறியும். கடந்தகால ஆட்சியாளர்கள் எம்மை வறுமையாக்கி, வெறுமையாக்கி தமது தயவில் வாழ வேண்டிய நிலையினை உருவாக்கி அரசியல் பிழைப்பு நடத்தியவர்களை மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள். மன்னிக்கவும் கூடாது.

புதிய அரசு புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தாலும் இந்த மாவட்ட மக்கள் மத்தியில் பழைய உணர்வுகளே காணப்படுகிறது. எனவே புதிய அரசு கடந்தகால அனைத்து செயற்பாடுகளையும் பரிசீலித்து மீளாய்வு செய்து காரணங்களைக் கண்டறிந்து உரிய தீர்வை இந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்து புதிய அரசு தனது நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும்" –என்று தெரிவித்துள்ளார். (ற–56)

## கைதடியில் இன்று ராஜகோபுர அடிக்கல்

யாழ்ப்பாணம், பெப். 3

கைதடி இணுங்கித் தோட்டம் கந்த சுவாமி கோயிலில் தைப்பூசத் திருநாளான இன்று செவ்வாய்க்கிழமை ராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு தைப்பூச அபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 9.30 க்கும் 10.30 க்கும் இடைப்பட்ட நேரத்தில் முருகன் வள்ளி தெய்வானை சமேதரராய் உள்வீதி வலம் வந்து அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (த–4)

## சரத் என் சில்வாவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, பெப்.3

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உள்ளிட்ட சிலருக்கு எதிராக – வடக்கு கட்டான – கங்காராம தியான மத்திய நிலைய வளாகத்தில் சட்டவிரோதமாக மரம் வெட்டினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அந்த மத்திய நிலையத்தின் பொறுப்பாளரான கொஸ்கொட சமதசீலி தேரர் தெரிவித்தார். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, குறித்த காணி தமக்கு சொந்தமானது என தெரிவித்தார். சட்டவிரோதமாக தாம் மரங்களை வெட்டவில்லை எனவும், அநாவசியமான தாவரங்களையே அகற்றியதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 100 வருடங்களுக்கு முன்னர் தமது மூதாதையர் குறித்த காணிக்கு உரிமையாளர்களாக இருந்ததாகவும், அந்த காணியின் ஒரு பகுதி விகாரைக்கு வழங்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)


## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் கனகநாயகம் ஜெயதாஸ் அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை கனகநாயகம்**

அவர்கள் நேற்று (02.02.2015) திங்கட்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னையா குணரட்ணம்**

(லக்கி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

தோற்றம் 25 . 05 . 1937

மறைவு 22 . 01 . 2008

திதி: பிரதமை

அன்பின் திருவுருவமே அறிவின் பிறப்பிடமே
பாசத்தின் உறைவிடமே! எம்மை
நீங்காத துயரினிலே நிறுத்திவிட்டு
மறைந்து சென்று ஆண்டேழு ஆனபோதும்
அணையாத தீபமாக எம் நெஞ்சில் எப்போதும்
ஒளிர்ந்து நின்று எமக்கெல்லாம் வழிகாட்டுவீர்கள்

செல்வச்சந்நிதி வாசா
சுதுமலை வடக்கு.
மானிப்பாய்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(56466)(4.3.7)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் ★ 25 ★ 12 ★ 1925



மறைவு ★ 05 ★ 01 ★ 2015

**அமரர் வள்ளியம்மை தம்பையா**

கடந்த 05.01.2015 அன்று சிவபதமடைந்த எமது அன்னை வள்ளியம்மை தம்பையா அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (04.02.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் மரணச் செய்தி கேட்டவுடன் கைகோர்த்த அனைத்து உறவுகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

C.T. சச்சிதானந்தம்
4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(56454)(10.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக அங்கத்தவர்களான ச.மகிந்தராஜ், ச.மனோராஜ் ஆகியோரின் அன்புத் தாய்



திருமதி
**மனோன்மணி சதானந்தன்**

அவர்கள் (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
நிறைவாழ்வகமும்.
சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கு.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 25.04.1961

மறைவு 03.01.2015

**அமரர் கந்தையா முருகையா**

மாதம் ஒன்று சென்றதுவோ- உம்
அன்பு முகம் காணாமல் நெஞ்சமது நெகிழுதையா
உமைப்போல் ஓர் உறவை இனி எப்போது
காண்போம் ஐயா! வையக வாழ்வதனை
கணப்பொழுதே முடித்தே! இன்னலில் ஏக்கத்தில்
எம் மனமது அழுந்திட எமைவிட்டு எங்குதான் சென்றீரய்யா
இவ்வழியே எல்லோர்க்கும் இயற்கையெனும்
தேற்றமதில் வாழ்கிறோம் ஐயா..

கடந்த 03.01.2015 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் கந்தையா முருகையா அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (04.02.2015) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் உற்றார் உறவினர் யாவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி ஊடாகவும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பலவழி களில் உதவி புரிந்தவர்களுக்கும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாயுடை, மாவிட்டபுரம். குடும்பத்தினர்.

# தொடர்ச்சிகள்

## வடக்குக்கு

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட பளிக்கார, யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை பதவியேற்றுக் கொண்டார். இந்த நிகழ்வு தொடர்பில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர் அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும் குறித்த நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநரின் பதவியேற்பில் உரை நிகழ்த்தியிருந்தார். அந்த உரை ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

மாகாண சபைத் தேர்தல் மூலம் வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபைக்கு அரசமைப்பின் பிரகாரம் நியமிக்கப்படும் முதலாவது ஆளுநர் பளிக்காரவே. உங்களுக்கு முன்பாக இங்கு இருந்த ஆளுநர், வடக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட முதல் நியமிக்கப்பட்டவர். இங்கு இராணுவ நிர்வாகமும், அதன் சார்ந்த ஒழுங்குகளுமே இதுவரையில் இருந்து வந்தது.

தற்போது உங்களின் நியமனம் மூலம் இங்கு சிவில் நிர்வாகம் ஏற்படுவதற்கான அறிகுறி தென்படுகின்றது. கடந்த காலங்களில், இராணுவத்தின் தலைமையிலான ஆட்சியாளர்களின் பாதுகாப்பு என்று இருந்தது. தற்போது மக்கள் பாதுகாப்பு தலைமையிலான ஆட்சியாளர்களின் பாதுகாப்பு என்று நிலைமை மாறியிருக்கின்றது.

நீங்கள், வெளிவிவகார பொதுச் சேவைப் பின்னணி கொண்டவர். அத்துடன் மனித உரிமைகளை ஆதரிப்பவர். இதனால் உங்களை தேர்வு செய்தமைக்கு நன்றி சொல்கின்றோம்.

உங்களுக்கு முன்னர் இருந்த ஆளுநருடைய ஆட்சிப் பாணி – ஆட்சி முறைமை தொடர்பில் நான் விமர்சனங்களைக் கொண்டிருந்தேன். அது தெரிந்திருந்தும் அவருடன் எனக்கு தனிப்பட்ட ரீதியில் நல்ல தொடர்பு இருந்தது. அவர் இராணுவப் பின்புலத்திலிருந்து வந்தவர். இதனால் உத்தர விடுதல் – பணிதல் என்ற நடைமுறையைப் பின்பற்றினார். அது நிர்வாக முறைமைக்குப் பொருத்தமானது இல்லை. அத்தகைய முறைமை பொதுமக்களுக்கு தேவையற்றதொன்று என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

இது அதிகாரிகள் மத்தியிலும் பணியாளர்கள் மத்தியிலும் வேண்டத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தியது. அடக்குமுறையினால் வரும் விளைவுகள் எத்தகையதோ, அதைக் கொண்டு வந்தது. அவருடைய உத்தரவுகளை நிறைவேற்றாத அதிகாரிகள், அவர் முன்பாகச் செல்வதற்கு நடுங்குவதை நான் பார்த்து ஆச்சரியப்பட்டுள்ளேன். அவரது பாணியில் விளக்கம் – கலந்துரையாடலுக்கு இடமில்லை. ஆனால் இவை பொது மக்கள்ஆட்சிக்குஅவசியமானவை.

அவருக்கும் இராணுவத்தினருக்கும் இருந்த தொடர்புகள் காரணமாக, பொதுமக்கள் விவகாரங்கள் அனைத்திலும் இராணுவப் பங்களிப்பு இருந்தது. இவை மட்டுமல்லாது இன்னொரு சிக்கலான பரிணாமமும் அவருக்கு இருந்தது.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த காலத்தில், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர் என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒருவராக அவர் இருந்தார். போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுக்கள் முன்பாக அவரைக் கொண்டு வருவதிலிருந்து அவரது பதவி அவரைப் பாதுகாத்தது.

ஜனாதிபதியின் முகவராக அவர் இருந்தாலும், அபிவிருத்தி – நிர்வாகம் என்பதன் அடிப்படையில் எல்லா நிகழ்வுகளிலும் அவர் கலந்துகொண்டார். அதையும் தாண்டி அவர் ஒரு பகுதி நேர அரசியல்வாதியாகவும் செயற்பட்டிருந்தார். சட்டம் அனுமதித்த விடயங்களையும் தாண்டி எல்லை மீறி நடந்து கொண்டார். வெறும் அரசியல் காரணங்களுக்காகவே அவர் இந்தத் தலையீடுகளைச் செய்துள்ளார்.

வளங்களைப் பங்கிடும் விடயத்திலும் அவர் பங்களிப்பு பிரச்சினையானதே. நிர்வாகத்தில் நடக்கும் சம்பவங்களைபார்க்கும் பலரோடு இல்லாமல், இராணுவத்தால் வழங்கும் பட்டியலுக்கு நிதியை வழங்குபவராகவும், தற்போது வெளிநாடுகளில் அகதிகளாக இருப்பவர்களின் அனுமதிப் பத்திரத்தை வேறு நபர்களுக்கு வழங்குபவராகவும் இருந்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாமும் நூறு நாள் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இது தொடர்பில் விரைவில் எமது அமைச்சர்கள் உங்களுடன் கலந்துரையாடவுள்ளனர்"– என்றுள்ளது. (ந–5)

## பொருள்களின்

லேயே இந்த நிலை காணப்படுகின்றது. இதனால் வர்த்தகர்கள் பாதிக்கப்படுகின்றனர். – இவ்வாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் கூறினார்.

புதிதாகப் பதவியேற்றுள்ள அரசால், கடந்த 29ஆம் திகதி இடைக்கால வரவு–செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் சில பொருள்களுக்கு விலைக் குறைப்பு செய்யப்பட்டது. சிமெந்து பக்கட் ஒன்றின் விலை 90 ரூபாவால் குறைக்கப்பட்டதுடன், சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை ஆயிரத்து 596 ரூபா என்றும் அறிவிக்கப்பட்டது. இது இவ்வாறிருக்க, அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் புதிய விலையில் தமது பொருள்களை விநியோகஸ்தர்களுக்கும் – விற்பனையாளர்களுக்கும் வழங்கவில்லை.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ்.வர்த்தக சங்கத் தலைவர், "சிமெந்து நிறுவனங்கள் தாம் பழைய விலையிலேயே பொருள்களை வழங்குவோம் என்று விற்பனையாளர்களுக்கு எழுத்து மூல கடிதம் கொடுத்துள்ளன. பின்னர் அவற்றை மீளப் பெற்றுக் கொண்டுள்ளன.

பொருள் கொள்வனவுக்காகச் சென்ற லொறிகள் நாள் கணக்கில் காத்திருக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. சிமெந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் புதிய விலைக்கு விற்பனை செய்வதற்கு தயாரில்லை என்பதால், லொறிகளில் சிமெந்துகள் ஏற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன."– என்று குறிப்பிட்டார்.

"பெற்றோல் உள்ளிட்ட சகல எரிபொருள்களும், சமையல் எரிவாயு உட்பட அனைத்தும் மின்சக்தி எரிசக்தி அமைச்சின் கீழேயே வருகின்றது. பெற்றோலையோ அல்லது ஏனைய எரிபொருளையோ கொழும்பில் ஒரு விலையிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு விலையிலும் விற்கவில்லை. அவற்றுக்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவினத்தை குறித்த நிறுவனம் ஏற்றுக் கொள்கின்றது.

அதே போன்று சமையல் எரிவாயு நிறுவனங்களும் கொழும்பில் விற்பனை செய்யும் விலைக்கே இங்கும் விற்பனை செய்ய வேண்டும். அவர்கள் போக்குவரத்துச் செலவை காரணம் காட்டி இங்கு அதிக விலையில் விற்பனை செய்ய முடியாது. அதனை அந்த உற்பத்தி நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும். கொழும்பில் விற்பனை செய்யும் விலைக்கே யாழ்ப்பாணத்திலும் விற்பனை செய்ய வேண்டும்.

இந்த விடயத்தில் அரசு கூடிய அக்கறை செலுத்த வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார். (ந–5)

## அமெரிக்கா

இந்தச் சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் – மஹிந்த அரசின் காலத்தில் அமெரிக்காவுடனான உறவு சுமுகமாக அமையவில்லை. இந்த நிலையில் புதிய அரசு சுமுகமான உறவைப் பேணும் என்ற உத்தரவாதம் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைக்கு எதிராக ஜெனிவா அமர்வில் மூன்று தடவைகள் பிரேரணை கொண்டு வந்தமை தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றவிசாரணை அறிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான கலந்துரையாடலின் முடிவில், அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் ஊடகங்களைச் சந்தித்துப் பேசினர்.

அதில் கருத்துத் தெரிவித்த மங்கள சமரவீர,

"அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியைச் சந்தித்துப் பேச, அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி அமெரிக்காவுக்குப் பயணமாகவுள்ளேன்"– என்று கூறினார்.

"அமெரிக்காவுடன் உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும், பல்வேறு விவகாரங்களில் அமெரிக்காவுடன் நெருக்கமாகப் பணியாற்றவும் கொழும்பு விரும்புகின்றது. அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் இனி புதிய மட்டத்துக்கு கொண்டுசெல்லப்படும். அதன் ஆரம்பக் கட்டமாகவே அமெரிக்க இராஜாங்கச் செயலருடனான சந்திப்பு இருக்கும்"– என்றும் தெரிவித்தார். (ந–5)

## இலங்கைக்கு

நேற்றுக் காலை, காலை உணவுடன் சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார் நிஷா. அதன்பின்னர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்துப் பேசினார். அதன்பின்னர் அவர் ஊடகவியாலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

"மனித உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்க்கவும், நல்லாட்சிக்கும் இலங்கைக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது. இலங்கை முன்நோக்கிச் செல்வதற்கு எம்மை ஒரு பங்காளராக கருதிக் கொள்ளலாம்"– என்று அவர் கூறினார்.

பிற்பகல் பாதுகாப்பு அமைச்சில் வைத்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவைச் சந்தித்துப் பேசினார்.

"அமைதியும் – ஜனநாயகமும் – சுபீட்சமும் மிக்க இலங்கையை எதிர்பார்க்கின்றோம்"– என்று அவர் அந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் நிஷா அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புகளில் தெற்கு மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் அதுல் கெசாப்பும் கலந்து கொண்டார். (ந–5)

## கோத்தா

காணிகளை மீண்டும் தமிழ் மக்களுக்கே வழங்குவோம்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, இந்தப் பிரச்சினை சிங்கள மக்களுக்கும் உள்ளது. பானமவில் அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்த 4000 இற்கு மேற்பட்ட சிங்கள விவசாயிகள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு என்ன நடந்தது? உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது."

– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"வட மாகாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் படையினர் கோல்ப் விளையாட்டுத் திடல் அமைப்பதென்றால் அது பிழையான விடயமாகும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே தேசிய பாதுகாப்பை முதன்மைப்படுத்தி மக்களின் காணிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்காக கையகப்படுத்துவது வேறு விடயம். ஆனால் தனிப்பட்டவர்களின் வர்த்தகத்திற்காக அதியுயர் பாதுகாப்பு எனக் கூறிக் கொண்டு காணிகளை கையகப்படுத்துவது பிழையான செயலாகும்" – என்றும் அவர் குறிப்பிட்டார். (ந–5)

## கைதானார்

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று மதியம் கைது செய்யப்பட்டார். அவரை கைவிலங்கு மாட்டி வீட்டிலிருந்து அழைத்துச் சென்றனர் பொலிஸார்.

அவர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிபதி எதிர்வரும் 11 ஆம் திகதி வரை திஸ்ஸவை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதுகுறித்து பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண கூறும்போது, "போலியான ஒப்பந்தப் பத்திரங்களைத் தயாரித்து வெளியிட்ட குற்றச்சாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்கவை கைது செய்துள்ளோம்"–என்றார்.

### பின்னணி

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் வேட்புமனுத் தாக்கல் தினமான – டிசெம்பர் 8 ஆம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கா, அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் பக்கம் தாவினார். அதற்குக் கைமாறாக அப்போதைய அரசால் அவருக்கு அப்போதைய அரசில் சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்திருந்த அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "ஒரு கோப்பை கோப்பியுடன் அவரை எம்பக்கம் கொண்டுவந்தோம்"– என்று கூறியிருந்தார்.

### சொந்தச் செலவில் சூனியம்

அதன்பின்னர் – தேர்தல் பரப்புரைகள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தபோது – கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் திஸ்ஸ அத்தநாயக்கவும் கலந்துகொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொது எதிரணி வேட்பாளராக அப்போது போட்டியிட்ட மைத்திரிபாலவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்று ஆவணம் ஒன்றைக் காட்டி அவர் பரபரப்பை ஏற்படுத்தினார். அதில் வடபகுதியிலிருந்து 50 சதவீத இராணுவ வெளியேற்றத்திற்கு இரு தரப்பினரும் சம்மதித்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஆவணமே இப்போது அவருக்குப் பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

### மறுப்பு

குறித்த ஒப்பந்தம் போலியானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் உடனடியாக மறுத்தனர். அதில் உள்ள கையெழுத்து தங்களது கையெழுத்து இல்லை என்றும் கூறினர். திஸ்ஸ அத்தநாயக்க பகிரங்கப்படுத்திய போலியான ஆவணம் குறித்து பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்தனர்.

### நிரூபணம்

ஒப்பந்தத்திலுள்ள கையெழுத்துப் போலியானது என்று இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்தது. அதனால் போலியான ஒப்பந்தத்தை வெளியிட்டமைக்காக திஸ்ஸ அத்தநாயக்கா கைது செய்யப்படலாம் என்றும் 7 வருடங்கள் வரையில் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்று மதியம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் திஸ்ஸ அத்தநாயக்காவை கைது செய்தனர். (ந–5)

## ஓமந்தை

மற்றும் பயணிகள் உடற்சோதனை என்பன தற்போது நிறுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. ஆயினும் வடக்கில் இருந்து இரும்பு கொண்டு செல்லும் வாகனங்கள் தொடர்ந்தும் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


அதேவேளை, வெளிநாட்டுப் பிரஜைகள் வடக்குக்கு வருவதற்கான கட்டுப்பாடு சில நாள்களுக்கு முன்னர் விலக்கப்பட்டுள்ளது. (ந–21)

## யாழில்

குறித்த குடும்பஸ்தர் வாகனத்தில் இருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்தியவர் அதேபகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

பணகொடுக்கல் வாங்கல் காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ந–4)

## செய்திகள்



## பக்தர் வெள்ளத்தின் மத்தியில் மருதடியானின் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்.பெப்.3

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்களின் வருகையுடனும், குருமார்களின் ஆசியுடனும் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

பிரபல ஆலயங்களின் இந்துக் குருமார்கள் ஒன்றாகக் கூடி விசேட யாகத்தை நடத்தினர்.

அதிகாலை 5.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பூசை வழிபாடுகளுடன் யாக பூசை மற்றும் கும்பாபிஷேக பூசை என்பனவும் இடம்பெற்றன.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஆலயத்தைப் புதிதாகக் கட்டுவதற்காக வருடாந்த திருவிழாக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. 11 வருடங்கள் கடந்த நிலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற கும்பாபிஷேகத்தில் பங்குபற்றுவதற்காக பல இடங்களில் இருந்தும் மானிப்பாய் வாழ் மக்கள் வந்திருந்தனர்.

வருடாந்தம் சித்திரைப் புது வருடப்பிறப்பன்று தேர்த்திருவிழா நடைபெறும் இந்த ஆலயத்தில் 11 வருடங்கள் திருவிழா இடம் பெறவில்லை. எனினும் இந்த வருடம் 25 நாள்கள்கொண்ட திருவிழாவாக வருடாந்த திருவிழா இடம்பெறவுள்ளது. (த-14-20)

# வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை மேம்படுத்தப்படும்

## புதிய பிரதம செயலர் உறுதி

யாழ்ப்பாணம், பெப் 3

வடக்கு மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும், இயல்பு வாழ்க்கை திரும்பவும் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான முயற்சிகள் முழு அளவில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராகப் பதவியேற்ற அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.



புதிய அரசு அமைந்த பின்னர், வடக்கு மாகாணப் பிரதம செயலாளராக அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். கடந்த 27 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால முன்பாக அவர் பதவியேற்றிருந்தார். இந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை, திருநெல்வேலியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் காலை 10.15 மணியளவில் சுப நேரத்தில் கடமையை ஆரம்பித்தார்.

வடக்கு மாகாணம் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாகாணம். இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையுடனும்- மாகாண சபைப் பிரதிநிதிகளுடனும், ஜனாதிபதியின் பிரதிநிதியான- மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநருடனும் இணைந்து மற்றும் பிரதிப் பிரதம செயலாளர், செயலாளர்களுடனும் இணைந்து இந்த மாகாணத்தைக் கட்டியெழுப்புவோம்.

வடக்கு மக்களின் பொருளாதாரத்தையும், இயல்பு வாழ்க்கையை மேம்படுத்தவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (த-5)

## ஜனவரியில் 558 பேருக்கு யாழில் டெங்கு

யாழ்ப்பாணம், பெப்.3

டெங்கு தொற்றுத் தீவிரமாகி யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் மாத்திரம் 558 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 659 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னாரில் 46 பேரும், முல்லைத்தீவில் 30 பேரும், வவுனியாவில் 21 பேரும், கிளிநொச்சியில் 10 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் கொழும்பில் ஆயிரத்து 316 பேர் கடந்த மாதம் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குத் தொற்றில் நாடளாவிய ரீதியில் யாழ்.மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளது. கடந்த வருடம் யாழ். குடாநாட்டில் ஆயிரத்து 833 பேரும் நாடளாவிய ரீதியில் 47 ஆயிரத்து 246 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## உடுவில் மகளிர் 190 ஆவது ஆண்டு முத்திரை வெளியீடு

வலி.வடக்கு, பெப் 03

உடுவில் மகளிர் கல்லூரியின் 190 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி நேற்றுத் திங்கட்கிழமை தபாற்திணைக்களத்தினால் விசேட தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

விருந்தினர்கள் மேளவாத்திய சகிதம் ஊர்வலமாகக் கல்லூரி மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கைத் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அருட்திரு கலாநிதி டானியல் தியாகராஜா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் நம்பிக்கை நிதியப் பணிப்பாளர் திச்சாட் கலிகற் அன்று சிமோக், கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ், திருமதி கலா மகேந்திரன் உட்படபலர் ஏற்றி வைத்தார்கள்.



இந்த முத்திரை வெளியீட்டு நிகழ்வில் முத்திரையை தபால் திணைக்களத்தின் வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் என். இரத்தினசிங்கம் வெளியிட்டு வைக்கத் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அருட்கலாநிதி டானியல் தியாகராஜா பெற்றுக் கொண்டார். (த-86)

# பட்டு உற்பத்தியுடன் தொடர்புடைய வண்ணத்துப் பூச்சி வேலணையில்

யாழ்ப்பாணம், பெப் 3

இந்தியாவின் பட்டு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் அந்து வகையைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகளுடன் மிக நெருங்கிய தொடர்புள்ள வண்ணத்துப் பூச்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் பிடிபட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறைத் தலைவர் கலாநிதி திருமதி இ. ஞானேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச வைத்திய சாலையில் மருந்தாளராக இருக்கும் திருமதி விஜயேந்திரன் அனுராதா இந்த வண்ணத்துப் பூச்சியைப் பிடித்து உதயன் அலுவலகத்துக்குக் கொண்டு வந்திருந்தார். பின்னர் அது யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் பின்பே ஞானேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இது Antheraea cingalesa எனும் விஞ்ஞானப்பெயரையும்



SRI LANKAN TUSSAR SILK MOTH எனும் பொதுப் பெயரையும் (இலங்கையின் tussar பட்டு அந்து) கொண்டது.

மல்பெரி பட்டுப் பூச்சிகளினால் உருவாக்கப்படும்பட்டைப்போல மென்மையாக இல்லாவிடினும் இவ்வகைப் பட்டும் பிரசித்தமானது. இது ஓர் அந்து வகையைச் சேர்ந்தது. வண்ணத்துப் பூச்சிகளும் அந்துக்களும் ஒரே வர்ணத்தைச் சேர்ந்தவை. சில வாரங்களுக்கு முன்னர் புன்னாலைக்கட்டுவனில் பிடிபட்ட இந்திய நிலவு அந்து குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு அங்கத்தவரான இந்த அந்து இலங்கைக்கேயுரிய இனமாகும். இதன் அகலம், செட்டைகள் விரித்த நிலையில் 12-14 சென்ரி மீற்றர் வரை ஆகும்.

இலங்கையில் மேல், மத்திய, வடமேல், மற்றும் ஊவா மாகாணங்களில் இவற்றின் பிரசன்னம் முன்னமே அறியப்பட்டிருப்பினும் வடமாகாணத்தில் இதுவே முதல்முறையாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-4)

# கொன்றுவிட்டனரா பிள்ளைகளை?

## கிளிநொச்சி அரச அதிபருக்கு முன்னால் நேற்று ஓலமிட்டமுதனர் காணாமற்போனோரின் உறவுகள்

ப.1 விரிவு











மன்னார், பெப். 3
'இராணுவத்தின் டிராக்டரில் ஏற்றி அனுப்பிய என்ர பிள்ளை எங்கே?', 'இரவு பகலாகக் கனவு கண்டுகொண்டு கொண்டிருக்கிற என்ர ஆண் அழகன் எப்ப வருவான்?', எலக்சனுக்குப் பிறகு காணேலை எண்டு சொல்லுகினம் அப்பிடி எண்டா கொன்றுவிட்டாங்களோ பதில் சொல்லுங்கோ?' எனக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு முன்னால் கேள்விகளைக் கேட்டுக் கதறி அழுது புலம்பினர் உறவுகளைத் தொலைத்த மக்கள்.

போரின்போது காணாமற்போன உறவுகளைக் கண்டு பிடிக்குமாறு கோரியும், சிறையில் உள்ள அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு கோரியும் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

இந்தப் பேரணி கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகிப் புதிய மாவட்ட செயலகம் வரை நடைபெற்றது.

பேரணியின்போது உறவுகளைத் தொலைத்த மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்தோம் மாற்று வீரா வாழ்வை, தமிழர் வாழ்வில் மாற்றம் வேண்டும் புதிய அரசால் அது புலர வேண்டும், ஒன்றா இரண்டா எத்தனை ஆயிரம் எங்கே எங்கே எங்கள் உறவுகள் எங்கே?, நாட்டின் சாபம் பயங்கரவாதத் தடைச் சட்டம். அதை நீக்க வேண்டும் புதிய அரசே, கண்ணீரும் சோறும் உண்கின்றோம் வாழ்க்கை மாறுமா இனியாவது, தமிழர் வாழ்வில் விடிவு வேண்டும் தர வேண்டும் மைத்திரி அரசே எனப் பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்கள் எழுப்பியவாறும் புதிய மாவட்ட செயலகத்துகு முன்னால் பேரணியாக வந்தனர் மக்கள்.

அங்கு ஒன்று கூடிய அவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தின்போதே உறவுகளை தொலைத்த எமது மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்.

'காலில் சின்ன ரவுண்ஸ் காயத்துடன் ஆமிக்காரண்ட டிராக்டரில் ஏத்திவிட்டனான்', 'நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து வழக்கும் நடக்குது. அதுவும் மாதம் மாதம் தவணை எண்டதால அங்கையும் அலையிறம்', 'எங்கே என்ர பிள்ளை? எங்க போயும் ஒரு பயனும் இல்லை', 'நவநீதம்பிள்ளை அம்மையாரையும் சுதந்திர தினத்தின்போது போய் சந்தித்தனாங்கள். எந்தப் பதிலும் இல்லை.இருக்கிறானா இல்லையா? ஒரு பதிலைச் சொன்னா போதும். ஆனால் அவன் இல்லை என்றால் நான் எனது உயிரை மாய்த்துக் கொள்வேன். என்னால உயிர் வாழ முடியாது' என்று கதறி அழுதார் உறவுகளைத் தொலைத்த தாய் ஒருவர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், உறவுகளைத் தொலைத்த ஏராளமான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனுக்குக் காணாமல்போனோரைக் கண்டறிந்து பொறுப்பு கூறுவதற்காகவும், பொது மன்னிப்பு அளிப்பதற்கும் எனக் கருணை மனு ஒன்று கையளிக்கப்பட்டது. (த-21)

## பிள்ளையை ராணுவமே கடத்தியது

கிளிநொச்சி, பெப் 3
வவுனியா பூந்தோட்டம் முகாமில் இருந்து வவுனியா நகருக்கு காலை 6 மணிக்கு ஓட்டோவில் சென்ற எனது மகன் உதயகுமார் இன்றுவரை வீட்டுக்கு வரவில்லை. இராணுவமே கடத்திக்கொண்டு சென்றது எனத் தாயொருவர் நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக காணாமற் போனவர்களை கண்டு பிடித்துத் தருமாறு கோரி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே அவர் இவ்வாறு கதறி அழுதார்.

"ஒவ்வொரு நாளும் காலையில் ஓட்டோவுடன் மீனவப் பெண்களை ஹயருக்கு ஏற்றிச் செல்லும் எனது மகன் 2007ஆம் ஆண்டுதைப்பொங்கலுக்குமுதல் நாள் காணாமற்போனார். ராணுவம் தான் பிடிச்சது. 350 பேரைக் கடத்தினது. ஜோசப் காம்பில் 150 பேரையும் பூசாவில மீதிப் பேரையும் கொண்டு போய் அடைச்சாங்கள். என்ர மகனை ஜோசப் காம்பிலதான் வைச்சிருந்தவங்கள். அவங்களோட கதைக்கிறத்துக்கு எனக்குச் சிங்களம் தெரியாது. அதுக்காக எல்லாரையும் உதவிக்குக் கூப்பிட்டன் சிங்களத்தில கதைக்கப் பயந்து ஒருவரும் வரமாட்டன் எண்டிட்டினம். பிறகு நான் கொழும்பு மனித உரிமை ஆணைக்குழு, ஐ.சி.ஆர்.சி, மக்கள் கண்காணிப்புக் குழு எண்டு எல்லா இடத்துக்கும் போனனான். ஒரு முடிவும் வரேல்ல. எப்படியாவது மகனைக் கண்டு பிடிச்சுத் தரச்சொல்லுங்கோ" என்று பாக்கியம் என்ற அந்தத் தாயார் கதறினார். (த-21)



# சாட்சிகளுக்கு உயிர் அச்சுறுத்தல்; ஆணைக்குழு நேர்மையற்றது

## காணாமற்போனோரின் உறவுகள் ஜனாதிபதிக்கு மனு

கிளிநொச்சி, பெப். 3
இராணுவத்தினருக்கு எதிராக மற்றும் அரசுக்கு எதிராகச் சாட்சியங்கள் சொன்னால் குடும்பத்தில் உள்ள ஏனையவர்களும் உயிர் விலை கொடுக்க நேரிடும் என்று எச்சரித்தார்கள். மீறிச் செயற்பட்ட சிலரைப் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தார்கள். இதற்கு மேலதிகமாக முன்னாள் ஜனாதிபதியின் ஆணைக் குழுவினர் நேர்மையாகச் செயற்படவில்லை எனக் குற்றம் சாட்டி மனு ஒன்றைக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர் காணாமற் போனவர்களின் உறவு கள்.

கிளிநொச்சி மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் மூலம் ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு காணாமற்போனோரின் உறவுகளால் கொடுக்கப்பட்ட கருணை மனுவிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த இறுதிப்போரின்போது சர்வதேச போர் விதிகளுக்கு அமைவாக ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளையும், நூற்றுக்கணக்கான இளம் மனைவியர் தங்கள் கணவர்களையும்,பச்சிளம் பாலகர்கள் தங்கள் தந்தையர்களையும், இராணுவத்திடம் கையளித்துவிட்டுத் தவிக்கின்றோம். அவர்களின் அன்புக்காக ஏங்கித்தவிக்கின்றோம். இராணுவத்திடம் ஒப்படைத்தவர்கள் எங்கே? என்று ஐந்து வருடங்களாகத் தேடி அலைகின்றோம். கடந்த கால அரசு இது குறித்துப் பொறுப்பு கூற முன்வரவோ,எமது வேதனைகளையும் கண்ணீரையும் புரிந்துகொள்ளும் மனிதாபிமான அரசாகவோ செயற்படவில்லை என்பது கசப்பான உண்மை.

மாறாக உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராணுவப் புலனாய்வாளர்களால் நாங்கள் அச்சுறுத்தப்பட்டோம்.

விசாரணைகளின் போது ஆணைக் குழுவின் விசாரணை முறைகள், அவர்கள் கேட்ட கேள்விகள், திசைதிருப்பும் கருத்துக்கள், நட்டஈடு வழங்குவது தொடர்பான அவர்களின் குறிப்புரைகள் என்பன மஹிந்த அரசு தலைமையிலான போர்க்குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்தது. இதனைத் தவிர அவர்களிடம் சாட்சியம் அளிப்பதற்கு நாங்கள் தடுக்கப்பட்டோம். அச்சுறுத்தல்களும், எச்சரிக்கைகளும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோரத் தன்மைகளும் எம்மை மௌனிக்கும் அடிமைகளாக உருவாக்கியிருந்தன.

காணாமல்போனோரின் உறவுகளின் பிரச்சினை ஒருபுறம். மறுபுறம் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் அரசியல் கைதிகள் என்ற வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் விசாரணைகள் இன்றி, வழக்குகள் இன்றித் தடுத்து வைக் கப்பட்டிருக்கின்றார்கள். 15-20 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் வாடுகின்ற இவர்களின் உணர்வுகளை ஒரு தந்தை என்ற மாண்பின் அடிப்படையில் நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

எனவே மனு நீதியின்படியும், இறை நீதியின் படியும், காணாமற் போனோரை கண்டறிந்து பொறுப்பு கூறுவதுடன், அரசியல் கைதிகளுக்கு தற்துணிவோடு பொது மன்னிப்பை வழங்க வேண்டும் - என்றுள்ளது.

(த-21)

செய்திகள்

# அரையிறுதியாட்டத்துக்கு யாழ்.உதைபந்தாட்ட லீக்

யாழ்ப்பாணம், பெப் 3.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் ஜெனட், கொன்சலஸ் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அரையிறுதியாட்டதுக்குத் தகுதி பெற்றது யாழ். உதைபந்தாட்ட லீக் அணி.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிண்ணியா உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பமாகியது தொடக்கம் இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காகக் கடுமையாக மோதிக் கொண்டனர்.

இதனால் ஆட்டம் ஆரம்பம் முதலே விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியின் வீரர் ஜெனற் அபாரமாக ஒரு கோலை அடித்து ஆட்டத்தை யாழ் உதைபந்தாட்ட லீக் சார்பாக மாற்றினார்.

தொடர்ந்தும் புயல் வேகத்தில் விளையாடிய அவர் அடுத்தடுத்து மேலும் மூன்று கோல்களை விளாசித் தள்ளினார். சக வீரரான கொன்சலஸும் ஒரு கோலை அடிக்க ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி 5:0 என்ற கோல் கணக்கில் ஆட்டத்தில் வலுவான ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதிக்கமே தொடர்ந்தும் மேலோங்கிக் காணப்பட்டது. ஒரு கட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் 7:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தபொழுது கிண்ணியா அணியின் முதல் கோலும் ஆட்டத்தின் ஒரே கோலும் பெறப்பட்டது. ஆட்ட நேர முடிவில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி 7:1 என்ற கோல் கணக்கில் இமாலய வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

(த-23-ரி)

## நாவாந்துறை - நவிண்டில் அணிகள் இன்று மோதல்


யாழ்ப்பாணம், பெப். 3

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23-ரி)

## கிரிக்கெட் சபை— சங்கக்கார மோதல் வெளியானது முக்கிய மின்னஞ்சல்




இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்கக்காரவும், இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளும் தொடர்பு கொண்ட மின்னஞ் சல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஆஷ்லே டி சில்வா, கிரிக்கெட் செயற்பாட்டுக்கான தலைமை அதிகாரி கார்ல்டன் பெர்னாண்ட்ஸ் மற்றும் சில அதிகாரிகளுடன் சம்பி யன்ஸ் லீக் தொடர்பாக சங்கக் கார பேசிய மின்னஞ்சல்கள் தற்போது வெளியாகி இருக்கின்றன.

(த)

## மரதன் ஓட்டம்

கரணவாய், பெப்.3

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டிகளை முன்னிட்டு நடத்தப்படும் மரதன் ஓட்ட நிகழ்வு இன்று காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இரா.ஸ்ரீ நடராசா தலைமையில் இடம் பெறும் இந்த மரதனோட்ட நிகழ்வு தொண்டமானாறு பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி உடுப்பிட்டி வீதி வழியாக உடுப்பிட்டிச் சந்தியை அடைந்து அங்கிருந்து வல்வெட்டித்துறை தொண்டமானாறு வீதி வழியாக பாடசாலை முன்றலில் நிறைவடையும்.

இதில் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 70 இற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-108)



## நொருக்கித் தள்ளுங்கள்

உலகக்கிண்ணப் போட்டிகளில் அனைத்து அணித் தலைவர்களும் டோனியை போல் செயல்படவேண்டும் என்று முன்னாள் நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்டீபன் பிளெமிங் கூறியுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு நடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் இந்திய அணித் தலைவர் டோனியின் செயற்பாடு சிறப்பாக இருந்தது. இறுதிப் போட்டியில் அதிரடியில் மிரட்டிய டோனி இந்திய அணிக்கு கிண்ணம் வென்று கொடுத்தார்.

இது குறித்து நியூஸிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் ஸ்டீபன் பிளெமிங் கூறுகையில், 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடரில் டோனியின் செயல்பாடு எப்படி இருந்ததோ அதை அப்படியே மற்ற அணித் தலைவர்களும்பின்பற்ற வேண்டும் கடந்த2011ஆம்ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் மும்பையில்இலங்கை அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் துடுப்பாட்டத்தில் அசத்திய டோனி, இலங்கை வெற்றிகரமாக எட்ட உதவினார்.

மேலும் நான் ஐ.பி. எல். தொடரில் இருந்த போது, இது முன்னிருந்து வழி நடத்துவதற்கான சரியான நேரம் என்று தன் உள்ளுணர்வு சொல்வதாக என்னிடம் தெரிவித்தார். டோனியிடம் அந்த தன்னம்பிக்கை இருந்ததால் தான், மற்ற வீரர்களுக்கும் உற்சாகம் அளிக்க முடிந்தது. இந்த உலகக் கிண்ண தொடரில் கடினமான தருணங்கள் வரலாம் ஆனால் வெற்றி பெற வேண்டும் என்பதே முக்கியமாக கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வேலை ஆள்கள் தேவை**

யாழ். நகரில் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள புடைவை வியாபார நிலையத்துக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை (ஆண்கள்) முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0718679111, 0212228383

**ஜெ.சி.பி. வாடகைக்கு விடப்படும்**

புதிய, நவீன வேகமான J.C.B வாடகைக்கு விடப்படும். மணித்தியாலயத்துக்கு 3000 ரூபா. போக்குவரத்துக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்பு:

077 2233391 லைரா கொம் நெற், ஆவரங்கால்.

077 8448775 துர்க்கா கிரேசர், புத்தூர் கிழக்கு, புத்தூர்.

**பகுதிநேர மேற்பார்வையாளர் தேவை**

வீட்டுத்தோட்ட பராமரிப்புக்கு தகுதியுடைய மேற்பார்வையாளர் தேவை.

★ வேலை நேரம் வசதிக்கேற்ப.
★ தோட்ட பராமரிப்பில் முன்னனுபவம் தேவை.
★ விவசாயம் தொடர்பான கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

392, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
021 5677608

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

அரச தனியார் உத்தியோகத்தர்கள், வெளிநாடுசெல்வோர் தொழில்தேடுவோர், வீட்டுப்பெண்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 07.02.2015
பிரிவு 1. காலை 08.00-10.00 பிரிவு 2.மாலை 03.00 - 05.00

அடிப்படை ஆங்கிலம்

எமது அடிப்படை ஆங்கிலப் பயிற்சிநெறியில் ஆங்கிலம் எழுத மற்றும் வாசிக்கத்தெரியாதவர்கள் மட்டுமே இணையமுடியும்.
பதிவு செய்யவேண்டிய திகதி :-07.02.2015
வாரநாள் பிரிவுகள் (திங்கள்,புதன்) ஆரம்பம் :- 09.02.2015
பிரிவு 1. காலை 08-10 பிரிவு 2. 10-12 பிரிவு 3. 3-5

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

**புலமை கல்வி நிறுவனம்**
சோதி வேம்படி லேன், மானிப்பாய்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
தரம் 4 (பிரிவு -II), தரம் - 5 (பிரிவு -III) மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம்.
ஆசிரியர்:- திரு. க. கலாமோகன் (B.A, Dip.in Teach..)
காலம்:- 03.02.2015 செவ்வாய்க்கிழமை : தரம் 4 (பிரிவு -II) - மாலை 5.00, தரம் 5 (பிரிவு -III), மாலை 5.30
குறிப்பு: தனிப்பட்ட பரீட்சை அனுமதிகளும் உண்டு.
தொடர்புகளுக்கு: 077 212 1915, 0777 607071.
சோதிவேம்படிலேன், சாயி பாடசாலை அருகில், மானிப்பாய்.

# பெடரரின் சாதனையை முறியடித்த ஜெகோவிச்

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் செர்பியாவின் நோவக் ஜெகோவிச் பட்டம் வென்றார்.

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவிற்கான இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் உலகின் முதல் நிலை வீரரான நோவக் ஜெகோவிச் ஆறாம் நிலை வீரரான ஆண்டி முர்ரே பலப்பரீட்சை நடத்தினார்கள்.

இருவரும் முன்னணி வீரர்கள் என்பதால் முதல் செட்டை கைப்பற்ற இருவரும் கடுமையாகப் போராடினார்கள். இதனால் முதல் செட் பிரேக்கர் வரை சென்றது. இறுதியில் ஜெகோவிச் 7-6 (5) என்ற கணக்கில் கைப்பற்றினார்.

இதனால் 2ஆவது செட்டில் முர்ரே ஆக்ரோஷமாக விளையாடினார். இதனால் இந்த செட்டும் டை பிரேக்கர் வரை சென்றது. இதில் முர்ரே 7(4)-6 எனக் கைப்பற்றினார்.

3ஆவது செட்டை ஜெகோவிச் 6-3 என எளிதில் கைப்பற்றினார். முதல் 3 செட்டில் 2-1 ஜெகோவிச் முன்னிலை பெற்றதால் 4ஆவது செட்டை கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வெல்ல வேண்டும் என்று அவர் ஆக்ரோஷமாக விளையாடினார்.

இதற்கு அண்டி முர்ரேவால் எதிர் தாக்குதல்தொடுக்க முடியவில்லை. அதனால் ஜெகோவிச் இந்த செட்டை 6-0 என எளிதில் வென்று 3-1 என ஆஸ்திரேலிய கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம், நான்கு தடவைகள் ஆஸ்திரேலிய பகிரங்க சுற்றுத்தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த ரொஜர் பெடரர், அன்ட்ரே அகாஸி ஆகியோரது சாதனைகளை ஜெகோவிச் முறியடித்துள்ளார்.

மொத்தமாக நான்கு தடவைகள் ஆஸ்திரேலிய பகிரங்க சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டிகளுக்குத் தெரிவாகி, வெற்றி வாய்ப்பைத் தவறவிட்ட வீரராக அன்டி முர்ரே மாறியுள்ளார்.

(த)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.